सुतधर्म जयकीर्ति दृढगात्र! ।
सुख सन्तोष विद्याबुद्धि कविता ॥
भूत दयाकरून मज वर दे ।
भूरि विघ्नदूरीकरि एकदन्त! ॥ दयाकरि ॥ ३ ॥

नागयज्ञोपवीतधर विभो! ।
त्यागसुत! तिरुवळंजुळिवास! सदा ॥
भोगभाग्य निरन्तर दे मज ।
योग विशेष दे हेरम्ब देव ॥ दयाकरि ॥ ४ ॥

सू० — फणेरीति बहुभाव अनुक्रमलीला समर्पिल्यानन्तर एकशब्दप्रासभिन्नार्थलीला समर्पिलि ते कैसी ।

एकशब्दप्रासभिन्नार्थलीला

* अम्ब! रक्षि सतत मज अमृतकटाक्षि!
शम्बरारि जीवनदायिनि! सदये राजराजेश्वरि! ॥ पल्लवि ॥

---

* अम्बराक्षि! सतत मव ?

अब्जमुखभासुरे अब्जकुटिलभ्रुयुगळे ।
अब्जचञ्चलनेत्रि ! अब्जकण्ठशोभिते ॥
अब्जकोशघनस्तनि अब्जवल्लिरोमलतिके ।
अब्जारुणतनुकान्ते अब्जाशुमधुरवाणि ! दे ॥ अम्ब ॥ १ ॥

अब्जासनापूजिते अब्जलोचनसोदरि !
अब्जगतिगामिनि अब्जहारधारिणि ! ॥
अब्जतरुउदारे अब्जषड्रसधात्रि !
अब्जभूषाभूषिते अब्जवाससहिते ये ॥ अम्ब ॥ २ ॥

अब्जजवाहरिवाहने अब्जमणितरळे ।
अब्जतपनाप्रतापे अब्जपानप्रमत्ते ॥
अब्जकुशले नृत्यलोले अब्जा इव आरोग्यप्रदे
अब्जहार त्यागेश दयिते अब्जमित्रान्वय शाहनुते ॥ अम्ब ॥ ३ ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि ! इपुडु जेप्पिनमाट येमय्य ।

गुरु — विनर शिष्य ! कवि एकशब्दप्रासमिन्नार्थम्बुगादेवीस्तोत्रम्बुगनु रचिंचेनु ॥

जनचर्यलीला

पूरिभिरागम्] [अटताळम्

वेडेजने पहा वेशमसाटि भाण्डतात ॥ वेडे ॥ पल्लवि ॥

सकळ कर्माधार अकळंक घर ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ १ ॥

जा घरि हे बोलतो चालतो त्या घगास ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ २ ॥

धन सुख संपत्ति विद्या स्थान घर ।
अस्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ३ ॥

पुत्रमित्रकळत्रादि भोग घर ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ४ ॥

कामक्रोधलोभादि कारण पर ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ५ ॥

जयप्रतापकीर्तिगुण साधन घर ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ६ ॥

आहार व्यवहार स्वम आधार घर
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ७ ॥

विवेक विनयज्ञान विभूति घर ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ८ ॥

त्यागेश भजन सेवा निधानदेवा घर ।
स्थिरता नेणता शिवशिवा हे पहा ॥ वेडे ॥ ९ ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि! इप्पुडु जेप्पिनवाट येमय्य!

गुरुः — विनर शिष्य! कवि जनुलयोक्कलीला ओक पदम्बुग कल्पिंचेनु ।

सू० — एणेरीति जनचर्यलीला समर्पिल्यानन्तर नीरधरलीला समर्पिलि ते कैसी ॥

नीरधरलीलापदम् (निरोष्ट्यम्)

सरस दयाकर शशिशेखर ॥ सरस ॥

घर सहजचाल करधृत कनकाचल
शीतकर दिनकर झाला शीतळानिल अनल झाला
रतिनायक घेतला रात्रि दिननिद्र नये नेत्राला ॥ सरस ॥ १ ॥

कनककलश स्तनाधार घनश्लेषकर सादर
दिनदिन गण्डस्थलि क्षतकर दीनदयाळ चित्तजहर! ॥ सरस ॥ २ ॥

सतत आह्लादकर सदय अखिलार्तिहर!
हितरतिलीलाकार इनतेजु त्यागेशधीर ॥ सरस ॥ ३ ॥

ग ग गा रि ग द दा दा। द स दा दा द।
स द दा गा रि ग रि स। स सा स स सा॥

री स ग री स सा सा । स ग रि स ।
स स दा । दा दा गा रि ग रि सा ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि । इप्पुडु जेप्पिनमाट येमय्य ॥

गुरुः — विनर शिष्य ! कवि नीरधरलीला ओक पदम्बुग कल्पिचेनु ॥

सू० — एणेरीति नीरधरलीला समर्पिल्यानन्तर कवीने लुप्तपदवर्णनलीला समर्पिलि ते कैसी ।

॥ लुप्तपदवर्णनलीला ॥

गौरीरागम्] [अटताळम्

तरुणिसौन्दर्य कायवर्णू मी तरुणेन्दुशेखर !
अरुणाचलेश ! तुज योग्य आहे सतत ॥ तरुणि पल्लवी ॥

असम तामरस समान-अंगनेचें वदन
असम तामरस समान अंगनेचें रदन ॥ तरुणि ॥ १ ॥

विशदशारद समान-विशालाक्षि नख भास
विशदशारद समान-विशालाक्षि दश नासा वास । तरुणि ॥ २ ॥

नून नूतन गौरीते-नूना नूतन गौरीते
सून सुकुमार शरीरवतीसे-सून सुकुमारवतिकरि त्यागेश ॥ तरुणि ॥ ३ ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि ! इप्पुडु जेप्पिनमाट येमय्य !

गुरुः — विनर शिष्य ! कवि लुप्ताक्षरम्बुगा ओक पदम्बु कल्पिचेनु ॥

सू० — एणेरीति लुप्तपदवर्णनलीला समर्पिल्यानन्तर मणिप्रवाळलीला समर्पिलातो कैसा ॥

नायकिकानडा रागम] ॥ मणिप्रवाळलीला ॥ [आटताळम्

(आन्ध्रभाषा, द्राविडभाषा आणी मराटीभाषा)

वारुम् दयतो आजि-शेरुम् बागुग शिवशंकर ! ॥ पल्लवि ॥

पावि तेन्डल् वच्चि बाधितो-पकक्कारकुयिल् इपुडु कूजितो ॥
आवि हेचेनु तुजवरि-अन्दमदिच्चि चेय निवारि ॥ वारुम् ॥ १ ॥

कन्नेल् विन्लुयेश पहा–कण्णोरकं रादु पाहा ॥
एन्नेरम् नापै दया पहा-इनिपोरुक झाल वृषवाह! ॥ वारुम् ॥ २ ॥

इदळै नोक्कु आदारे–एन्नुडेय चन्नुलपै नखरेख करा ॥
मदिमुखत्तै मुद्दाडु सरसा–मकिलन्दु आपनि कर त्यागेश! ॥ वारुम् ॥ ३ ॥

शिष्यः — विनवय्य ! गुरुस्वामि इप्पुडु जेप्पिनमाट येमय्य!

गुरुः— विनर शिष्य! कवि मूडुभाषलतोनु मणिप्रवाळम्बुगा ओक पदम्बु कल्पिञ्चेनु ॥

सू० — एणेरीति मणिप्रवाळलीला समर्पिल्यानन्तर विपरीतप्रश्नलीला समर्पिलिते कैसी ॥

अटाणारागम्] ॥ विपरीतप्रश्नलीला ॥ [अटताळम्

विपरीत पहा आश्चर्य ऐसे ।
विना माता यति बाल झाले ॥

जनन होतांच त्यानें अग्रज संहारिले ।
अनुचर सहित बहिणि तिघेजनि ॥

आदि संहारिले त्यानें बाले अन्नपाणि नाहि ॥ २ ॥

भोग घर टाकून लग्न पुरुषाचि केलें त्याणसच्चिदानन्द! ॥ ३ ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि इप्पुडु जेप्पिन येमय्य!

गुरुः — विनर शिष्य! कवि अध्यात्म अनुभवमुगा ओक पदम्बु कल्पिञ्चेनु ॥

सू० — एणेरीति विपरीतप्रश्नलीला समर्पिल्यानन्तर चित्रफळ प्रधानलीलादरु समर्पिलातो कैसा ॥

भैरविरागम्] ॥ चित्रफळप्रधानलीला ॥ [एकताळम्

चित्रफळ देताति विचित्र पहा
मित्रचन्द्राग्निलोचन ॥
सशाघ सन्तान सरसफळ येक देतो ।
विशाखयुक्त वर विविधजन इच्छितो ॥ चित्र ॥ १ ॥

सपर्णाकल्पक सारफळ येकदेतो ।
अपर्णा सहित हो अतिशयभक्ताभीष्ट! चित्र ॥ २ ॥

समूळ सुद्रुम सन्नतामित फळ देतो ।
विमल स्थाणु त्यागेश! विश्वातीत विशेषदात॥ चित्र ॥ ३॥

सू० — एणेरीति चित्रफळप्रधानदरुलीला समर्पिल्यानन्तर नवग्रहसमदरुलीला समर्पिलातो कैसा ॥

मुखारिरागम्] ॥ नवग्रहसमदरुलिला ॥ [आदिताळम्

नवग्रहमये कन्येवरि नाथा अनुग्रहकरि ।
रविकोटिसमतेज! रङ्गनायकस्वामि! ॥ नवग्रह ॥ १ ॥

भास्वच्छरीरकान्तीचि परिपूर्णचन्द्रवदन! ।
शाश्वद्भौम घनजघन सौम्यगुणयुक्ता हो! ॥ नवग्रह ॥ २ ॥

गुरुस्तन युगळाते सरसकाव्य निपुणाते
वर मन्दयानाते वामाक्षी राहु नेणते ॥ नवग्रह ॥ ३ ॥

त्यागेशाम श्रीरङ्ग देव सदायान्तरङ्ग ।
भागकरि केतु रोमावळीसि मुग्धाक्षी वरकन्येसि ॥ नवग्रह ॥ ४ ॥

सू० — एणेरीति नवग्रहमयलीलादरु समर्पिल्यानन्तर चतुरश्रजाति दिग्गजसंख्या ताळानुवर्तित प्रबन्धलीलादरु समर्पिलातो कैसा ॥

अष्टदिग्गजालु] [चतुरश्रजाति

हरवृषभतुरङ्गलीला-
आनन्दविनोद-आदित्यागेश! ॥

देवराजचूडामणि-
देवतासार्वभौम शिव! ।
देवर मज दयेनें आजि-
निवारि मदन जनित भय ॥ १ ॥

वीरविक्रम अन्तक दमन-
विष्णुसुरेन्द्र ब्रह्मार्चित ।

धीर विरहबाध निवारि-
दिव्य कलहंसनाद दयाकरि ॥ २ ॥

अनङ्ग केळी सुखकरि-
त्रिपुरारि अधरपानकरि स्तनधरि ।
घन जयश्री कळदे त्यागे-
दयाळ एकराज तनय शाहेन्द्रनुत ॥ ३ ॥

सू० — एणेरीति चतुरश्रजाति दिग्गजसंख्याताळानुवर्तित प्रबन्धलीलादरु समर्पिल्यानन्तर काळऋतु बालऋतु समर्पिलातो कैसा ॥

नादरामक्रियारागम्] ॥ काळऋतु बालऋतुवर्णनलीला ॥ [अटताळम्

सन्तोषवार्ता सांगु चला आतां—व
सन्तऋतुमति झालि बाळा ॥ सन्तोष ॥ पल्लवि ॥

कमळ विकासाले कमनीय रज आलें
अमळ अळि पंक्ति अतिशयिलें
सुमनगुच्छ आले सुन्दरारुणपल्लव झालें
विमळ पुंस्कोकिळ विनवूं चला ॥ सन्तोष ॥ १ ॥

वर कुमुद विकासलीं व्रतती विशाल झालीं
सरस चन्द्रचन्द्रिका सामोद झाला
वर सैकत ढीग शोभलें वर वापी मध्ये शोभली
परम कदली वर्धिल्या पति शुकाशि ॥ सन्तोष ॥ २ ॥

घनशाखानिबिड झाला घनतर शोभ आली ।
वन काम फलित झाले वाङ्मधू आले ।
मन सन्तोषले त्याग कनक वसन्त सारे ।
दिन सुमुहूर्तसुख अनुभवहूनें ॥ सन्तोष ॥ ३ ॥

सू० — ई वितम्बुन कालऋतु बालऋतु लीलसमर्पिंचिनया तदनन्तरम्बुन मुक्तपदग्रस्तलील समर्पिंचेनट येट्टुवलेनु ॥

प्रातः स्मरामि पुरदैत्यविनाशयन्तं
पञ्चाननं गुहगजाननलालयन्तम् ।
भूतेशमंघ्रिलवताडितदुष्कृतान्तं
भूभृन्निशान्तमतिशान्तविकाशयन्तम् ॥

इति श्रीमत्तराहुत्तमस्तकस्थगिनहाटककिरीटकोटिरत्नप्रभानीराजितचरणनीरजैकराजदीपाम्बिका-
गर्भ शुक्तिमुक्ताफल श्रीशाहमहाराज विरचित त्यागविनोदचित्रप्रबन्धे तृतीयाङ्कः समाप्तः ॥

॥ त्यागत्रिलोचनार्पणमस्तु ॥

अथ चतुर्थोऽङ्कः ॥

रागम्]   ॥ मुक्तापदग्रस्तलीला ॥   [ताळम्

चेतश्चिन्तय सिद्धिबुद्धि समेतं ।
दातारमखिलविद्यानां-दयाळुं विघ्नराजम् ॥   ॥ पल्लवि ॥

शरणागतार्तिहरं शशिकळाशेखरं ।
करिवरवदनं वरदं भयहरम् ॥ १ ॥

सकलविघ्नतिमिरशमनचण्डकरं ।
प्रकटितयशोभरं पर्वतकन्याकुमारम् ॥ २ ॥

विद्याबुद्धिसिद्धये विनुतनयप्राप्तये ।
हृद्यश्रेयःप्राप्तये हेरम्बं त्यागकुमारम् ॥ ३ ॥

सू० — एणेरीति मुक्तपदग्रस्तलीला समर्पिंच्यानन्तर कवीने अन्तर्लापिकलीला समर्पिलिते कैसी ॥

सुरटिरागम्]   ॥ अन्तर्लापिकलीला ॥   [अटताळम्

अध्याक्षर घटित वेद आनन्दकरून अह्मा ॥   आनन्द ॥ पल्लवि ॥

त्यास जर भय नाहि त्यास जनन मरणनाहि ॥
त्यास पाप-पुण्य नाहि त्यास रोग दुःख नाहि ॥

गेय सर्व देवतो गेय वेद वाक्यतो
गेय पुराण इतिहासतो गेय भक्त जनितो ॥

शरणागतत्राणतो शमितरिपुजाळतो
शरणु देवमुनितो शरणु शाहेन्द्र कुलदैवतो ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि ! इप्पुडु जेप्पिनमाट येमय्य !

गुरुः — विनर शिष्य ! कवि अन्तर्लापिक अपुरूपम्बुक ओक पदम्बु कल्पिंचेनु ॥

सू० — एणेरीति अन्तर्लापिकलीला दरु समर्पिल्यानन्तर अवयव द्वादशराशि बालवर्णन लीलादरु समर्पिलिते कैसी ॥

रागम् १] ॥ अवयवद्वादशराशि बालवर्णनलीलादरु ॥ [तालम् १

बाराराशियुक्त बालेवरि
परिपूर्णदयाकर स्वामि ।
धीरब्रह्मादीश देवत्रयम्बकनाथ ॥ ॥ पल्लवि ॥

मेषोन्मेष विलम्बन साहें ।
मी सांगतों राशि तिचि वृषभ ॥

भूषालंकृत स्तनद्वय कुम्भ ।
भूरितिचें नयनयुग(ळ)मीन ॥ बारा ॥ १ ॥

वरभ्रूयुग(ळ)तिचें धनुष्य ।
सरस कपोळि कस्तूरि मकर ॥

तरुणि तनुमध्ये सिंह ।
दर्शनीय घोंटे कर्काटक ॥ बारा ॥ २ ॥

सरस सुन्दर कन्यास ।
जगत्रय तुला नाहि ईश ॥

विरह वेदनातीस वृश्चिक ।
वर त्याग त्रयम्बकेश मिथुन होय तीस ॥ बारा ॥ ३ ॥

सू० — एणेरीति अवयवद्वादशराशि बालवर्णनलीलादरु समर्पिल्यानन्तर बहिर्लापिकलीला समर्पिलि ते कैसी ॥

रेवगुप्तिरागम्] ॥ बहिर्लापिकलीला ॥ [अटताळम्

उमान माझे सांगाहो-उत्तरोत्तर बुद्धिवन्त हो

सरस नेत्र सर्वाङ्गि-सहसइन्द्र नव्हें ।
वर मर्ममेदितो-पराशर नव्हें ॥ १ ॥

त्रिनेत्रधारि परन्तु-त्रिपुरारि नव्हें ।
जनास सकळ गिळितां-चण्डराक्षस नव्हें ॥ २ ॥

चतुरश्रिष्टि करितो-चतुर्मुख नव्हे ।
हाति शंखचक्र वाहतो-अम्बुजाक्ष नव्हे ॥ ३ ॥

शरीरिं भूति धरितो शिवभक्त नव्हे ।
सरसिज वास करितो-जलधिकन्य नव्हे ॥ ४ ॥

ताप निश्शेषकरिते-चन्दन नव्हे ।
कांप फार करिते-घन हिमा नव्हे ॥ ५ ॥

भोग शरीर टाकितो-मुक्त नव्हे ।
राग विविध गातो परन्तु गायक नव्हे ॥ ६ ॥

विविध औषध देतो-विख्यात वैद्य नव्हे ।
दिवारात्र संचारकरितो दिनकर चन्द्र नव्हे ॥ ७ ॥

काजळ धरिति परन्तु-कामिनि नव्हे ।
सांजे परपुरुष भोगितो-जारिणि नव्हे ॥ ८ ॥

सकल जनास बहुमान देतो-सार्वभोम नव्हे ।
अकळङ्क फळ देतो-हर त्यागेश नव्हे ॥ ९ ॥

शिष्यः — विनवय्य गुरुस्वामि! इप्पुडु जेप्पिनमाट येमय्य!

गुरु — विनर शिष्य! कवि बहिर्लापिक अपुरूपम्बुगापदम्बु कल्पिचेनु ॥

सू० — एणेरीति बहिर्लापिकलीलादरु समर्पिल्यानन्तर कुसुमसुकुमाराङ्गिलीला समर्पिलिते कैसी ॥

कल्याणिरागम्] ॥ कुसुमसुकुमाराङ्गिलीला ॥ [आदिताळम्

कुसुमसुकुमाराङ्गीस कुमारवति करि त्यागेश! ॥ पल्लवि ॥ कुसुम ॥

कमलमुख भासुरर! कमनीय नीलोत्पल नेत्र! ।
अमलवर तिळनास! अति सुन्दर कुन्द दन्त! ॥ १ ॥ ॥ कुसुम ॥

जपारुण धरशोभित! जाई गुच्छ स्तनयुगळ! ।
सपदि चम्पकांगुळि जग मान्य केतक गौराङ्गि ॥ २ ॥ ॥ कुसुम ॥

शेवन्ति धवळ मन्दहास! शिरसा मृदुळ शरीर! ।
देव कनकवसन्त! त्याग दे बकुळग्रन्थिन् रति ॥ ३ ॥ ॥ कुसुम ॥

सू० — एणेरीति कुसुमसुकुमाराङ्गिलीलादरु समर्पिल्यानन्तर द्विप्रासरतिरणरङ्ग समदरुलीला समर्पिलातो कैसा ॥

पन्तुवराळिरागम्] ॥ द्विप्रासरतिरणरङ्ग समदरुलीला ॥ [पञ्चघातमटयम्

मदन घनोज्वल कदन निपुण दया
सदन नारीमणि हे ॥

रदन जितकुन्द सु-वदनारविन्द दिन
मदन जीवन दा-मदनारी प्रमदा ॥ ॥ ध्रु ॥

सुगळ रव मेरी भ्रू युगळ धनुर्धरु-नी ।
ळगळ तनुकटाक्ष शुगळाक्ष करून मग ॥

सगळें धैर्यजिरे डगळा भेदून भुज ।
निगळें बांदून जिंकून वेगळें चुम्बन दिल्हे ॥ मदन ॥ १ ॥

शरजन्नता शीत धरजा दैत्यान्तक ।
वरजा सकळ निर्जर जन सन्नुता ॥

करजायुधे काळ पुरजाई सक्षत करून ।
वरजय पाहून धरजा सुधा दिल्हे ॥ मदन ॥ २ ॥

अळि कान्ति सम चूळिका पृथुकुच ।
पाळि कन्दुक कुसुम मालिका हलतसतां ॥

बाळिका त्याग कपाळिकान्त वक्ष!
तूळिकावरि नाचून कामकेळिका सुख दिल्हे ॥ मदन ॥ ३ ॥

உ

நண்ணூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில்

விறலி விடு தூது.

—— x ——

காப்பு

மாமேவு நண்ணூர் வந்தசங்க மேஸ்பரன்மேல்
தேமேவும் சொல்விறலி செந்தமிழ்க்கு—நேமகரம்
ஐந்துளபத் தானைமுக னம்பிகைபெற் றானைநறும்
பைந்துளபத் தானைநினைப் பாம்.

நூல்

பொன்மா தருமைமிஞ்சு பூமாத ருட்குலவு
தென்மா தவன்மகிமை சீராமன்—நன்னயமாய் 1

அன்னாள் படியளந்த தல்லாம லெவ்வுயிர்க்கும்
இன்னாள் படியளக்கு மெய்ப்பிரான் — முன்னாளில் 2

மண்ணையுண்ட வாயன் வருவாயர் ஆயர்மனை
வெண்ணெயுண்ட வாயன் மிகுநேயன்—விண்ணுலகோர் 3

ஆயிரங் கண்ணன்முதல் வானவர்கள் போற்றமன
தாயிரங் கண்ணன்முத லாதியெனும்—தாயகியாம் 4

சங்கரிக்குச் சகோதரனும் தண்ணதிக் கராவினைநீ
சங்கரித்து மோட்சந் தரவந்தோன் — செங்கரத்தில் 5

சங்கத்தான் நல்லபிற சங்கத்தான் வாலிதனை
சங்கத்தான் பாதத் தனுராமன் — இங்கிதஞ்சேர் 6

ஓரதத்தைப் பார்க்குண் ணூர்க்கூர்ந்து பெருமைபோய்
பாரதத்தைச் செய்யும் பரந்தாமன் — தாரணியில் 7

ஐவரைச்சத் திரமதாய்ப் பிடித்தோன் பாண்டவர்செய்
ஐவரையுங் காக்கு மருள்வரையாண் — மைபடர்ந்த 8

கம்பத்தா னைத்தடிந்த கைம்மதத்தான் கன்னமும் பொற்
கம்பத்தான் றூன்றேணிப் பொற்கம்பத்தான் — செம்புனிதக் 9

கஞ்சத்தா னஞ்சனத்தான் கண்பசந்த செண்பகத்தான்
கஞ்சத்தா னேசெகுத்த காகுத்தன் — தஞ்சமென 10

வந்திருக்கும் வேளை வரந்தருவான் அன்புமக
வந்திருக்கும் வேளையிது வாயளித்தோன் — சுந்தரஞ்சேர் 11

சாரங்கத் தைக்கொணர்ந்து தன்னங்கத் தைத்தெளிந்து
சாரங்கத் தைத்தெளிந்த தம்பிரான் — ஓர்கதையில் 12

மங்கைக் கதித்தகிரி வரந்தருவர் நன்புமிக
மங்கைக் கதித்தகிரி வைத்திருப்போன் — இங்கிதமாய் 13

முன்பு வனங்கடந்த மூர்த்தியுந் திரண்டபயன்
தென்பு வனங்கடந்த சீருலகில் — இன்பமுடன் 14

வண்டிசைக்குங் கோகுலத்தின் வாயசைக்கும் நாரதனுர்
பண்டிசைக்கும் வீணை பயிலிசைக்கும் — மண்டலத்தில் 15

எண்டிசைக்கும் சங்கீதம் ஏழிசைக்கும் நுட்பமெலாம்
கண்டிசைக்கும் வேதொளிக்கும் காரிகையே — விண்டக்கேள் 16

தித்திக்கு மத்தளமும் சேர்ந்துவரத் தித்தியிசை
தித்திக்கச் சொல்லும் செழுங்குயிலே — கைத்தாளம் 17

காதிமிதி யைப்பளித்து தத்திமிதி தித்திமிதி
தாதிமிதி யென்றுரைக்கும் தையலரே — தோதிமிதி 18

தொந்தமெனத் தாழ்ந்து டங்கமயல் கொண்டவர்க்குத்
தொந்தமெனத் தென்புசொலுந் தோகையரே — வந்து 19

கலியாணி யென்றுசொல்லிக் காமுறுவர்க் காக
கலியாணி யைப்படிக்குங் காமி — கெலிவாய 20

சுருட்டிராகஞ் சொல்லித் தூயிளைஞோர் வீசச்
சுருட்டி மயக்குவிக்குங் தோகாய் — மருட்பொருந்தும் 21

மாஞ்சிராகப் புவியில் வாலிபர்கள் மோகிக்க
மாஞ்சிராகம் பயிலும் மாதரசே — காஞ்சனமுள் 22

ளாரவிமானம் பொருந்தி ஆவல்கொண்டு ஏவல்செய்ய
ஆரபிராகம் பயிலும் ஆயிழையே — பேரவா 23

குரிஞ்சி நேகத்தில் குருஞ்சிரிப்பில் நாட்டி
குரிஞ்சி ராகம்பயிலும் கோதாய் — பரிந்தும 24

தாகிரியாங் கொங்கைமத யானைபிடிக்க வேண்டி
ஆகிரிரா கம்புகலும் அன்னமே — லாகிரிவா 25

காம்பூதி தன்னிலுள்ள காமுறுவ ரோடிவரக்
காம்போதி பாடிவரும் கன்னியரே — ஆம்பொன் 26

மணிரங்குக் காசைகொண்டு மாப்பிள்ளை மார்கெஞ்ச
மணிரங்கு தானுரைத்த மாதே — கனிசம் 27

அடாணி யெனவைது மனதான் மிகக்கொள்ள
அடாணி ராகத்தை யணிக்கு — விடாமலுந்தான் 28

நாகவரா ளிப்பருவ நாயகமார் தான்மயங்க
நாகவரா ளிப்பதஞ்சொல் நாரியரே — யேகசுர 29

வ(ர்)ன்னத்தைச் சொல்லியந்த மாமுனியோ கீசரையொவ்
வ(ர்)ன்னத்தி னால்மயக்கும் மாமணியே — பின்னுமந்த 30

நாட்டைவிலை யாய்மதிக்கும் ராகத்தி லேச்சான
நாட்டைரா கம்பயிலும் நாரியரே — ரூட்டி 31

வயிரவிசே ஷங்களெல்லாம் மாற்றிவைக்கச் செய்யும்
வயிரவிரா கம்பகரு மாதே — செய்நீயும் 32

மோகனத்தை யேபலிக்கும் மோகமுற்று மேமயக்கி
மோகனத்தை யேபடிக்கும் மொய்குழலே — வாகாகத் 33

தோடிரா கத்தைத் துடங்கினால் யாருமகிழ்ந்
தோடிவரப் பாடிவரும் ஒண்டொடியீர் — நாடிவந்து 34

கண்டாரா கங்குளிரக் காதுக் கினிப்போகக்
கண்டாரா கம்பயிலுங் காரிகையே — கொண்டாடி 35

சுரமண் டலத்தோர் சுதிக்கிணை யாய்க்கூடிச்
சுரமண் டலப்பயிலுந் தோகாய் — யிரவலர்கள் 36

சாரங் கிருவித்துத் தம்பூரு வீணையொடு
சாரங்கி வாசிக்குந் தார்குழலாய் — பாருலகம் 37

விண்ணாணக் காமுறுவர் மேலான சிந்துகவி
விண்ணாகச் சொல்லும் விறலியைப் — பண்ணோர்ந்து 38

வித்தாரச் செந்தமிழின் மின்சாரங் கண்டதிலே
வித்தாரஞ் சொல்லும் விறலியை — முத்தாக 39

உன்பாட்டின் கேள்வி உகந்து களிகூர்ந்தேன்
என்பாட்டைச் சற்றே யியம்பக்கேள் — தென்பாக 40

ஒள்ளியராய்த் தெள்ளியராய் உண்டாகி லூழிவினை
மெள்ள நுழையுமென விதிமுன் — உள்ளவர்கள் 41

சொன்னமொழி தப்பாமல் தோகையரே என் மனைவி
தன்னைவி ரோதித்துத் தலந்தோறும் — என்ன செய்வேன் 42

சுற்றித் திரிந்ததுவும் துய்யபழ னாபுரியில்
நற்றியொரு வேசிதனை நாடியதும் — பெற்றதெந்தன் 43

கைட்பொருளெல் லாந்தோற்று காலைதனிற் ருய்க்கிழவி
மற்பிடித்துச் சண்டையென்மேல் வாங்கினதும் — அப்பிரமோ 44

மண்ணத்தி லேற்றினதும் வாய்வீறு பேசினதும்
புண்னோக்கும் ஊரைவிட்டுப் போவெனவே — அண்ணைக்கே 45

ஆட்டிவைத்த சித்திரக்கூத் தத்தனையும் ஏதுசொல்வேன்
கேட்டருளாய் பச்சைக் கிளிமொழியே — வாட்டமுடன் 46

அவ்வூரை விட்டகன்றேன் அங்க மயலிருக்க
யெவ்வூரி லீகையுண்டென் றேகினேன் — செவ்வைவந்து 47

செந்திரு மின்வாழுந் திருவானி யம்பதியில்
எந்தையென வந்தசங்க மேஸ்பரனார் — முந்துகொலுத் 48

தன்னிலவர் மேல்விறலி சாற்றியரங் கேற்றுதமிழ்
சொன்னவுடன் பாதந் தொழுதுநின்றேன் — பொன்னையள்ளித் 49

தந்தார் பவக்கடலைத் தள்ளினார் என்மனைக்கு
வந்தென் மனைவியுடன் வாழ்ந்ததுவும் — சுந்தரமே 50

இன்னவகை இன்னவிதம் என்றே யுரைத்திடுவேன்
பொன்னனையீர் சற்றே புகலக்கேள் — உன்னிதஞ்சேர் 51

மேருகிரி யார்குமருள் மீறுகயி லாசகிரி
நேரனைய வேதகிரி நீழ்மலையான் — பாருமினி 52

தங்கமுக மானகழுத் தம்மைபொன்னி வாணியென
சங்கமுக மாயுதித்த தண்ணதியான் — இங்கிதஞ்சேர் 53

ஆட்டினான் கூஷ்த்திரவிளை யாட்டினான் பேரின்பம்
காட்டி வடகரைநன் னாடுடையான் — தாட்டிகம் 54

ஓதனத்தான் நத்தனத்தான் உற்பனத்தான் அக்குடத்தான்
நாதனத்தான் போற்றியநண் ணூரூரான் — மீதினிலே 55

நாகா பரணமொடு நல்லவெண்ணீ றுந்துவள
வாகாய்ப் புனைந்தகொன்றை மாலிகையான் — லோகமதில் 56

தந்திரமாய்ப் பல்லுயிரைத் தற்காக்க வேணுமென்று
வந்த ரிஷபமெனும் வான்பரியான் — வந்தனைசெய் 57

தொண்டர் மனத்திருளைத் தூள்படுத்தி நால்வேதங்
கொண்டகற்று மெஞ்ஞானக் குஞ்சரத்தான் — அண்டிவந்து 58

அண்டமெங்குங் காக்க அழகுவிரு தாய்க்கட்டி
கொண்ட இடபக் கொடியுடையான் — அண்டமதை 59

பத்தமொடு மால்க்குப் பரிவு முடி சூடுதற்கு
முத்தமதி லேலொளிக்கு மும்முரசத்தான் — இத்தலத்தில் 60

தூண்மையில்லா சிருட்டித்திதி சங்கார முத்தொழிற்கு
ஆண்மைதன தாய்நடந்த ஆண்மையினான் — கேண்மையில்லா 61

முண்டகத்தா னுகவந்த மோதகத்தா னைச்சிரித்து
முண்டகத்தா னற்சிரத்தை நின்றடித்தோன் — பண்டிலுள 62

கங்கையான் போற்றடிக்கி கங்கையா னேறியணி
கங்கையாள் காட்சிதரும் கர்த்தாவாம் — இங்கிதஞ்சேர் 63

மண்டலத்தா னுனகடல் வந்தவிட மோதொண்டை
மண்டலத்தா னுகவந்த வள்ளலெனும் — கொண்ட 64

முதலியார் பக்கலிலு முன்வருவ ராதி
முதலிய ராய்வந்த மூர்த்தி — நிதநிதம்விந் 65

தையலுக்கு ராசனே சாற்றுமிரு பத்தேழு
தையலுள சோமன் றனைத்தரித்து — மெய்யதனில் 66

வெள்ளெலும்பும் பாம்பு மினுமனேக மூவேழு
வள்ளலும் பரும்பரவி வாழ்த்திநிற்க — துள்ளிச் 67

சிறுகால்ச் சிலம்புகொஞ்சத் தெய்த்தாதா தாவெனவே
சிறுகால்ச் சிலம்பு முனிதேர்ந்து — முறைபணியக் 68

குன்றில் நடம்புரிந்த கூற்றை யுதைத்ததல்லால்
மன்றில் நடம்புரிந்த மாதேவன் — என்றுமிகச் 69

செவ்விதழி லம்பிகையை சீர்வாமந் தனில் வைத்தே
அவ்விதழி மாலை அணிபரமன் — இவ்வுலகில் 70

அஞ்சுதலை யானவருக் காறுதலை சொல்லிடுவான்
அஞ்சுதலை யான்சிரத்தில் ஆறணையும் — உஞ்சுதலை 71

சங்கத்தார் தங்களொடு சங்கித் தெதிராளி
சங்கத்தா ராழத் தமிழுரைத்தோன் — இங்கிதமாய் 72

அப்ப ருரைக்கும் அருமைத் தமிழ்க்கிரங்கி
அப்ப வரமருளும் அன்புடையோன் — ஒப்பிதமாய் 73

விந்தை திருவாரூர் வேசி மனையதனில்
சுந்திரர்க்கா கத்தூது சொல்லினின்றோன் — பைந்தமிழ்சேர் 74

மாணிக்க வாசகர்க்கு வந்துகையே டாய்க்கோவை
பூணிக்கை யாயெழுதும் பொற்கரத்தான் — மாணிக்க 75

மாமலையான் வெள்ளிமலையதிப னாடோறும்
மாமலையாய்ச் சித்தமுள்ள மாதேவன் — நேம 76

சிறுத்தொண்டன் பிள்ளைதனை செய்பசியி னாலே
அறுத்துண்டு மோட்சம் அருள்வோனே — கறைக்கண்டன் 77

மார்க்கண்டர்க் கென்றும் வயதுபதி னாறெனவே
தீர்க்கமாய் உரைத்த சீராளன் — வேர்க்காம்பின் 78

சேயுமாய் வந்தமுத்தன் செட்டி மகள்தனக்குத்
தாயுமாய் வந்துதவி தான்புரிவோன் — தாயகமாய் 79

வரிவரியாய்த் தானிருக்கும் வண்ணமுள்ள கானின்
நரிபரியாய்ச் செய்தருளு நம்பன் — தூய 80

காணா தடிமுடியான் காமாரி யஞ்செழுத்தை
ஊணா தடியவர்பால் உற்றிருக்கான் — அரியயனும் 81

தாய்முலைப்பால் வேண்டித் தவித்தபுலிக் குட்டிக்குப்
போய்முலைப்பால் அன்றளிக்கும் புண்ணியனார் — தூய 82

சித்தர்களும் பக்தர்களும் தேவர்களும் மூவர்களும்
எத்திசையும் போற்றுசங்க மேச்சுரனார் — நித்தநித்தம் 83

நல்லவரும் அல்லவரும் நாரணனும் ஆரணனும்
எல்லவரும் போற்றுசங்க மேச்சுரனார் — வல்லதமிழ் 84

பன்னுளும் பாடுகின்ற பாவலரும் காவலரும்
என்னுளும் போற்றுசங்க மேச்சுரனர் — தென்மேவும் 85

ஆதி பராபரி ஆன பராபரி
சோதி பவானி சுபாகரி — பூதரி 86

நாரணி காரணி ஞயகி தாயகி
வாரணி பாவாணி வாரணி — பூரணி 87

சத்திவெகு சத்திசிவ சத்திகன புத்தியொடு
வித்தையு மனுக்கிரக மிகுத்தருளும் — உத்தமிதென் 88

மங்கள மிகுந்திடு சுமங்கிலி அலங்கிருத
மிலங்குசிவ சங்கரியி லஞ்சியமென் — மங்கையெனும் 89

ஆச்சிகளி வாச்சிவிசா லாட்சியுயர் நூட்சிநிதி
ஆய்ச்சொரி மாய்ச்சொரிமீ ஞட்சிநல்ல — காட்சிதருங் 90

கொங்கேழ் சிவாலயத்துள் கூறுதிரு வாணியிதென்
றிங்கே தவம்புரியும் ஈஸ்வரியாம் — சிங்காரி 91

நால்வேத முப்பகர்ந்து நாடோறும் ஈடேற
மால்வேத னும்பணிய வந்தமின்னுள் — மேலான 92

மாமகளும் பூமகளும் மாமலர்க ளேசொரிய
நாமகளும் போற்றுமருள் நாயகியை — வாமமதில் 93

வைத்தபிரா னன்பர்பக்கல் வந்தமரர் நாதாக்கள்
யெத்திசையும் போற்றுசங்க மேச்சுரனர் — மெத்த மெத்த 94

இன்பரவு மந்தர ரிரங்கிவரு மன்றதினிற்
பொன்புர நடம்புரியும் பொற்பதத்தான் — வன்புலியின் 95

தோலெடுத்து மேலுடுத்தித் தோலுரித்து மேல்விரித்து
வாலெடுத்து நீரமுத்து மார்பகத்தான் — ஞாலமதில் 96

மானு மழுவு வரத அபயமொடு
மானே தரித்த மணிக்கரத்தான் — வானேர் 97

கடலி லமிர்தங் கடைய வதில்வந்த
கடுவிடத்தை யுண்ட கறைக்கண்டன் — உடலதுழ் 98

பச்சை மலையில் பவளமலை ஒன்ருகி
மெச்சியபொற் செம்பவள மேனியான் — உச்சிதமாய் 99

மாமதுரைப் பட்டணத்து வைகையடைக் கக்கூலி
மாமதுப் புட்டுண்ட வாயினான் — தாமமென 100

வெம்புயங்கம் பூண்ட புயன் மெஞ்ஞானி யோர்நினைக்கும்
அம்புயம்போல் தோன்றிவரும் ஐம்முகத்தான் — அம்புவியில் 101

மங்கைக் கதித்தகிரி மன்னன்விசை யாசலனும்
பொங்க முபதேசப் பொற்குழையான் — இங்கிதஞ்சேர் 102

சந்திர னுஞ் சூரியனுந் தக்கவனல் மூவரையும்
விந்தைபெரு மூன்றுவிழி யாய்ப்படைத்தோன் — அந்தனுதல் 103

மீதுதிரி புண்டரமாய் வெண்ணீ றிலங்கவுயர்
சீதமதி கெங்கையணி செஞ்சடையோன் — ஓதரிய 104

கெச்சிதம் சேருமாதி கேசவரை மைத்துனராய்
மெச்சிப் படைத்த விமலனார் — உச்சிதஞ்சேர் 105

வேழமுக னைக்குகனை வீரபத்ர னைக்கிருபை
சூழமைந்த ராய்ப்படைத்த தொல்மறையோன் — ஆளழகன் 106

சுந்தரர்க்குத் தூதுசென்றேன் துய்யமது ராபுரியில்
வந்து விசாரமது வாசியென்றேன் — விந்தை 107

அறுபத்து நாலுவிளை யாடல் புரிந்தோன்
அறுபத்து மூவருக்கு மன்னாள் — திறமுற்ற 108

முத்தி கொடுத்துமற்ற மூவர் தமிழ்க்கிரங்கி
முத்தி கொடுத்தருளு முக்கணனார் — உற்றவிண்ணோர் 109

பூமாரி சந்திப் புனல்மாரி கங்கைபெய்ய
ஆமா முனிவ ரதிசயிக்க — நேமமொடு 110

பத்தரெலாங் கூத்தாடப் பாவலர்கள் கொண்டாடச்
சித்தர் கதிதேடச் சீர்வீணை — உற்றயிசை 111

நாரதருங் கின்னரரும் நன்றாக வேமீட்டக்
கூர்மையுள்ள வேதங்கள் கோஷ்டிக்க — சாரம் நிறை 112

சாத்திரபு ராணமொடு தத்துவங்க ளுற்றபொருள்
பார்த்தே உரிய பதம்பொழிய — நேர்த்திபெற 113

நாற்றிசை போற்றுமாதி நாராயண சோசியர்
சாற்றுக்கு வேதந் தனைப்புகல — ஏற்றபுகழ் 114

சுந்தரஞ் சேசருங்காசி சுப்பாவு தானியார்
விந்தையெதிர் வேத மிகப்பொழியச் — சந்ததமும் 115

சேஷாவு தானிசெயசாம வேதமதை
வாசாம கோசம தாய்ப்புகல — கூசாமல் 116

அண்ணையாசார் அதர்வணவே தப்பொருளைப்
பண்ணுடனே ஓதிப் பகர்ந்து — வருணசெபம் 117

சொல்லரிய ராமலிங்க சோசியர்பஞ் சாங்கமதி
லுள்ளபலன் நன்றாய் உரைத்திடவே — தெள்ளிமைசேர் 118

சின்னண்ணா சாத்திரி யெக்கிய தீட்சதரும் (ஆகமங்கள்)
சின்னையா சாத்திரி தெளிந்தோதப் — பொன்னண்ணா 119

சாத்திரிய ருர்ராம சாமிசடா வல்லசுப்ப
சாத்திரியு மாங்காவு தானியரும் — தோத்திரமாய் 120

பாரா யணங்கள் பரிவுபோ லேயோதப்
பூராய மான புராணகதை — சீரான 121

சத்தம் புரிராமர் சார்ந்த தலபுராணம்
முத்தம்பி சோதிடர் மொழிந்துவர — ருத்திரசெபம் 122

நாளும் புரிந்து நரசிம்மய்ய ரும்வருக
வாழ்சுப்ப ராயரும் வில்வஞ்சொரிய — நீளண்ணா 123

வையங்கா ருங்கேச வையங்கா ருந்திரமாய்
செய்யதிரு வாய்மொழியுஞ் செப்பிவர — மொய்துளபம் 124

அற்சனையும் எங்களண்ணை ஆச்சார்யர் தான்சொரிய
அற்புதங்கிருஷ் ணாச்சார்யர் அன்புசெய்ய—மெய்ப்பிதமாய் 125

சீராஞ்சா மய்யர் செயவீர ராகுவையர்
நேராய்ப் பிரசாதம் நீட்டிவர—பேராகச் 126

சாமிபராக் கெச்சரிக்கை என்னத்தம் பையனும்
நேமுகமாய்க் கட்டியமும் நின்றோத—வீமனைப்போல் 127

வெள்ளித் தடிபிடித்து விசயமாந் தோலுடனே
தள்ளிச் சனங்கடனைச் சரியாய்—தெள்ளிமையாய் 128

அத்தீக நாரணய்யன் யாவரையு மேயிரும்பால்
வித்தார மாக விலக்கிவர — மெத்த மெத்த 129

உண்மைசேர் சுப்பராய ஓதுவா ரானவரும்
பண்ணுடனே மூவர் திருப் பாடலது — ஒண்மொழியாய் 130

தேவார மிக்க திருவா சகங்களெல்லாம்
நாவாரச் சொல்லி நவின்றுவர — பாவாணன் 131

பைந்தமிழைச் சொல்வாழ் பாரதிமுத் தய்யனுயர்ச்
சிந்துகவி நன்றாய்த் தெளிந்தோத — விந்தையுடன் 132

அட்டாவு தானி அருமைத் தமிழ்பாட
மட்டார் குழலியர்கள் வந்திருபால் — முட்டாமல் 133

முத்துக் குடைபிடிக்க முன்கவரி தானிரட்டப்
பத்துக் குடைரிவியைப் பாய்ந்துதட்டக் — கொத்துமணி 134

ஆலவட்டஞ் சூரியபான் ஆயிரமஞ் ஞாறிருபால்
மேலவட்டச் சூரியனை வீசியெட்டச் — சாலப் 135

பதினெட்டு வாத்தியமும் பாங்காகத் தொனித்தே
அதிருங் கடல்போ லதிர்த்த — எதிரெதிராய்த் 136

தேசிகத்தி லேபிடித்து திராணியுற்ற மே [illegible]க்கை
வீசிவிட்டு மாதரொக்க மேநடிக்கத்— தே[illegible]ில் 137

மன்னவர் செங்கோலு மனுநீதி யாய்நடக்கந்
தன்ம மிகுநாளுந் தழைத்தோங்க — இன்னிலத்தில் 138

மிக்க மழைபொழிய வேளாண்மை தான்மீர
தக்கதேவத் தானந்தான் விளங்க — மெய்க்கருட 139

கேதனத்தா னுமாதி கேசவநா ராயணனும்
மேதமுற்ற சித்திரரத மேரிவரப் — பூதலத்தில் 140

மாடேரி யேநடத்தி வாழவோ லோகமெங்கும்
யீடேர வந்தசங்க மேச்சுரனுர் — நாடோறும் 141

தம்பிபெரு பஞ்சாட் சரப்பொருளின் முத்தியருள்
எம்பெருமா னைசங்க மேச்சுரனுர் — சம்பிரமொடு 142

காவிரி பவானி கலந்துவருஞ் சங்கமுகம்
மேவும் பெருமை விதரிவனம் — பூவில் 143

அடிக்காயி ரம்லிங்கம் அறுபத்து மூவர்
திடப்பான்மை காயத் திரியும் — படைத்தநிலைக் 144

கோபுரஞ் செச்சைமதிள் கொண்டருள் சிவாலயப்
பிரதாப மிகுந்த தலமாகும் — ரூபமதாய்க் 145

கூறுந் திருவாணி கூடல் பதியதனில்
வாரார் உலாவெனவே மானிடர்கள் — மீறுமணச் 146

சாந்தால் தரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டு
காந்திபெறுந் தீபங் களையேற்றி — வாய்ந்தபட்டுத் 147

தோரணமு மாமகர தோரணமுங் கண்டவர்கள்
காரணமாய்ப் பார்க்கக் கதலிகளும் — சீரணியாய் 148

வீதிக்கு வீதி விதமாய்க் குறிஞ்சிநட்டுப்
போதஅலங் காரமது பொற்றேர்போல் — மாதயவாய் 149

பட்டணங்கள் சிங்காரம் பார்க்கச் சலிதீரும்
இட்டமுடன் மிக்கசங்க மேச்சுரனூர் — சட்டளையாய் 150

1 சாற்று மரகத மேரிமிசைச் சாரிவந்துதனை
யாற்றக் கொலுவிருக்கு மன்னுளில் — யேற்றுந் 151

திருப்பதியூர்ச் சேஷபட்டர் செய்தவத்தினாலே
திருப்புதல்வன் போலே செனித்தேன் — உரைத்திடக்கேள் 152

அஞ்சு வயதுமுதல் ஆரியமுங் கன்னடமுஞ்
செஞ்சி நகரில் தெலுங்குடனே — பஞ்சலிய 153

இந்துவியும் வாளபந்தும் இங்கிலீசு மற்றதிந்தச்
செந்தமி ழிலக்கணமுஞ் சீர்தனையும் — சந்ததமும் 154

வாணி கடாட்சமெந்தன் வாக்கில் புதனிருக்க
பூணிக்கை யாலுவித்தை பூர்த்தியாய் — பாணி 155

அவுதான வித்தைசொல்ல ஆர்க்கும் அரிதாம்
நவரூப சித்திரமென நன்றாய் — கவியொருவர் 156

---

1 சீர் சரியில்லை

ஆரோ கணமு மவரோ கணமொருபால்
பாரோர் புகழ்கண்ட பத்திரியுடன் — பேருன 157

பஞ்சாங்க மிக்க பதினாறு காய்ச்சூது
மிஞ்சு சதுரங்க விளையாடல் — அஞ்சாமல் 158

சீமைக் கணக்குரைத்தல் செய்ய புலியாடல்
நேமிதுபின் நெறிந்தநெல் கல்லுடனே — காமியரே ! 159

துங்கமத யானையொடு சொன்னவினாக் கண்டுசொல்லச்
சிங்கத் திருந்துபிர சங்கத்தில் — வெங்கலத்தில் 160

ஓசைகண்டு பேருரைத்தல் ஒளிந்த பூவுரைத்தல்
வீசுகெங்கை நீர்குடித்து மேயுரைத்தல் — யோசினையில் 161

சாரி வருங்குதிரை தன்னை யறிந்துரைத்தல்
சீரி புராணத்தைச் செப்புவதும் — நாரி 162

பதினா ரெழுத்தாணி பாவினங்க ளாலே
சதிராக வேயெழுதுந் தமிழ்சாற்ற — யெதிராளி 163

ஊடு திரைமரவில் ஓயாமல் சொல்வதினால்
சோடசவ தானியென்பேர் சொல்வார்கள் — பாடலது 164

ஆசுகவி சித்திரவித் தாரமுத லாய்ப்பகர்ந்து
தேசமதி லாண்மை செலுத்தியநாள் — பேசிச் 165

செகநாத மாம்பதியில் திம்மபட்ட னின்ற
மகராசி யான குணமாது — மிகுபசுபொன் 166

மேனியுற்ற மாதரசை மிக்க மணமுடித்து
யானு மவளும் ரதிமதன்போல் — மாநிலத்தில் 167

கூடிவிளை யாடிமனங் கூர்ந்திருக்கு மன்னாளில்
பாடியெனும் மாணிக்க பட்டணத்தில் — நாடரிய 168

தேர்பார்க்கப் போயிருந்தேன் தேவடியாளைச்சேர்ந்தேன்
ஊர்புகுந்து வந்தேன்எம் மூர்புகுந்தேன் — சீர்பார்த்து 169

வீட்டுக்கு வந்தேன் மின்னாள் முகம்பார்த்தேன்
கூட்டுமஞ்சள் வாடைக் குறியுடனே — கீட்டணைய 170

மார்மேல் நகக்குறியும் மாதுநல்லாள் கண்டுகொண்டு
நீரேது சூது நினைந்தீர்காண் — ஏராது 171

ஆருக் கடுக்கும் அசலாத்துப் பட்டர்கண்டால்
பேருக் கடுக்காத பேச்சுவைத்தீர் — நீரிப்பச் 172

சின்னஞ் சிரிசோ தெரியாதோ யிவ்வளவு
என்ன பெருமை இனிவருங்காண் — முன்னோர்கள் 173

சாற்றரிய நால்வேதஞ் சாத்திரங்க ளோராறும்
போற்றும் பதினெண் புராணகதை — யேற்றரிய 174

தெட்டா கம்புவியில் எண்ணான் கறஞ்சொலுமெட்
டெட்டாஞ் சகலகலைக் கியானவித்தை — இட்டமுள்ள 175

தத்துவந்தொண் ணூற்றாறு தக்கபதி னெண்பாஷை
மற்றவெந் திரதந்திர மந்திரமும் — இத்தனையும் 176

கற்றதினா லாய பயனென்கொல் வாலறியன்
நற்றாள் தொழாஅ ரெனினின் — மற்றொருவர் 177

கற்றதினால் தொல்லைவினை சட்டறுமே நல்லகுலம்
பெற்றதினால் போமோ பிறவிநோய் — உற்றதுகேள் 178

நஞ்சுகந்து கொண்டருளும் நாதனடித் தாமரையை
நெஞ்சுகந்து கொண்டால் நெறியென்று — செஞ்சொல்முன்னே 179

சொன்ன பழமொழிகள் தோராய மாய்த்தெரிந்த
இன்னகதை செய்தால்நான் என்செய்வே — னன்னவள்பால் 180

போவென்று சொல்லிப் பொற்கொடியா ளும்வெறுத்தாள்
நாமென்ன செய்வமென்று நான்மயங்கி — தாமிசமாய் 181

நின்றேன் தலைகவிழ்ந்து நேரிழையே குற்றமென்மேல்
ஒன்றுமில்லை என்றே உபசரித்தேன் — குன்றனைய 182

மாமுலையாள் பின்னும் மனம்வெருண்டு கொண்டுமுங்கள்
நேமமறி வேன்யிவடம் நில்லாமல் — போமெனவே 183

சிற்றினிச் சாதியென்று தேர்ந்து தெளிந்துமனந்
துற்பனத்தி லெண்ணி யுகந்திருந்தேன் — பிற்பாடும் 184

கண்டித் துரைத்தாள் கலியின் கொடுமையென்றே
தெண்டிக்க மாட்டாமல் திண்ணையிலே — ஒண்டி ஒண்டித் 185

தானிருந்தேன் ஓர்சாமந் தாட்டின ஆய்புகுந்தாள்
தானிருந்து பொற்சதலைத் தாள்போட்டாள் — யானிருந்து 186

பார்த்தேன் யோசித்தேன் பரதவித்தேன் தேகமெங்கும்
வேர்த்தேன் விருவிருத்து மேல்மெலிந்தேன் — நேத்தியிது 187

கைபிடித்த மின்னாள் கணவனைமீ றிச்சினந்து
மற்பிடிக்க வந்தவளுக் கவ்வை — சொற்படித்தான் 188

கற்பகத்தைச் சேர்ந்தவர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததென்ன
முற்பகத்தைச் செய்தவினை முடிந்துதென உற்பனத்தில் 189

எண்ணினேன் முன்வைத் திருந்தபொருள் கைசேர்த்தேன்
புண்ணியத் தலங்களெல்லாம் பூசிக்க — அண்ணைக்கே 190

போவமென வேயெழுந்து போதமிக வேநடந்து
பாவமது தீருமென்று பாணித்தேன் — பூவையரை 191

விட்டுப் பிரிந்து மிகுந்திடுசிம் மாசலமாம்
பட்டண அகோபளமாம் பட்டணமும் — விட்டுநர 192

நாரா யணபுரமும் ராச மயேந்திரபுரம்
தீரா கியதுகிருஷ்ணை தீரபுரம் — பேராம் 193

திருப்புகலூர் வேங்கடம் திருவொற்றி யூரும்
திருத்தணியுங் காளத்தி யுஞ்சேர் — திருப்புலியூர் 194

சென்னப்பட் டணங்காஞ்சி சேருமரு ணாசலமும்
தன்மைவிருத் தாசலமும் சிதம்பரமும் — பன்னரிய 195

சீரங்க மிக்க திருவானைக் காவல்நிரை
யாரஞ் சொரிதிருவை யாருடனே — சீர்சைகும்ப 196

கோணநக ரசமன்னார் கோவிலொடு சேதுவுமுக்
கோணமெனும் ஆவுடையார் கோவிலதும் — வாணர்மொழி 197

சித்திரரா மேசுரமும் தெற்பசய னநகர
உத்திர கோசமங்கை யூருதிருக் — குற்றாலம் 198

பாவ விநாசம் பரங்குன்றஞ் செந்தூரம்
பூவார் மதுரா புரிநகரும் — தாடொழுது 199

தேடிமிகச் சுற்றிவந்து தீர்த்தங்க ளாடியருள்
பாடியரி யானென்பார் பதியான — தாடொழுது 200

போற்றினேன் செய்பவத்தைப் போக்கினேன் வெண்ணீறு
சாற்றினேன் தியானமது சாதித்தேன் — நேத்திபெறு 201

மீனாட்சி யைத்தொழுது வேண்டியபின் னவ்வூரிற்
பூணாச்சி யையர்மனை போய்ப்புகுந்தேன் — தானாக 202

வாருமென்று ரப்போது வாரமென்றே கண்ணாடி
பாருமென்று கைகொடுத்தார் பார்த்திருந்தேன் — சீராகச் 203

சேம சமாசாரந் தெரிந்தா ரவருடைய
சேம சமாசாரந் தெரிந்துகொண்டேன் — நேமமொடு 204

அஞ்சுநா ளங்கிருந்தேன் அப்பாலி லேயோருநாள்
செஞ்சொல்மிகுந் தென்பழனித் தேர்பார்க்க — நெஞ்சதனில் 205

நாடினே னன்பொடுபூ ணாச்சியைய ரைப்பார்த்துக்
கூடநீர் வாருமெனக் கூப்பிட்டேன் — பாடுதமிழ் 206

வல்லீரே கேளுமந்த வாழ்பழனி யூர்தேர்க்குச்
செல்வீரே யவ்வூர்த் திறமையெல்லாம் — பல்விதமுஞ் 207

சொன்னால் சிரிப்பார்கள் துய்யபழ னாபுரியில்
மின்னா மினிக்கியர்கள் மெத்தமெத்த — என்னாணை 208

தென்னாலவுஞ் சத்தி சிவகிரிவே லய்யனிட
சன்னதியில் தட்டந் தலையெடுக்கும் — கன்னியர்கள் 209

மூவா யிரம்பேரில் முத்தணிய மாயொருபெண்
பூவைமண மாலையென்னும் பொற்கொடியாள் — ஆவல்பெற 210

ஊர்சொல்ல வேணுமென்று உற்றோர்கள் சொல்லவுந்தன்
பேர்சொல்ல வேண்டும் பிரியமதாய் — சீராக 211

சந்தான பாக்கியமது தான்பெருக வேணுமென்று
சிந்தைபெறு சஷ்டி விரதாதி — வந்தவந்த 212

சோமவா ரத்தினொடு சுக்கிரவா ரந்தோறும்
நேமமொடு சந்தி நிலைபிடித்து — காமி 213

இரவுபக லீச்சுரனை யேற்றித் தொழுது
வரிசைத் திருவிளக்கு வைத்துப் — பரிவாய் 214

பலகரைகள் வைத்துப் பலகுறிகள் கேட்டுக்
கலகலெனக் காணிக்கை கட்டித் — தலையாரி 215

எந்திர குளிசம் எழுதிக் கழுத்தணிந்து
மந்திரவெண் ணீறுதனை வாங்கியிட்டும் — சந்ததமுங் 216

கோவில்கள் கண்டதெல்லாம் கும்பிட் டடிபணிந்து
ஓவியம்போ லீயாத உலுத்தர்தனை — ஆவல்விட்டுக் 217

கண்டியுண்ட மின்னணங்கு கெற்பந் தரித்திடவே
கிண்டி மருந்து கிளரியுண்டு — வண்டமிழின் 218

பாமாலை கேட்டுப் பலதான மும்புரிந்து
பூமாலை நந்தவனம் போட்டுவைத்தும் — ஆமாங்கேள் 219

மன்னர்நிரை நண்ணுஹூர் வாழ்வேத நாயகியாள்
சன்னதியின் முன்பு தவங்கிடந்தும் — இன்னபடி 220

வேண தவம்புரிந்து வேண்டி யிருக்கையிலே
நீணிலத்தி லோர்மாது நித்திரையில் — ஆணழகர் 221

அற்புதம்போல் செம்பவளம் ஆரோ கையில்கொடுக்க
சொற்பனத்தைக் கண்டு துணிந்தெழுந்தாள் — உற்பனமாய் 222

விண்ணுலகில் மேகமது மிக்ககெற்சி தங்கூற
மண்ணுலகில் மஞ்ஞைகெற்ப மானதுபோல் — பெண்ணரசி 223

கெற்பந் தரித்துமனங் கெற்சிதங்க ளுண்டாகி
பற்பலநா ளாகவும்வாய் பாறலுற்று — அற்புதமாய் 224

மூன்றுதிங்க ளாக முகத்தில் குருவேர்வை
தோன்ற வயரதைப்புத் தோன்றியே — தான்றான் 225

மசக்கையுள்ள பேரை மசக்கிய மின்னுளாம்
மசக்கைகொண்டு நாலைந்து மாதம் — நிசப்படவே 226

சிவமயம்

ஞானவம்மானை

குறிப்புரை

ம. சீராளன், துணைநூலகர், சரஸ்வதி மகால், தஞ்சாவூர்.

ஞானம் என்பது அறிவு. அது மெய்யறிவு, பொய்யறிவு என இருவகைப் படும். புலன்களாலும் புத்தியாலும் உண்டாகும் அறிவு மெய்யறிவாகாது. இவற்றின் மூலம் அறியும் உருவங்கள் மாறிக் கொண்டே இருப்பன. மாறும் பொருள்கட்கெல்லாம் அடிப்படையாக மாறுப் பொருள் ஒன்றிருக்க வேண்டும். அதுதான் உண்மைப்பொருள். மாறுபாடுகள் எல்லாம் தங்கம் பொற்கொல்லரால் பல்வேறு அணிகலன்களாக மாற்றப்படுதல் போல், தோற்றமாத்திரமே தான். தங்கம் போன்று நிலையான உட்பொருள் ஆன்மா.

மனிதன் இந்த உண்மையை அறியாமல் உடல், உயிர் முதலியவைகளையே தான் என்று எண்ணியும், உலகப்பொருள்களை உண்மைப்பொருள்கள் என்று கருதியும், அவற்றில் விருப்பு, வெறுப்புக் கொள்வதால்தான் உலகத்துன்பங்கள் ஏற்படுகின்றன. இவ்வறியாமையை ஞானத்தால் போக்கினுல் ஆனந்தமயமான அழியா சக்தி ஒன்றேதான் எஞ்சி நிற்கும் என்பதை உணர்த்தப் பாடப்பட்டது இந்த ஞானப்பாடல்.

இவற்றை, புலவர் 30 அம்மானைப் பாடல்களால் நமக்கு அளிக்கின்முர். தமிழ் நாட்டில் பெண்கள் ஆடும் விளையாட்டுக்களுள் அம்மானை என்பதும் ஒன்று. அம்மானை ஆடும் காய்கள் மூன்றைவைத்து இரண்டு கைகளிலும் ஒவ்வொரு காயை வைத்துக்கொண்டு மேலே ஒரு காயைவீசி, வருகின்ற காயைக் கையிலுள்ள காய்விழாமல் பிடித்து விளையாடுதல் அம்மானை ஆட்டம். அம்மானை ஆடும் போது பாட்டுப்பாடிக்கொண்டே ஆடுவர். அந்தப்பாட்டுக்கும் அம்மானை என்று பெயர். பெண்பாற் பிள்ளைத்தமிழ் பாடும்போது அம்மானைப்பருவத்தில் தலைவியைத் தாய்மாரும், செவிலியரும் அம்மானையாடும்படிச் சொல்வதாகப் பாடப்பெறும்.

தமிழ்ப் பிரபந்த வகைகளுள் ஒன்முகிய கலம்பகத்தில் அம்மானை என்ற உறுப்பு ஒன்று உண்டு. அது மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்திருக்கும். முதற்பெண் ஒரு செய்தியைச் சொல்ல, இரண்டாமவள் ஒரு வினவை எழுப்புவாள். மூன்றுமவள் அதற்கு தக்க பதிலிறுப்பாள். அது சிலேடை நயம் பொருந்தியிருக்கும்.

அடுத்து அம்மனை என்பது தாய் என்ற பொருளையுடையது. பெண்களைப் பொதுவாக அம்மா என்று அழைப்பதுபோல் அம்மனை என்றும் அழைப்பது இலக்கிய மரபு. பாட்டின் வாக்கியத்தின் முடிவில் பெண்ணை விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைந்தது. இவ்விதம் பாட்டின் ஓரிடத்திலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களிலோ அம்மானை என்ற சொல்லைச்சொல்லி தாம் விரும்பும் கருத்தைப் பாடுவதாகும்.

இவ்விதபாக்களை எளிய நடையில் யாவருக்கும் விளங்கும் உவமைகளையும், உலக வழக்குச் சொற்களையும், அமைத்துப்பாடுவர். இவ்வகையால் ஞானத்தை விளக்க அம்மானை பாக்களால் பாடப்பட்டதே இந்த ஞான அம்மானை.

இதனைச் செய்த நூலாசிரியர் இன்னாரென அறிய இயலவில்லை. சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள ஒரே சுவடி என்ற வரிசையில் வைக்கத்தக்க நூல்களில் இதுவும் ஒன்று என்பது பெருமைக்குரியதாகும். M. No. 543 ஆம் எண்ணுள்ள சுவடிக்கட்டில் பல சிறு நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் உட்பிரிவாக அமைந்துள்ளது இந்நூல். சுவடியினை ஆராயும் போது காணப்பட்ட மாற்றங்களின் சிறுகுறிப்பு பாக்களின் கீழே தரப்பட்டுள்ளது. இந்நூலின் வேறு பிரதிகள் கிடைத்தால் இலக்கிய ஆராய்ச்சிக்கு மிக்க துணையாக அமையும்.

ஞான வம்மானை

(சரசுவதி மகால் சுவடி எண் M. 543-s D. 732)

குஞ்சரக் கன்றினைக் கும்பிட்டே னம்மானை
கொள்ளைப் பிறப்பைக் குலைத்தேன்கா ணம்மானை
யஞ்சினேன் வஞ்சப் பிறப்பினுக் கம்மானை
யாகம்போய்க் கூற்றுவ னானதே யம்மானை. 1

காயா [1] திக்குச்சே ருனேன்கா ணம்மானை
கல்வியுங் கேள்வியுங் கைவிட்டே னம்மானை
பேயானே னிந்தச் சகத்தினுக் கம்மானை
பித்தானேன் முத்திக்குப் பேதைமீ ரம்மானை. 2

வைய மடங்கப்பொய் வையங்கா ணம்மானை
மக்களு மொக்கலு மடி[2]பொய்கா ணம்மானை
மெய்யான தொன்றுமே மெய்யான தம்மானை
மெய்யின்றி றமெல்லா மித்தைகா ணம்மானை. 3

ஊற்றிய தேகாதி தத்துவக் கட்டிலே
யொன்றென் (று)வந்துநா னேய்ந்தேன்கா ணம்மானை
சுற்றிய பம்பரம்போல் வட்டம் வந்துநான்
தோற்றுபார்க் குள்ளே சுழன்றேன்கா ணம்மானை. 4

நல்ல பருவத்தே வந்தான்கா ணம்மானை
நன்மையும் புதுமையும் பாடேன்கா ணம்மானை
வல்லவ தேசிகன் வாழ்முத லம்மானை
வாராதே யென்போல் வளர்ந்தான்கா ணம்மானை. 5

தீவகம் போலென்னைச் சேர்ந்தான்கா ணம்மானை
சின்மய நோக்கா லேதுமலப் பொய்ப்போதப்
பாதகந் தீரவே பார்த்தான்கா ணம்மானை
பாவத்தே யென்னைப் பரிசித்தா னம்மானை. 6

தன்பாதஞ் சென்னிமேற் றந்தான்கா ணம்மானை
தான்மேலிட் டெல்லாமுந் தானானா னம்மானை
என்போதங் கீழிட் டிறப்பித்தா னம்மானை
யான்போன வென்னிலே ஏகாந்தி யம்மானை. 7

---

1. திக்கின என்றுள்ளது. 2. பொய்கனம்மானை என்றுள்ளது.

மண்ணாதி கண்ணாதி வாக்காதி சத்தாதி
மானத மேமுதல் நானல்லே னம்மானை
பெண்ணாதி காலாதி வித்தாதி நானல்லே
னென்ற னறிவுநீ யென்றேன்கா ணம்மானை. 8

தத்துவ மானது மித்தைகா ணம்மானை
தற்போத மற்றதன் றம்பிகா ணம்மானை
சித்திர தீபத்தைப் போற்றேன்கா ணம்மானை
சித்தஞ் சலித்திடுஞ் சென்மங்கா ணம்மானை. 9

ஆணல்ல பெண்ணல்ல வென்றான்கா ணம்மானை
யச்சு சுழன்றா லறிவென்றா னம்மானை
காணும் மறிவுநீ யென்றான்கா ணம்மானை
காணுங்காற் போதங் கரைகாணே னம்மானை. 10

பாரா வறிவுதா னென்றான்கா ணம்மானை
பாச மறியாமை யென்றான்கா ணம்மானை
(நேரா யா)ண்டு மறிவாய்நீ யென்றெனை
நில்லா நிலையாகி நில்லென்றா னம்மானை. 11

ஐயவத்தைக்கு ளகப்பட்டே னம்மானை
யாதி யவத்தைக்கு மீதானே னம்மானை
மெய்யவத் தைக்கட்டு விட்டேன்கா ணம்மானை
மேலால வத்தைக்கு மேலானே னம்மானை. 12

உற்ற நினைப்பு மறப்பற்றேன்கா ணம்மானை
யோவாத சுத்தத்தை யொத்தேன்கா ணம்மானை
தற்பரை யோகந் தலைப்பட்டே னம்மானை
தானற்ற பேரின்பந் தானானே னம்மானை. 13

சத்திய மானது சத்தேகா ணம்மானை
தற்போதம் போனவிடந் தற்பரை யம்மானை
பத்து விதப்பே ரெழுத்திகா ணம்மானை
யத்து விதம்வரி லமித்தைகா ணம்மானை. 14

பேரண்ட மெல்லாம் பேரரு ளம்மானை
பெய்ப்போதம் பேரண்டம் பேரொளி யம்மானை
நீருண்ட தீயிரும் பென்னவென் சிந்தையை
நேராக வுண்டு நிறைந்தான்கா ணம்மானை. 15

* உண்மைக்கோ ருத்தர மில்லைகா ணம்மானை 16

துன்ப மலங்கள் துடைத்தான்கா ணம்மானை
தூக்கற்ற சோதிக்கே தாக்கர வைத்தெனக்
கின்பந் தருவானைப் போலென்னை விழுங்கினான்
ஈதென்ன தோகம் பேதைமீ ரம்மானை. 17

முன்னிட்டங் கென்னைத்தன் பின்னிட்டா னம்மானை
முத்திக்கு வித்தாகி வைத்தான்கா ணம்மானை
தன்னிட்ட மென்னிட்டந் தானான னம்மானை
தானும்பொய் நானும்பொய்த் தாக்கற்ற தம்மானை. 18

ஒன்றாகி லொன்றும்பே றில்லைகா ணம்மானை
யோரிரண் டாமாகில் வேறுகா ணம்மானை
நின்றாலும் போனாலும் பேரில்லை யம்மானை
நில்லாம னின்றாட நிட்டைகா ணம்மானை. 19

பார்த்த பக்கமெல்லாம் பரமேகா ணம்மானை
பாராம லின்னாளும் பாழ்பட்டே னம்மானை
கூர்த்த வறிவினாற் கொள்ளொணா தம்மானை
கொண்ட நிலையையுட் கொள்ளேனே யம்மானை. 20

காண்பானுங் காட்சியுங் கைவிட்டே னம்மானை
கைவிட்ட வின்பங் கரைகாணே னம்மானை
வீண்போன காலத்துக் காற்றேன்கா ணம்மானை
வெந்து வெடித்திடுஞ் சிந்தைகா ணம்மானை. 21

கண்ணி லருவி கரைகாணே னம்மானை
காயம் புளகிக் கம்பலை யாகித்தீ
வெண்ணெ யுறுபாவை யானேன்கா ணம்மானை
மெய்மறந் தொன்றாகி விட்டேன்கா ணம்மானை 22

தன்னைநா னெய்தாமற் றானான னம்மானை
தானென்னைச் சாராதே தானான னம்மானை
பின்னைநான் பெற்றது பேரின்ப மம்மானை
பேறு பிறந்திடம் பெத்தங்கா ணம்மானை. 23

முன்பு வுனைக்காணப் பெற்றிலே னம்மானை
முற்றாத பேரின்ப முத்திக்கே யொன்றாகிப்

* இப்பாட்டில் ஓரேவரிதான் உள்ளது.

பின்பு வெனைக்காணப் பெற்றிலே னம்மானை
பெற்றதே தென்றாலென் பேசுகே னம்மானை. 24

ஆனந்த மான வஞ்செழுத் தம்மானை
யஞ்செழுத்தாய் நின்றே யாடினா னம்மானை
தானந்தத் தற்போத முற்றான்கா ணம்மானை
தன்னெழுத் தாலெங்குந் தானானா னம்மானை. 25

அஞ்சி லிருள்கெட வாடினா னம்மானை
யந்த விரண்டின்மேற் றேய்ந்தான்கா ணம்மானை
யஞ்சி லிரண்டின்மே லானதே யம்மானை
யான விரண்டுப் (போ) யற்றதே யம்மானை. 26

(பிள்ளை)யாய்ப் பித்தனாய்(ப் பே)யானே னம்மானை
பேரின்ப வெள்ளத்தே யோரின்ப மாகச்சென்
றுள்ளவா றாய் நினைந் தொன்றானே னம்மானை
யொன்றாகி நின்றாலு மொன்றாகே னம்மானை. 27

பேராத பேரின்பந் தானானே னம்மானை
பேரின்பந் தா னும்போய்ப் பேரின்பத் தீர்த்ததே
நேரா வழிதந் துண்மைச் சிவமாகி
நில்லா நிலையும்போய் நின்றேன்கா ணம்மானை. 28

பூசனை வாசனை பொத்தகஞ் சாத்திரம்
போகாமற் போக்கறப் போனதே யம்மானை
நேசமுங் கண்ணீரு நில்லா தாற்றலு
நிட்டையு மொட்டற விட்டதே யம்மானை. 29

செத்தாரை யொத்துத் திரிகின்றே னம்மானை
சேர்சிவ மாகி வேறற்றே னம்மானை
சித்தாகி வெற்றுட லானேன்கா ணம்மானை
தேசிகன் சித்தம் பேசொணா தம்மானை. 30

ஞானந்தா னானுந் தேசிக னம்மானை
நான்கண்ட தெய்வமுந் தேசிக னம்மானை
யானந்தா தீதனு தேசிக னம்மானை
யம்மானை யம்மானை யம்மானை யம்மானை. 31

ஞான வம்மானை முற்றும்.

அன்பது வருஷமாய் கடைகட்டி யாபாரம் பண்ணிக்கொண்டு கோவிலுக்கு கஸ்த்தூரி கடை ௧-க்கு மீ ௬-க்கு பணம் 2 வீதம் குடுத்துக்கொண்டு நாளது வரைக்கும்

....

ஞாயமான ஒத்தாசை செய்விக்க வேண்டியது.

இவ்வாவணம் கடுக்காய் மையினுல் எழுதப்பட்டுளது, தேதி, கையொப்பம் ஏதுமில்லை. தஞ்சை விண்ணாற்றங்கரையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள மேல சிங்கப்பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் கடை வைத்திருந்தால், அக்கடை 1க்கு மாதம் 1க்கு 2 பணம் வரியாகத் தந்தனர். அவ்வரிக்குக் 'கஸ்தூரி வரி' எனப் பெயர்போலும். இதில் வேறு சிறப்புச் செய்தி யேதுமில்லை.

ஆவணம் எண் ௨௪

ஆசிராசகெ ௵ சப்டம்பற் மீ ௰ ௨ யிதினடியில் கையெழுத்து வைத்தனுங்களனவரும் யெழுதிக்கொடுத்த மாதற்குமா யென்னவென்றால்

மாதொஸ்ரீ அகலியம்பா சத்திறம் கோவில் வகயரு தோட்டம் காவல் செங்கதியான — நாளது ௵ அகஷ்ட்டு மீ ௬௨ பகல் ௭ நாழிகை வெளயில் ஷெ தோட்டம் கச்சேரி வாசலில் லிருக்கும்போது பள்ளி அக்கிறகாறம் பட்டாமணியம் முத்துவைய்யனும், ஷெ யானேடை கூட்டாயிருந்த திருவாதி தாலுக்கா..........

....

பெரியதம்பி கையெழுத்து ....

.... வரதன்செட்டி கையெழுத்து.

இவ்வாவணம் கையால் செய்யப்பட்ட நீண்டதொரு காகிதத்தில் எழுதப் பட்டுளதேனும் சிறப்புச் செய்திகள் ஏதுமில்லை. மாதுஸ்ரீ அகலியம்பா பாயி சாகேப் அவர்கள் பல சத்திரங்களைக் கட்டியுள்ளார்கள். காசியிலும், இராமேச்சுரத்திலும் இவர்கள் கட்டிய சத்திரங்கள் இருப்பதாகக் கூறுவர்.

ஆவணம் எண் ௨௫

ராஜ ஸ்ரீ மகாறுஜா சாயேபவற்கள் தீவாணத்துக்கு கும்பகோணம் பெரிய மடம் விசாறணை சுப்பண்ணு யென்ங்கற சுப்பய்யன் யெழுதிகுடுத்தமனு யென்னவென்றால்.

ஷெ ஆதிண கற்தருகிய ஸ்ரீ சாரங்கதேவருக்கு நெரியாண சமீபத்தில் வேரே ஒருவரை அவற் னேமித்தபோதிலும் யிந்த சற்க்காரில் யாதி குடுத்து உத்தறவும், வத்ஸ்திறமும் பெத்துக் கொண்டுபோயி அவருக்கு பட்டம் னேமிக்கிறது ஆதீன பறம்பறை வஷக்கம். அந்தப்படிக்கி பில வறஷம் அற்ப்பிசி மீ ௰௨ யில் பட்டாபிஷேகமாயிருக்குற ஷெ ஆதீனகற்த்தர் யெனக்கு யிந்த ஜில்லா

ரிஜிஸ்த்தற் ஜட்ஜி துறையவற்கள் சயனுடன் சர்வாதிகார மொக்கத்தியாறனுமா கொடுத்து அது வயணங்களை சப் கலேகட்டற் துறையவர்களுக்கும் யிவடத்தில் சிஷியாளுக்கும் தெரியப்படுத்தி ஷெ மடாதிபதி யாத்திரை போயிருக்கிறூர்.

அப்படியிருக்க சம்பந்த மில்லாத முத்தண்ணு யென்பவன் ஒருவனுக்கு யிள வரிசைபோல பிறட்டு செயித சங்கதிக்கி சற்க்காரில் யாதி குடுத்ததின்பேரில் மாஜி சரிகீல் அவன் யிளவரிசை அல்லவெண்டு அது வயணங்களைக்கண்டு ஷெ யென் மொகத்தியார் நாமாவை ஸ்தாபித்து ௲அாசஎ ஹூ பிப்பறவரி மீ த்தில் மாஜி ஆக்டிங்க் கலேகட்டருகிய பிஷப்துரை யவற்களுக்கு மிம்மோறுண்டம் யெழிதி யிருக்குறூர்கள். அதற்குச் சரியான நகல் யெனக்கு தேவையாயிருக்குது.

ஆகையால் தயவு செயிது ஷெ மிம்மோறுண்டத்துக்கு சரியான நகல் முத்திரை கடுதாசியில் குடுக்கும்படி உத்தரவாகவேணுமென்று கேட்டுக் கொள்ளுகுரேன்.

௲அாருஎ ஹூ சௌவரி மீ ௬உ — கு. சுப்பய்யன் கையெழுத்து.

இவ்வாவணத்தில் ஆங்கிலம் மிகுதியாகக் கலந்து எழுதப்பட்டுளது. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் உள்ள பெரிய மடம் என்று குறிப்பிடப் பட்டுள்ளதால், இது எந்த ஆதீனத்தைச் சேர்ந்த மடம் என்பது புலனுகவில்லை. ஆனல் 1844ல் திரு. சாரங்கத்தேவர் என்ற ஒருவர் இருந்திருப்பது தெரிகின்றது. அவ்வாதீன வழக்கம் சர்க்கார் மூலம் பட்டம் பெறுவது போலும். பிழைகள் அதிகமாக உள்ள இவ்வாவணம் இரண்டுமடிப்பைக் கொண்டது.

ஆவணம் எண் உ௬

இஹீங்தே ஸம்மா னைனமயா அல்லப்

சவ்வால் மீ 5 2

1. ஹைதர் நாயக்கர் காலாபத்துனலே ஸ்ரீ முஷ்டம் விருத்தாசலம் இந்த ரெண்டு ஸ்தலங்களிலிருத்த சுவாமிகள் யாவும் ஸ்ரீ மாயூரநாத சுவாமிகோயிலில் வந்து இருப்பதால் பூசை நைவேத்தியம் நடத்திவர.

விருத்தாசலேசுவற சுவாமிக்கி	வராகன்	1.
நித்தியேசுவற சுவாமிக்கி	பணம்	5.
		15

நாள் 1க்கு பதினஞ்சு பணம் விதம் சுவாமி அவடம் யிருக்குற வரைக்கும் கொடுக்கும்படி உத்திரவு யாதீ 1.

2 காட்டுமன்னுர் கோவில் ஸ்ரீ ராஜகோபாலசுவாமி பந்தநல்லூரில் வந்திருப்பதால் பூசைக்காக நாள் 1-க்கு பணம் அஞ்சு வீதம் சுவாமி அவடத்திலிருக்கிற வரையிலும் குடுக்கும்படி உத்திரவு யாதீ. 1.

(ஆக) உ.

இவ்வாவணம் ஒரு சிறு துண்டுக்காகிதமெனினும் கையினுல் செய்யப்பட்ட காகிதர். அதில் அரக்கு மையினுல் எழுதப்பட்டுளது. வெகுதூரத்திலுள்ள கோயில்களுக்கு எல்லா மக்களும் செல்ல இயலாது என்பதற்காக ஊரிலுள்ள பெருந்தனக்காரர்களோ, அரசர்களோ சிறப்புவாய்ந்த பிற ஊர் தெய்வங்களை அழைத்து விழாச்செய்வது வழக்கம். அந்தந்த ஊர் கோயில் பாதுகாப்பாளர்கள் தாமே கோயில் செலவிலேயே பிற ஊர்களுக்குத் தங்கள் கோயில் தெய்வங்களை (எழுந்தருளுருவங்களை) அனுப்பிவைப்பதுண்டு. இன்றும் மாசிமக விழாவன்று, பாண்டிச்சேரி எனப்படும் புதுச்சேரிக்கு, வெகுதொலைவிலுள்ள செஞ்சி, மயிலம் முதலான ஊர்களிலிருந்து எழுந்தருளுந் தெய்வங்களைக் கொண்டுவந்து கடலாடல் செய்வித்துத் தாமும் கடலாடி விழாக்கொண்டாடுவர். மாசி மகத்தன்று ஒரு நூற்றுக்கு மேற்பட்ட தெய்வங்களை ஒரேசமயத்தில் கடலாடி வழிபடலாம். மறுநாள் அவ்வத் தெய்வங்கள் அவ்வவ்வூருக்கு எழுந்தருளிச் சென்றபோதிலும், (தென்னுற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம்) 'மயிலம்' என்னும் ஊரிலிருந்து வந்து கடலாடிய முருகன் மட்டும் தனக்கெனப் புதுச்சேரியில் ஏற்படுத்தப்பட்ட சிவஞான பாலைய சுவாமிகள் மடத்தில் நான்கைந்து நாட்கள் தங்கிப் பல்வேறு கோலம் புனைந்து அடியார்களுக் கருள்புரிந்து, பின்னர் மயிலம் செல்வார். மயிலத்தில் ஒரு குன்றின் மீது முருகவேள் கோயில்கொண்டெழுந்தருளியுள்ளார். மயில் இம் முருகவேளை வழிபட்டுப் பேறுபெற்றதால் இதற்கு 'மயிலம்' எனப் பெயர் வந்ததாகக் கூறுவர். அருணகிரியார் பாடல் பெற்ற தலம் இது.

அதுமட்டுமன்றி போர்க்காலங்களில் அன்னியருடைய படையெடுப்பால் கடவுளுருவங்கட்குச் சேதம் ஏற்படாதிருத்தல் பொருட்டும் ஓரூரிலிருந்து மற்றோரூருக்குத் தெய்வ உருக்கள் செல்வதுண்டு. அப்படிச்செல்ல நேரிட்டதேயாம் இந்த நிகழ்ச்சி.

'இஹீந்தே ஸம்மா னைனமயா அல்லப்' எள்ருல் ஆண்டு 1181. அக்காலத்தே 'சூஹர்சன்' ஆண்டு வழக்கிலிருந்தது. அந்த சூஹர்சன் ஆண்டே இந்த 1181. அதனைக் கி. பி. ஆக்குதற்கு 599-ஐக் கூட்டவேண்டும். அப்படிச் சேர்க்கக் கி. பி. ஆண்டு 1780 ஆகும். அதுகாலை தஞ்சையில் சத்ரபதி துளஜா மகாராஜா செங்கோல் செலுத்தினர். ஆகவே இது மன்னர் துளஜா அவர்களின் உத்தரவாகும்.

இந்தத் துளஜா மகாராஜாவின் காலத்தில் ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம் முதலான பகுதிகளில் 'ஹைதர் நாயக்கர்' என்பார் படையெடுத்திருந்தார்

போலும். அதனுல் விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றத்தினின்று விருத்தாம்பிகை, பாலாம்பிகையுடன் பழமலைநாதரும், ஸ்ரீ முஷ்ணத்திலிருந்து நித்தியேசுவர சுவாமியும் மாயூரத்திலுள்ள அபயாம்பிகை சமேத மயூரநாத சுவாமி கோயிலில் வந்து தங்கியுள்ளனர் போலும். அதுகாலை அத்தெய்வங்கட்குப் பூசை நிவேதனங்களுக்காகத் தஞ்சை அரண்மனையார் நாள் ஒன்றுக்கு பதினைந்து பணம் கொடுத்து வழிபட்டுவந்தனர்.

அவ்வாறே, காட்டுமன்னார்குடியிலுள்ள ஸ்ரீ ராஜகோபாலசுவாமி கும்ப கோணத்தை அடுத்துள்ள பந்தணைநல்லூரில் உள்ள காம்பணை தோளியம்மை சமேத பசுபதீச்சுரர் கோயிலில் வந்து தங்கியிருந்தார். அதுபோதும், தஞ்சை அரண்மனையார் நாள் 1-க்கு 5 பணம் வீதம் கொடுத்து வழிபட்டு வந்தனர் என்பது புலனுகின்றது. இப்படியான துளஜாமகாராஜாவின் இரண்டு உத்தரவு களும் ஒரே துண்டுக்காகிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஆவணம் எண். உ௭

|௭| மகாராசா சாயபு அவர்கள் அறமனை சர்க்கீல் மகாருச ஸ்ரீ பந்து சுவாமி அவர்கள் சமூகத்துக்கு அசரபுஷா சாயபு அவர்கள் மக்கான்தார் காதற லிஷா காதரி மிகவும் துவா செய்து யெழுதிக்கொண்டது. யென்ன மென்றால்

முதலாவது யென்குரு முறை 3-ம் பாட்டனுகிய ஷெ அசரபுஷா சாயபு யிந்த சமஸ்த்தானத்துக்கு வந்து மக்கான் முதலானது சம்பாரித்து, சில பக்கிரியள் தரிக் குட்டி செயிது யெறந்துபோன பிறகு, அந்த பக்கிரிகள் தர்மம் நடப்பிவித்து வந்து, யெனக்கு உ-வது குருமுறை பாட்டனுயிருந்த குலாமே உகன்ஷா யென் சனக தகப்பன் உள்பட ௬-பேர்களை பக்கிரியள் செயிது யெறந்து போனபிறகு யென்குரு அசனுஷாபிதாய உசன்ஷாக் நான் உள்பட ௪ பக்கிரியள் செயிது தங்கள் பேரில் வைத்த தயவை எங்கள் ௪ பேரில் ... ...

ரு-வது ஷெ சாதிருவானது, அசர்புஷாசாயபு அவர்கள் கந்தூரி தினம், அவர்கள் கோரியின்பேரில் போத்த வேண்டியதுக்கு குடுக்கிறதே தவிர ஒருவனுக்கு யென்று குடுக்கிறதல்லவே. அது யார் மக்கானிலிருந்து கந்தூரி முதலானது நடப்பிபிக்கிராரோ அவர்கள் வாங்கி சந்தனத்துடன் மயித்த மக்கான்தார்கள், மயித்த துனியாதார்களும் கூடி ஷெ கோரியின்பேரில் பாத்தியா செய்து, அந்தச் சாதிராவை போத்தி மகாராஜா சாயபு அவர்கள் க்ஷேமத்துக்கு துவா செய்கிறது வழக்கம். ... ...

ஆகையால் வேணும் அனேகம் துவா

௲ ஆாசகெ௬ ஞ௰-மேன் மீ௳-கெஉ இவை தஞ்ச நகரம் கோட்டைக்குள் சரிக்கீல் மகாராச ஸ்ரீ பந்துசாமி சரிக்கீல் அவர்கள் சமூகத்துக்கு வருவது.

இது நான்கு பக்கங்களைக்கொண்ட நீண்டதொரு ஆவணம். இதில் முக்கிய செய்தியை மட்டும் (5-வது) கொடுக்கப்பட்டிருக்கிறது ஏனைய பகுதிகள் வழக்கு கொண்டது.

இவ்வாவணத்திலிருந்து, மன்னர் சிவாஜியின் காலத்தில் மதவேறுபாடு இல்லை என்பது புலனாகின்றது. மன்னர் சிவாஜி மதவேறுபாடின்றி முகம்மதிய மதக்கந்தூரி விழாவுக்குச் சந்தனமும், சால்வையும் அனுப்பிய செய்தி தெரிகின்றது. வெகுகாலமாக தஞ்சை மராத்திய மன்னர்கள் மத வேறுபாடின்றி இது போன்ற செயலைச் செய்து வந்துள்ளனர். இன்றும் நாகூர் கந்தூரி விழாவில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றது தஞ்சை அரண்மனை.

ஆண்டுதோறும், நாகூரில் அடக்கியுள்ள மீரா சாகேப் ஆண்டவர் அவர்களின் சமாதியில் நிகழும் (சந்தனக்கூடு), கந்தூரி விழாவுக்குத் தஞ்சை அரண்மனை மூத்த இளவரசர், இளைய இளவரசர் ஆகியோரால் சாதரா (கலேபு) அனுப்பப்பெறுகின்றது. தஞ்சையிலிருந்து, அரண்மனையாரால் நியமிக்கப்பட்டவர் (உசூர்) தலைமையில், சிலரோடு சாதரா (சால்வை) நாகூரை அடையும். அவர்கள் அவ்வூர் வண்டிக்காரத்தெருவில் வழக்கமாகத் தங்கும் வீட்டில் தங்கியிருப்பர்.

நாகூர் ஆண்டவர் தர்காவிலிருந்து யானை, குதிரை (சன்னு சவாரி) முதலான மரியாதைகளுடன் வந்து இவர்களை அழைத்துச் செல்வர். பின்னர், சமாதி மீது சால்வை போர்த்தி சந்தனம் பூசி, ஜமாக்கள், பீர்ஜமா, ஷோக்கிஜமா, கோஜாஜமா மண்டல்ஜமா, இவர்களுக்கும், ஓதுவார், சற்குரு ஆகியோருக்கும் மரியாதை செய்வர். பின்னர், இளவரசர்களின் நலனுக்காக அங்கு பாத்தியா (வழிபாடு) வேண்டுதல் நிகழும். பின் அவர்கள் தஞ்சை அரண்மனையாருக்கு மரியாதை செய்வர்.

பீர்ஜமா, ஷோக்கிஜமா, கோஜாஜமா, மண்டல்ஜமா, ஓதுவார் ஆகியோருக்கு நன்னான்கு தட்டு பூந்தி (மிட்டாய்) கொடுப்பர். நாட்டாண்மைக்காரருக்கு ஒன்பது தட்டு பூந்தி கொடுப்பர். வீட்டுக்காரருக்கு இரண்டு தட்டும், போய்வருகிறவருக்கு ஒரு தட்டும் பூந்தி கொடுப்பர். தர்காவுக்கு இடும் சாதரா எனும் சால்வை பனாரஸ் பட்டினால் தயாரிக்கப்படுவதாகும்.

ஆவணம் எண். உஅ.

மிமோருண்டம்

கமிஷனர் துறையவர்களுடைய நாளது மீ-20உ யுள்ள 1215 நிர் லெட்டரையும், ஷேக்குஇபருமுடைய பிட்டிஷனையும் பெத்துக்கொண்டோம்.

அது காரியத்துக்கு யேகோஜி மகாராஜா கள் முதல் படே உசேனி அல்லா கோவிலுக்கு பூஜை முதலான ஆருதணை தஞ்சாவூர் மகாராஜாக்கள் செய்து கொண்டு வருகிருர்கள். ஷெ கோவிலுக்கு நீண்டகாலமாய் தவுலத்து பாவலோகு ... ... விலிருந்து நடந்துவந்த மொயினி மீ 1க்கு ரூ. 9. 1857-ம்-ஞூ பிப்பிரவரி-மீ 28வ யில் ஷெ 1 அவாலா ரத்தான உடனே நிறுத்தப்பட்டது. ஷெ அல்லா கோயிலுக்கு தஞ்சவூர் மகாராஜாக்கள் தங்கள் குலதெய்வத்தைப்போலெண்ணி மிகவும் பக்தியுடனே மொயினிப்பணம் குடுத்து, பூஜைகளை நடத்திக்கொண்டிருந்ததினுல், அதின் மோயினி நிறுத்தக்கூடாதென்கிற அபிப்பிராயத்துனுல் மாஜி சர்க்கீல் ஸ்ரீ நீலகண்ட ருவு ஆனந்தருவு ஜாதவ் அவர்கள் அவாலா ரத்தான காலத்தில் மால்வாரிகளில் சிலர்களை நேமித்துக்கொண்டு சேவுகர்களுடைய ஜாப்தாக்கள் குடுத்தபோது ஷெ அல்லாகோயிலின் மொயினி ரூ. 9. ஸரஸ்வதி மாலில் தாகல் செயிது 57-ஞூ ஜூன் மீ 22-வ ரிசிடெண்ட் துறையவர்களிடத்தில் ஒரு ஜாப்தா குடுத்திருக்கிருர். அந்தத்துகை இண்டெண்டில் தாக்கலாகி மீ மீ பணம் வந்து ஷெ கோவிலுக்கு குடுக்கப்பட்டிருக்கிறது. அரண்மனை சேவுககாரர்களுடைய ஜாப்தா 58 ஞூ மார்ச்சி மீ 9வ யுள்ள நம்முடைய 70 நி. லெட்டருடன் துரையவர்களிடத்தில் நர்மாலனுப்பப்பட்டபோது ஷெ அல்லா கோவில் மொயினி ரூ. 9. முன் நடந்த அனுஷ்டானப்படி ஸரஸ்வதி மகாலில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதும் தவிர இப்பால் 59 ஞூ டிசம்பர் மீ 31வ ல் கமிஷனர் துரையவர்களிடத்தில் குடுபட்ட ஆள் மாகாணங்களுடைய ஜாப்தாக்களிலும் ஷெ ரூ. 9 ஸரஸ்வதி மகாலில் தாக்கலாகியிருக்கிறது. ஷெ அல்லாக்கோயில் மொயினி ரூ. 9 மீ மீ இண்டெண்டில் தாக்கலாகி பணம் வந்து நாளது ஞூ பிப்ரவரி மீ வரையில் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. ஷெ மொயினி 57ஞூ சூன் மீ 22வயில் மாஜி சரக்கீல் ஸ்ரீ நீலகண்டராவ் ஆனந்தராவு ஜாதவ் அவர்களால் குடுபட்ட சேவுகக்காரர்களான பேர்களுடைய ஜாப்தாவில் தாக்கலாயிருப்பதை அப்போது ரிசிடெண்டுதுரையவர்கள் ஒப்புக்கொண்டு மீ மீ அந்த மொயினி அயிவேஜியையும் அனுப்பிவித்திருப்பதால் அதுவே ஷெ மொயினியை நடத்த ஒரு உத்தரவாக நினைக்கவேண்டியிருக்கிறதுனுல் பெட்டிஷன் திருப்பியனுப்பப்பட்டிருக்கிறதென்று சர்க்கீல் தெரிவிக்கிருர்.

விக்கிரம ஞூ ஜூன் மீ 22வ.

இவ்வாவணம் மிக மிக மடிந்த காகிதம் கொண்டதாயுள்ளது. இதில் கூறப்பட்ட செய்தி அல்லாபண்டிகை தொடர்புடையது. ‘அசேன், உசேன்’ என்ற இரு முகம்மதியர் நினைவாக எழுந்ததே இவ்வல்லா பண்டிகை. இதற்கொரு பெருங்கதையுண்டு. பல ஆண்டுகளாக அல்லா பண்டிகை தமிழகத்தில் நிகழ்ந்து வருகின்றது. சத்ரபதி ஏகோஜி மகாராஜா சாகேப் அவர்கள் தங்களுடன்,

1. மேடோவர்.

அல்லாவையும், முகம்மதியக் குருமார்களையும் தஞ்சைக்குக் கொண்டுவந்ததாகச் செய்தியுண்டு. அதுமுதல் தஞ்சை மராத்தியமன்னர்கள் அல்லாபண்டிகை யினையும் கொண்டாடிவந்தனர். கீழவீதியில், அரண்மனைக்கு எதிரில் 'இராஜா அல்லா' என்று சில [1]பஞ்சாக்களை வைத்து மொகரம் நாளில் வழிபட்டனர். அவைகட்கு அரண்மனை மதிப்பு இருந்தது. காலவசத்தால் அவைகள் தற்போது இல்லையாயினும், வடக்கு அலங்கம் படே உசேனி அல்லா, கீழலங்கம் சின்னி அல்லா முதலாகப் பல பஞ்சாக்கள் தஞ்சையில் இன்றும் உள்ளன. அவைகள் மொகரம் நாட்களில் வழிபாடு பெறும். இவைகளில் வடக்கு அலங்கத்தில் உள்ளதும், புராதனமானதுமான படே உசேனி அல்லா கோயிலுக்கு [2]மொயின் செய்த விபரம் தெரிகின்றது. தஞ்சை மராத்திய மன்னர்கள் மத வேறுபாடின்றி ஆண்டனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இப்படே உசேனி அல்லா கோயில் பூசை முதலான சிலவுகளுக்காக அரண்மனையார் 'மெயின்' என்ற பெயரால் பொருளளித்து வந்தனர் என்பதும், அது தொடர்ந்து நிகழ்ந்த தென்பதும் புலனாகின்றது. இவ்வல்லாகோயில் செய்தி கூறும்போது சரசுவதி மகாலுக்கு இது செய்தியை அனுப்பியதாகக் கூறப்பட்டிருக்கிறது.

தஞ்சை மராத்திய மன்னர்கள் ஆண்டகாலத்தில் நீதிமன்றங்கள் சிறப்பாக நான்கு இருந்ததாகத் தெரிகின்றது. அவையாவன (1) முத்திரித சபை. (2) தர்ம சபை. (3) நியாயதீச சபை. (4) நியாயநீசி சபை என்பன. முதல் சபை வழக்குகளைப்பெற்று முத்திரையிட்டு முடிவுசெய்வது. அதில் தீராதவைகளை தாம சபையில் விசாரித்து நீதி வழங்குவர். அதிலும் தீராது இருந்தவைகளை நியாயதீச சபையில் தீர விசாரித்து நீதி வழங்குவர். அதிலும் தீராத பெரு வழக்குகளை மிகத் தீவிரமாக ஆய்ந்து விசாரித்துத் தீர்ப்புக் கூறுவர். இந்தச் சபையில் நீதி வழங்க, இன்றியமையாததாகவிருந்தது சரசுவதி மகால். எந்தப் பெருவழக்குக்கும் சரசுவதி மகாலிலுள்ள மொழிவாரிப் பண்டிதர்கள் ஆராய்ந்து கூறும் சொற்களே நீதியாகமிளிர்ந்தன. ஆகவே நீதி வழங்க சரசுவதி மகால் நிலைக்களனாக இருந்தது. இதனையும் இவ்வாவணம் நிருபித்துக் காட்டுகின்றது.

ஆவணம் எண். உக

தஞ்சாவூர கவர்ண்மெண்டு யேஜண்டு துரை அவர்கள் ஆபீஸ் சற்கீல் கோவிந்தருவு அவர்களுக்கு கண்டி, கீர்த்தி சிம்மராஜா யெழுதிக்கொண்டது யென்னுடைய பெரிய தாயார் கண்டி 2-வது ராணி அவர்கள் குமாரத்தி ருஜரத்தின சிம்மளகமுசலாதேவி கூஅாஈலேக ஷூத்தில் சீவதெசை செய்தார்கள், யென்

1. கை உருவில் பொன், வெள்ளி முதலான உலோகங்களால் செய்யப்பட்டது. அல்லா என்ற பெயரால் வழிபடப்பெறுவது.

2. அரண்மனையார் கோயில் சிலவுக்குக் கொடுக்கும் பொருள்.

தொகப்பனூர் சுப்பானுறனேந்திர சுவாமி ருஜா கூஅாடுகெ ஷூத்தில் சீவதெசை செய்தார். இவர்களுக்கு கோறிகட்டவேண்டியது

கூஅாளஜெ ஷூ மேன் மீ ஈடிகவ (தெலுங்கில் கையொப்பம்) கீர்த்தி சிம்மராஜா

இவ்வாவணம் சிறு துண்டுக்காகிதத்தில் உள்ளதால் விளக்கமாக இல்லை. செய்திகள் வெளிப்படையாக உள்ளன.

இவைகளேயன்றி தஞ்சையை ஆண்டமாரத்திய மன்னர்கள் செய்த கோயிற் பணிகள் எண்ணிலடங்கா மேலும் சில செய்திகளே நோக்குமிடத்து, அவர்கள் கையாண்ட சில ஆவணங்களினின்றும் கூறப்படும் செய்திகள்.

மூட்டை.	அயிட்டம்.	எண்	செய்தி
31	4	7 ல்	தஞ்சை நாணயக்காரசெட்டித்தெரு தொப்பாரங்கட்டிப்பிள்ளையாருக்கு பூஜை சிலவு செய்தது.
31	4	8	திருவண்ணுமலை அருணுசலேசுவர சுவாமி 1. மன்னுர்குடி இராசகோபாலசுவாமி 1. திருவையாறு ஐயாறப்பன் 1 வல்லம் சுப்பிரமணியர் 1. கீழவாசல் வெள்ளைப் பிள்ளையார் 1. இவர்கள் பூசை சிலவு.
31	4	9	திருவிடைமருதூர் மகாலிங்கம் தஞ்சைப் பெரியகோயில் [1] 108 சிவாலிங்கம் [2] ஜ்வர ஹரேசுவரர் அர்ச்சனைகள் திருவானைக் காவல் ஜம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி அபிஷேகம்.
31	4	14	திருப்பதிக்கு விமானம் அனுப்பியிருக்கிறது சிலவு 21 சக். பழனி ராஜம்மாள் காவடி அனுப்பிய சிலவு 13 சக்கரம்.
31	4	45	தஞ்சைமேலவீதி கொங்கணேசுவரருக்கு ஏகாதசி ருத்திர பாராயண அபிஷேகம் வகையறு.
		46	மேலவீதி, பங்காருகாமாட்சிக்கு அபிஷேகம் குங்கும அர்ச்சனை சிலவு.

1. மராத்திய மன்னர்கள் நிறுவியது.
2. கருவறையின் உள் சுற்றுப்பிரகாரத்தில் வடபால் உள்ளவர்.

மூட்டை.	அயிட்டம்.	எண்.	செய்தி.
31	4	57	சங்கர நாராயண சுவாமி வைகாசி மாத ரதோத்ஸவத்திற்கு 133 சக்.
		86	திருவண்ணமலை அருணசலேசுவர சுவாமிக்கு சொக்கப்பானைக்கு 10 சக்கரம்.
34		105	மணிகர்ணிகேச்வர சுவாமிக்கு ரதோத்சவத்திற்கு சிலவு.
		108	பெரியகோயில் சித்திரைமாத ரதோத்சவத் திருநாளுக்குச் சிலவு 5706 சக். 2½ பணம்.
		110	கொங்கணேசுவர சுவாமி வைகாசி மாத ரதோத்ஸவத்திற்குச் சிலவு 1408½ சக். 4 $\frac{13}{16}$ பணம்.
		111	சங்கரநாராயண சுவாமிக்கு ஷை சிலவு 266 சக். 2 $\frac{1}{16}$ பணம்.
		112	ஆனந்தவல்லி தஞ்சேஸ்வர சுவாமிக்கு சித்திரை மாத ரதோத்சவத்திற்கு 478 சக்.
		113	பிரசன்ன வெங்கடேசுவர சுவாமிக்கு சித்திரைமாத ரதோத்சவத்திற்கு 443½ சக். 1 $\frac{9}{16}$ பணம்.
		139	மகாலிங்க சுவாமிக்கு உஷக்காலக் கட்டளை பூஜை நைவேத்தியம் வகையருவுக்கு மாதம் 1க்கு 3. சக்.
		141	108 சிவாலிங்கத்திற்கு மாதம் 1க்கு 5 சக்.
		143	ஜ்வரஹரேசுவரருக்கு மாதம் 1க்கு 2 சக். 9 பணம்.
14		107	திருநள்ளாறு சனீச்சுர சுவாமிக்குத் தினமும் நெய் விளக்கு வைக்க, அகல்யாபாய் நெய் விளக்கு தருமம்.
32	3	1	கும்பகோணத்திலுள்ள சிவஸ்தல 16 லிங்கங்கட்கு பூஜை சிலவு.
35			திருவாரூர் தியாகராசாவுக்கு சிலவு.

மூட்டை.	அயிட்டம்.	எண்.	செய்தி.
59	1	2	பெரியகோயில் நந்திக்கு அபிஷேகம் பூஜை வகையருவுக்கு நாள் 1க்கு 3½ சக்.
	16	1	நாகப்பட்டணம் நீலாயதாட்சியம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்கு 1826-ல் ரூ. 100/= கொடுக்கப்பட்டது.
		2	பூரி ஜெகந்நாத சுவாமிக்கு நிரந்தரமாக நித்ய பூஜைக்கு ரூ. 800/= கொடுக்கப் பட்டது.
65	49	1	லக்ஷ்மி நரசிம்மப் பெருமாளுக்குக் கோயில் கட்டுவதற்காக 3050½ சக். கொடுக்கப் பட்டிருக்கிறது.
		3	மாரியம்மனுக்கு நித்தியப்படி 20 சக். 8 பணம்.
76	6	23	வடக்குவீதி ரத்னபுரீஸ்வர சுவாமி கோயில் தேர்முட்டி கட்டுவதற்காக சிலவு ரூ 300/-
112	128		1796ல் திருவிடமருதூர் தேர் இழுக்க 6000 பேர் அனுப்பப்பட்டிருக்கிறது.
116	21	1	ஸ்ரீ பிரகதீசுவர சுவாமிக்கு அன்னபிஷேகத் துக்கு சம்பா அரிசி 15 கலம்.
120	42	6	தஞ்சாவூர் கோட்டை விஜய ராமசுவாமி கோயில் கோபுரம் கட்டுவதற்காக சக். 100.
149	9	3	பெரியகோயில் 108 சிவலிங்கங்கட்கு பூஜை நிவேதனம் எப்பொழுதும் நடக்க வேண்டிய தற்காக சென்னப்பட்டணம் மிஸ்த்தர் பாரிங்டன் அவர்களிடம் Deposit கொடுத்தது புலிவராகன் 5000
160	1	32	இதில் ஷெ செய்தி குறிப்பிடப்பட்டிருக் கின்றது.
169	1	4	சிவராத்திரியன்று பெரிய கோயில் சுவாமி தரிசனத்திற்கு ஜனங்கள் வருவதால் சிவகங்கை கோட்டையின் வாசலை இரவு 12 மணி நேரமும் திரந்து வைக்கிறது.

மூட்டை.	அயிட்டம்.	எண்.	செய்தி.
169	16	3	காமாட்சியம்மனுக்கு அற்பிசி பூரமன்று மஹாபிஷேகத்திற்கு விண்ணுற்றிலிருந்து திருமஞ்சனம் வருவதற்கு ஒரு யானையைக் கொடுக்கிறது.
123	12	5	மழை பெய்வதற்காக பெரியகோயில் நந்திக்கு அபிஷேக பூஜை நிவேதனத்திற்கு (ஜபத்திற்குக்கூட) ½ மண்டலம் தினம் 1.க்கு 3½ சக்.
138	65	3	பெரியகோயில் நந்திக்கு மிளகு அபிஷேகம் 3 நாட்களுக்கு சிலவு சக். 21.
105	46		1803-ம் வருஷம் ஸ்ரீ பிரகதீசுவர சுவாமி கோயிலில் அஷ்டபந்தன கும்பாபிஷேகத்திற்கு, பிள்ளையார் 133 சிவலிங்கம், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர் சிலவு 550 சக்.
	167		1800 மன்னார்குடி ராஜகோபால சுவாமிக்கு தெப்பத்திற்காக ஹரித்ராநதி மராமத்து சிலவு 10½ சக்கரம்.
104	6		1795 ஹைதர் கலாபுக்குப் பிறகு சாக்கோட்டையிலிருக்கும் அமிருதகலசநாத சுவாமிக்கு கும்பாபிஷேகம் செய்ய உத்தரவு.
127	15	3	குடமுருட்டி நதியின் பாலம் கட்டுவதற்கு சிலவு சக். 3000.
121	13	8	தியாகராஜ சுவாமி திருவிடைமருதூருக்குப் பிரயாணம் வந்தபோது கூடவந்த யானை, குதிரைகளுக்கு தீனி சிலவு சக்கரம் 38 பணம் 8⅛.
	39	2	வடவாறு வெட்ட சிலவு சக். 4000.
120	14	1	மாயூரநாத சுவாமி கோயிலின் பெரிய கோபுரத்திற்கு சக். 1000.
144	7	1	1807-ல் ஆங்கிலேய சங்கீத புத்தகங்கள் வாங்கிய செய்தி.

மூட்டை.	அயிட்டம்.	எண்.	செய்தி
137	13	2	1805-ல் காசியிலிருந்து கிரந்தங்களை எழுதி சர்க்காருக்கு அனுப்புவதற்கு திருப்பனந்-தாளில் காசி தம்பிரானிடம் ரூ. 1000 அனுப்பினது சேர்ந்ததென்று தம்பிரான் எழுதிய பதில் கடிதம்
137	15	1	1815ல் யாழ்ப்பாணத்தில் நைவேத்யேஸ்வர சுவாமிக்கு பூஜை நிவேதனத்திற்கு உபயம் சக். 31⅞.
104	89		1847-ம் வருடம் ஜூன் மாதம் 11௳ திருவையாற்றிலுள்ள காவேரிப்பாலம் கட்டி முடிந்தது. மகாராஜா வந்து பாலம் திறக்க வேணுமென்று எழுதிய மனு.
111	116	1	1849ல் மதுரை மீனாட்சி அம்மனுக்குக் கும்பாபிஷேகம் வகையருவுக்கு ரூ. 2030.
76	6	8	கோட்டூரிலிருந்து வலம்புரி சங்கொன்று ரூ. 169-க்கு வாங்கினார்கள்.
116	4	1	1827ல் பழைய சிவகங்கைக் குளத்தின் வேலைக்கு தளவாடம், கூலி வகையருவுக்கு சக். 1000.
140	12	13	சௌ. முக்தாபாயி தஞ்சை பெரிய கோயிலில் 100000 (லட்சம்) விளக்கேற்றின செலவு சக். 21. சௌ. அகல்யாபாய் ஷை கோயில் சுவாமிக்கு 100000 (லட்சம்) தாமரைப்பூ அருச்சனை செய்த விபரம்.

இவைபோன்ற இன்னும் அநேக செய்திகள் ஷை மோடி ஆவணங்களில் உள்ளன. யாவையும் தர விரியும் என சிலவற்றையே தரப்பட்டுள்ளன. தஞ்சை அரண்மனை சரசுவதி மகாலிலுள்ள 'அரச ஆவணங்கள்' (Raj Records) 'இ' (c) பிரிவைச் சார்ந்ததாகும் இவைகள், அழிப்பதற்காகவே இருந்தவை. இவைகளின் 'அ, ஆ' (A, B) பிரிவுகள் சென்னையில் உள்ளன. அழிப்பதெற்கென உள்ள ஆவணங்களிலேயே இத்துணை சுவையான செய்திகள் உளவாயின், முதலிரண்டு பிரிவுகளில் மிகவும் இன்றியமையாத செய்திகள் இருக்கக்கூடுமென்பதில் ஐயமில்லை. ஷை முதலிரண்டு பிரிவுகளைக்கொண்ட ஆவணங்கள் தஞ்சை சரசுவதி மகாலை அடையுமாயின் மக்கள் பயனடைவர்.

வாழ்க தஞ்சை மராத்திய மன்னர்கள். வளர்க அவர்தம் வழித்தோன்றல்கள்.

கோயில்கள் முற்றும்.

வளர்க்கிறது. உடம்புக்கு வன்மையைகொடுக்கிறது, மூலைப்பாலை உண்டாக்கு கிறது, மலச்சிக்கலை நீக்குகிறது. ஓய்ச்சல், தலைச்சுற்றல், வெறி, அலக்ஷிமி, ச்வாஸம் (Asthma) இருமல், அதிகநாவறட்சி, அதிகமானபசி, நாட்பட்டஜ்வரம், நீர்ச்சுருக்கு, ரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள், இவைகளின் வழியாக ரக்தம் கசியுதல்) இவைகளைப்போக்குகிறது.

(பசுவின்பால் கிடைக்கவசதி இல்லாதவர்கள் கால்பங்கு ஜலத்தைசேர்த்து காய்ச்சிய எருமைப்பாலை ஜீர்ணசக்திக்கேற்றபடி சாப்பிடலாம்)

அப்பொழுதே கறந்த பாலின்குணம்:—

... ... धारोष्णममृतोपमम् । (अष्टाङ्गसंग्रहः)

அப்பொழுதே கறந்தபாலை (எந்தப்பாலானாலும் சரி) கறந்தசூடு ஆறுவதற்கு முன்பே சாப்பிடுவது அமிருதத்திற்கொப்பானது.

(இதற்கு தாரோஷ்ணம் என்றுப்பெயர். தாரோஷ்ணமாகச்சாப்பிடு வதற்கு பசுவின் பால் மிகவும் சிறந்தது)

எருமைப்பாலின் குணம் :—

हितमत्यग्न्यनिद्रेभ्यो गरीयो माहिषं हिमम् । (अष्टाङ्गसंग्रहः)

எருமைப்பால் அதிக பசி உள்ளவர்களுக்கும், ஆழ்ந்த தூக்கமில்லாதவர் களுக்கும் இதமானது. இது சுகமாக ஜீர்ணமாகக்கூடியதல்ல, குளுமையானது.

வெள்ளாட்டுப்பாலின் குணம் :—

छागं कषायमधुरं शीतं ग्राहि पयो लघु ।
रक्तपित्तातिसारघ्नं क्षयकासज्वरापहम् ॥ (चरकसंहिता)

வெள்ளாட்டுப்பால் துவர்ப்பு, இனிப்பு இந்த சுவைகளுடையது, குளுமை யானது, இளகிப்போகும் மலத்தைக்கட்டக்கூடியது சுகமாக ஜீர்ணமாகக்கூடியது ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள் மயிர்க்காம்புகள், இவை வழியாக ரக்தம் கசியுதல்) பேதி, க்ஷயரோகம், இருமல், ஜ்வரம் இவைகளைப் போக்குகிறது.

இதுச்வாஸரோகத்திற்கும் (Asthma) ஏற்றது இதை துணியில் வடிகட்டி, காய்ச்சி, சிறிது சூடாக இருக்கும் போதே பருகவேண்டும்)

தேனின் குணம் :—

चक्षुष्यं छेदि तृड्श्लेष्मविषहिध्मास्रपित्तनुत् ।
कुष्ठमेहकृमिच्छर्दिश्वासकासातिसारजित् ॥

व्रणशोधनसन्धानरोपणं वातलं मधु ।
रूक्षं कषायमधुरं ... ... ॥

नानाद्रव्यात्मकत्वाच्च योगवाहि परं मधु ॥ (अष्टाङ्गसंग्रहः)

தேன் கண்களுக்கு இதமானது, கட்டி இருக்கும் கபம் முதலியவற்றை அறுத்து வெளியேற்றுகிறது, தண்ணீர் தாஹம், கபரோகம், விஷம், விக்கல், ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள், மயிர்க்காம்புகள், இவைகளின் வழியாக ரக்தம் கசியுதல்) குஷ்டம், பிரமியம் (Diabetes) கிருமிரோகம், வாந்தி, ச்வாஸம் (Asthma) இருமல், பேதி, இவைகளைப்போக்குகிறது, விரணத்தில் சீழ் முதலியது உண்டாகாதபடி அதை சுத்தம் செய்கிறது, பிளவுகண்ட மாம்ச பாகங்களையும், ஒடிந்துபோன எலும்புகளையும் ஒட்டும்படி செய்கிறது. வாயுவை அதிகப்படுத்துகிறது. வரட்சியானது, துவர்ப்பு, இனிப்புச்சுவைகளை உடையது; தேன் பலவிதமான ரஸ வீர்யங்களையுடைய தான மலர்களிலிருந்து சேமிக்கப்படுவதால் "யோகவாஹி" (தான் எந்தப்பொருளுடன் சேருகிறதோ அந்தப்பொருளுடைய குணத்தை அதிகப்படுத்தும் தன்மையை அதிகமாக கொண்டுள்ளது) பொருளாக இருக்கிறது.

(தேனில் சுண்ணாம்பு சத்தும் (Calcium) இரும்புச்சத்தும் (Iron) உள்ளதாக மேல் நாட்டு விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்)

தேனை உபயோகிக்கக் கூடாத நிலை :—

उष्णमुष्णार्तमुष्णे च युक्तं चोष्णैर्निहन्ति तत् । (अष्टाङ्गसंग्रहः)

தேன் சுடவைக்கப்பட்டு உட்கொள்ளப்பட்டாலும், சூடு அதிகமாகவுள்ள மனிதனால் உட்கொள்ளப்பட்டாலும், வெப்பநிலையில் உட்கொள்ளப்பட்டாலும், சூடானப்பொருளுடன் கூட்டி உட்கொள்ளப்பட்டாலும் உயிரை வாங்கும். (வாந்தி முதலியவற்றை உண்டாக்கும் முறைகளில் தேன் சூடான பொருட்களுடன் சேர்க்கப்பட்டு உட்கொள்ளப்பட்டாலும் உடனே வெளிவருவதால் கெடுதியை உண்டாக்காது).

மாதுளை கனியின் குணம் :—

उद्रिक्तपित्तान् जयति त्रिदोषान् स्वादु दाडिमम् ।
पित्ताविरोधि नात्युष्णमम्लं वातकफापहम् ॥
सर्वं हृद्यं लघु स्निग्धं ग्राहि रोचनदीपनम् । (अष्टाङ्गसंग्रहः)

तत्तु स्वादु त्रिदोषघ्नं तृड्दाहज्वरनाशनम् ।
हृत्कण्ठमुखगन्धघ्नं तर्पणं शुक्रलं लघु ॥

कषायानुरसं ग्राहि स्निग्धं मेधाबलावहम् । (भावप्रकाशः)

இனிப்புச்சுவையுள்ள மாதுளை பித்தத்தை அதிகமாகக் கொண்ட ஸன்னி பாததோஷத்தைப் போக்குகிறது. புளிப்புச்சுவையுள்ள மாதுளை பித்தத்தை அதிகப்படுத்துவதல்ல, அதிகவெப்பத்தையும் உண்டாக்குவதல்ல, வாயு, கபம் இவைகளைப்போக்குகிறது. இரண்டுவிதமான மாதுளைக் கனிகளும் இதயத்திற்கு நன்மை செய்பவை. சுகமாக ஜீர்ணமாகக்கூடியவை. எண்ணெய்ப்பசை யுள்ளவை. இளகிப்போகும் மலத்தைக்கட்டும் இயல்புடையவை. ஆகாரத்தில் ருசியை உண்டுபண்ணுகின்றன. பசித்தீயைத் தூண்டுகின்றன. இனிப்பு சுவையுள்ள மாதுளை தண்ணீர்தாகம், ஜ்வரம், இதயநோய், தொண்டைநோய், வாய் துற்நாற்றம் இவைகளைப்போக்குகிறது. உடம்பைத்தேற்றுகிறது, விந்துவை அதிகப்படுத்துகிறது.

இந்துப்பின் குணம் :—

चक्षुष्यं सैन्धवं हृद्यं रुच्यं लघ्वग्निदीपनम् ।
स्निग्धं समधुरं वृष्यं शीतं दोषघ्नमुत्तमम् ॥ (सुश्रुतसंहिता)

இந்துப்பு கண்களுக்கும் இதயத்திற்கும் ஹிதமானது. ஆகாரத்தில் ருசியை உண்டுபண்ணுகிறது. சுகமாக ஜீர்ணமாகக்கூடியது, பசித்தீயைத்தூண்டுகிறது, எண்ணெய்ப்பசையுள்ளது, சிறிது இனிப்பானது, ஆண்மையைவளர்க்கிறது. தணுமையானது, மூன்று தோஷங்களையும் போக்குகிறது, உப்புவகையில் சிறந்தது.

பொன்னுங்கண்ணியின் குணம் :—

पत्तूरो दीपनास्तिक्तः प्लीहार्शःकफवातजित् । (अष्टाङ्गहृदयम्)

பொன்னுங்கண்ணி பசித்தீயைத் தூண்டுகிறது, கைப்புச்சுவையுள்ளது. மண்ணீரலைப்பற்றியநோய், மூலம், கபம், வாயு இவைகளைப்போக்குகிறது (இது கண்ணுக்கும், கூந்தலுக்கும் நலம் செயயும்)

கரிசலாங்கண்ணியின் குணம் :—

भृङ्गारः कटुकस्तीक्ष्णो रूक्षोष्णः कफवातनुत् ।
केश्यस्त्वच्यः कृमिश्वास कासशोथामपाण्डुनुत् ॥
दन्त्यो रसायनो बल्यः कुष्ठनेत्रशिरोऽर्तिनुत् । (भावप्रकाशः)

கரிசலாங்கண்ணி கார்புச்சுவையுள்ளது. தீக்ஷ்ணமானது வரட்சியானது வெப்பத்தை உண்டாக்கக்கூடியது. கபத்தையும், வாயுவையும் போக்குகிறது. கூந்தலுக்கும் சர்மத்திற்கும் நலம் செய்யும். கிருமி, ச்வாஸம் (Asthma) இருமல்,

விக்கம், அஜீர்ணம், பாண்டு (Anaemia) குஷ்டம், கண்நோய், மண்டைநோய் இவைகளைப்போக்கும், பற்களுக்கு இதமானது, திரை, நரை, இவைகளைப்போக்கி நோயற்ற நடுவயதை நிலை நிறுத்துகிறது, உடம்பைதேற்றுகிறது.

கருவேப்பிலையின் குணம் :—

ग्राहि शस्तं विशेषेण ग्रहण्यर्शोविकारिणाम् ।
कालशाकं तु कटुकं दीपनं गरशोफजित् ॥ (चरकसंहिता)

கருவேப்பிலை இளகிப்போகும் மலத்தைக்கட்டும், நாட்பட்டபேதி, மூலம் இந்த நோய்கள் உள்ளவர்களுக்கு மிகவும் இதமானது, கார்புச்சுவையுள்ளது, பசித்தீயைத்தூண்டுகிறது. இடுவிஷம், விக்கம் இவைகளைப்போக்குகிறது.

காராக் கருணையின் குணம் :—

दीपनः सूरणो रुच्यः कफघ्नो विशदो लघुः ।
विशेषादर्शसां पथ्यः ... ... ॥ (अष्टाङ्गहृदयम्)

... ... प्लीहगुल्मविनाशनः ।
सर्वेषां कन्दशाकानां सूरणः श्रेष्ठ उच्यते ।
दद्रूणां कुष्ठिनां रक्तपित्तिनां न हितो हि सः ॥ (भावप्रकाशः)

காராக்கருணை பசித்தீயைத் தூண்டுகிறது. ஆகாரத்தில் ருசியை உண்டு பண்ணுகிறது, கபத்தை கண்டிக்கும், பசையில்லாதது, சுகமாக ஜீர்ணமாகக் கூடியது. மூலரோகம் உள்ளவர்களுக்கு மிகவும் இதமானது. மண்ணீரலை பற்றியநோய், குல்மம் இவைகளைப்போக்குகிறது, கிழங்கு வகைகளுள் காராக் கருணை மிகவும் சிறந்தது, இது படை, குஷ்டம், ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள் இவைகளின் வழியாக ரக்தம் கசியுதல்) இந்த நோய்கள் உள்ளவர்களுக்கு நல்லதல்ல.

மணத்தக்காளியின் குணம் :—

काकमाची त्रिदोषघ्नी स्निग्धोष्णा स्वरशुक्रदा ।
तिक्ता रसायनी शोथकुष्ठार्शोज्वरमेहजित् ।
कटुर्नेत्रहिता हिक्काच्छर्दिहृद्रोगनाशिनी ॥ (भावप्रकाशः)

மணத்தக்காளி மூன்று தோஷங்களையும் போக்குகிறது. எண்ணெய்ப் பசையுள்ளது, வெப்பத்தை உண்டுபண்ணும். நல்ல குரலை தருகிறது, விந்துவை அதிகப்படுத்துகிறது. கசப்பு, கார்புச்சுவைகளுள்ளது, திரை, நரை, இவைகளைப்

போக்கி நோயற்ற நடுவயதை நிலை நிறுத்துகிறது, வீக்கம், குஷ்டம், மூலம், ஜ்வரம், பிரமியம் (Diabetes) வீக்கல், வாந்தி, இதயநோய் இவைகளைப்போக்கு கிறது. கண்களுக்கு இதமானது.

புளியாரையின் குணம் :—

दीपनी चोष्णवीर्या च ग्राहिणी कफमारुते ।
प्रशस्यतेऽम्लचाङ्गेरी ग्रहण्यर्शोहिता च सा ॥ (चरकसंहिता)

புளியாரை பசித்தீயைத்தூண்டுகிறது, வெப்பமுண்டாக்குகிறது, இளகிப் போகும் மலத்தை கட்டும் இயல்புடையது, கபம், வாயு, இவைகளுக்குச் சம்பந்த மான நோய்களில் இதமானது, கிராணி (நாட்பட்ட பேதி) மூலம், இவைகளுக்கும் இதமானது.

உள்ளிப்பூண்டின் குணம் :—

स्निग्धोष्णतीक्ष्णः कटुपिच्छिलश्च
गुरुः सरः स्वादुरसश्च बल्यः ।
वृष्यश्च मेधास्वरवर्णचक्षु-
भग्नास्थिसन्धानकरो रसोनः ॥

हृद्रोगजीर्णज्वरकुक्षिशूल-
विबन्धगुल्मारुचिकासशोफान् ।
दुर्नामकुष्ठानलसादजन्तु-
समीरणश्वासकफांश्च हन्ति ॥ (सुश्रुतसंहिता)

न पतन्ति स्तनाः स्त्रीणां नित्यं लशुनसेवनात् ।
न रूपं भ्रश्यते चासां न प्रजा न बलायुषी ॥

दृढमेधाविदीर्घायुर्दर्शनीयप्रजा भवेत् । (काश्यपसंहिता)

உள்ளிப்பூண்டு எண்ணெய்ப்பசையுள்ளது, தீக்ஷ்ணமானது இனிப்பு, கார்ப்புச்சுவைகளுள்ளது. பிசுபிசுப்புள்ளது, எளிதில் ஜீர்ணமாகாதது, உடம்பில் பரவும் தன்மையுள்ளது உடம்பைத் தேற்றுகிறது, ஆண்மையை வளர்க் கிறது, புத்தியை வளர்க்கிறது, நல்ல குரலைத்தருகிறது. சர்மத்திற்கு ஒளியை உண்டாக்குகிறது, கண்களுக்கு இதமானது, ஒடிந்துபோன எலும்புகளை ஒட்டும்படி செய்கிறது. இதயநோய், நாட்பட்ட ஜ்வரம், வயிற்றுவலி, மலச்சிக்கல், குல்மம் (வயிற்றில் உண்டாகும் ஒருவிதக்கட்டி Abdominal Tumour) ருசியின்மை,

இருமல், வீக்கம், மூல (Piles) குஷ்டம், பசித்தீக்குறைவு, கிருமி, வாயு, ச்வாஸம் (Asthma) கபம் இவைகளைப்போக்குகிறது உள்ளிப்பூண்டை உட்கொள்ளுவதால் பெண்களின் முலைகள் சரிவதில்லை, அழகு, பிரஜை, வலுவு, ஆயுள் இவைகளும் சிதறுவதில்லை. வலுவு, அறிவு, நீண்ட ஆயுள், அழகு, இவற்றுடன் கூடிய குழந்தையையுடையவளாகவும் ஆகின்றாள்.

வெங்காயத்தின் குணம் :—

श्लेष्मलो मारुतघ्नश्च पलाण्डुर्न च पित्तहृत् ।
आहारयोगी बल्यश्च गुरुर्वृष्योऽथ रोचनः ॥ (चरकसंहिता)

कफवातार्शसां पथ्यः स्वेदेऽभ्यवहृतौ तथा । (अष्टाङ्गहृदयम्)

வெங்காயமானது கபத்தை அதிகப்படுத்தும், வாயுவை கண்டிக்கும். பித்தத்தைப் போக்குவதில்லை, சாப்பாட்டில் உபயோகிக்கக்கூடியது, உடம்புக்கு வலுவைக்கொடுக்கிறது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல, ஆகாரத்தில் ருசியை உண்டாக்குகிறது, கபத்தினுலும், வாதத்தினுலும் உண்டான மூலரோகத்தில் ஒற்றடம் கொடுப்பதற்கும், உட்கொள்ளுவதற்கும், இதமானது.

சாம்பற்பூசனியின் குணம் :—

कूष्माण्डं बृंहणं वृष्यं गुरु पित्तास्रवातनुत् ।
वस्तिशुद्धिकरं चेतोरोगहृत् सर्वदोषजित् ॥ (भावप्रकाशः)

சாம்பற்பூசனி உடம்பை தேற்றுகிறது, ஆண்மையை வளர்க்கிறது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல, பித்தம், ரக்தம், வாயு, இவைகளுக்கு சம்மந்தமான வியாதிகளைப்போக்கும், மூத்திரப்பையை சுத்தி செய்யும். மனத்திற்கு சம்பந்தமான நோய்களையும், எல்லா தோஷங்களையும் போக்குகிறது.

தேங்காயின் குணம் :—

नारिकेलफलं शीतं दुर्जरं वस्तिशोधनम् ।
विष्टम्भि बृंहणं बल्यं वातपित्तास्रदाहनुत् (भावप्रकाशः)

தேங்காய் குளுமையானது, எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல, மூத்திரப்பையை சுத்தம் செய்கிறது, வயிற்றுப்பொருமலை உண்டாக்குகிறது, உடம்பை தேற்றுகிறது. வன்மையைத்தருகிறது. வாயு, பித்தம், ரக்தம் இவற்றிற்கு சம்பந்தமான நோய்கள் எரிச்சல் இவற்றைப் போக்குகிறது.

முட்டையின் குணம் :—

धार्तराष्ट्रचकोराणां दक्षाणां शिखिनामपि ।
चटकानां च यानि स्युरण्डानि च हितानि च ॥

क्षीणरेतःसु कासेषु हृद्रोगेषु क्षतेषु च
मधुराण्यविदाहीनि सद्यो बलकराणि च ॥ (चरकसंहिता)

அன்னப்பறவை, சகோரபக்ஷி, கோழி, மயில், குருவி இவற்றின் முட்டைகள் விந்து குறைவு, இருமல், இதயநோய், க்ஷயரோகம் இவைகள் உள்ளவர்களுக்கு இதமானவை. இனிப்புச்சுவையுள்ளவை, நெஞ்செரிவை உண்டு பண்ணுதவை, உடம்புக்கு உடனே வலுவையும் உண்டாக்கக்கூடியவை.

காய்கறிகளைச் சமைப்பதில் சிறந்தமுறை—

स्विन्नं निष्पीडितं शाकं हितं स्यात्स्नेहसंस्कृतम् । (सुश्रुतसंहिता)

நன்ருக வேகவைக்கப்பட்டதும், நன்ருகப் பிழியப்பட்டதும், நெய், நல்லெண்ணெய் முதலியவற்ருல் பக்குவம் செய்யப்பட்டதுமான காய்கறிகளின் சமையல் இதமானது.

(மேல் கூறியபடி செய்யப்பட்ட காய்கறி சமையல் சுகமாக ஜீர்ணமாகிறது, உடம்புக்கு நலத்தைக் கொடுக்கிறது, வேகவைககப்படாமல் வதக்கப்பட்டதும், பொரிக்கப்பட்டதுமான காய்கறிசமையல் சுகமாக ஜீர்ணமாகாமல் பல்வேறு நோய்களை உண்டாக்கக்கூடுமென்று நம்நாட்டு மருத்துவ ஆசிரியர்களின் கருத்து.

இன்று நவீன மருத்துவ விஞ்ஞானிகள் காய்கறிகளை அதிக நேரம் வேகவைப்பதாலும், கொதித்த நீரை அகற்றுவதாலும், அவற்றிலுள்ள சத்துப் பொருட்கள் (வைட்டமின்) குறைந்துவிடுகின்றன. ஆகவே இவைகளை பசுமையாகவே சாப்பிடுவதால் தான் முழுபலனை அடைய முடியும் என்று கூறுகிருர்கள், இதற்கு உதாரணமாக மாடுபோன்ற பிராணிகளை காட்டுகிருர்கள், ஆனல் மனிதர்களுக்குள்ள ஜீர்ணசக்தியும் மாடுபோன்ற பிராணிகளுக்குள்ள ஜீர்ண சக்தியும் ஒரேவிதமானதா? என்பதுதான் ஆராயவேண்டியிருக்கிறது.)

உபயோகிக்கத்தகாத இலைக்கீரை :—

कर्कशं परिजीर्णं च कृमिजुष्टमदेशजम् ।
वर्जयेत्पत्रशाकं तद्यदकालविरोहि च ॥ (सुश्रुतसंहिता)

முற்றிப்போனதும், பழையதாகி விட்டதும், பூச்சிப்பிடித்ததும், அசுத்தமான இடத்தில் பயிராகியதும், அததற்கேற்ற காலத்தைத் தவிர்த்து மற்ற காலத்தில் உண்டானதுமான இலைக்கீரையை உபயோகிக்கக்கூடாது. (புடலங்காய் முதலிய கொடிகளின் காய்களும் கீரைவகையைச்சேர்ந்தவை.)

உபயோகிக்கத்தகாத கிழங்கு :—

बालं ह्यनार्तवं जीर्णं व्याधितं क्रिमिभक्षितम् ।
कन्दं विवर्जयेत्सर्वं यो वा सम्यङ्न रोहति ॥ (सुश्रुतसंहिता)

மிகவும் இளசானதும். அதற்கேற்ற காலத்தை தவிர்த்து மற்றகாலத்தில் உண்டானதும், பழையதாகி விட்டதும், நோயுள்ளதும், பூச்சிபிடித்ததுமான கிழங்கை உபயோகிக்கக்கூடாது. அவ்வாறே முளைக்கச்சக்தியற்ற கிழங்கையும் உபயோகிக்கக்கூடாது. (முள்ளங்கியை மட்டும் இளசானதாகவே உபயோகிக்க வேண்டுமென்றும், காய்ந்துபோனதையும் உபயோகிக்கலாமென்றும், இளம் முள்ளங்கியின் குணம், முள்ளங்கிவற்றலின் குணம், என்னும் தலைப்புகளில் கூறப் பட்டுள்ளது 41-வது பக்கம் காண்க).

உபயோகிக்கத் தகாத கனி :—

व्याधितं कृमिजुष्टं च पाकातीतमकालजम् ।
वर्जनीयं फलं सर्वमपर्यागतमेव च ॥ (सुश्रुतसंहिता)

நோயுள்ளதும், பூச்சி பிடித்ததும், மிகவும் பழுத்துப்போனதும், அததற்கேற்ற காலத்தைத்தவிர்த்து மற்றகாலத்தில் உண்டானதும், நன்றாகப் பழுக்காததுமான கனியை விட்டுவிடவேண்டும்.

உபயோகிக்கத்தக்க கனி :—

फलेषु परिपक्वं यत् गुणवत्तदुदाहृतम् ।
बिल्वादन्यत्र विज्ञेयमामं तद्धि गुणोत्तरम् ॥ (सुश्रुतसंहिता)

கனிகளில் வில்வபழத்தைத் தவிர்த்து மற்றது நன்றாகப் பழுத்ததுதான் குணமுள்ளது. வில்வத்தின் பிஞ்சுதான் குணத்தில் சிறந்தது.

திராக்ஷை முதலியவை காய்ந்துபோனவைதான் சிறந்ததென்பது—

द्राक्षाबिल्वशिवादीनां फलं शुष्कं गुणाधिकम् । (भावप्रकाशः

திராக்ஷை, வில்வம், கடுக்காய் மரம் முதலியவற்றின் கனி நன்றாகப் பழுத்து உலர்ந்தது குணத்தில் சிறந்தது.

தினந்தோறும் உபயோகிக்கத்தகாத உணவுப்பொருட்கள் :—

किलाटदधिकूचीकाक्षारशुक्तामभूलकम् ।
कृशशुष्कवराहाविगोमत्स्यमाहिषामिषम् ॥

माषनिष्पावशालूकबिसपिष्टविरूढकम् ।
शुष्कशाकानि यवकान् फाणितं च न शीलयेत् ॥ (अष्टाङ्गहृदयम्)

திரிந்துபோனபால், தயிர், தயிரையோ மோரையோ பாலில் சேர்த்து பக்குவம் செய்யப்பட்டது, யவக்ஷாரம் முதலிய காரச்சரக்குகள், புளிப்பான ஒருவித

மது, பச்சை முள்ளங்கி, இளைத்த உடம்புள்ள மிருகங்களின் மாமிசம், உலர்ந்து போன மாமிசம், பன்றி, செம்மறியாடு, பசு, மீன், எருமை, இவற்றின் மாமிசம், உளுந்து, மொச்சை, அல்லிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, மாப்பண்டம், முளைத்த தான்யம், உலர்ந்துபோன காய்கறிகள், (வற்றல்) யவகம் (ஒருவிதமான சிறிய கோதுமை) தேன்பாகு, இவற்றை தினப்படி உபயோகிக்கக்கூடாது.

(எப்போதாவது ஒரு சமயத்தில் மேல் கூறியவற்றை உபயோகிப்பதால் கெடுதல் உண்டாகாது. தயிர், உளுந்து இவைகளை வாரத்தில் ஒருமுறை அல்லது இரண்டுமுறை உபயோகித்து வரலாம்.

பசுவின் தயிரின் குணம் :—

रोचनं दीपनं वृष्यं स्नेहनं बलवर्धनम् ।
पाकेऽम्लमुष्णं वातघ्नं मङ्गल्यं बृंहणं दधि ॥

पीनसे चातिसारे च शीतके विषमज्वरे ।
अरुचौ मूत्रकृच्छ्रे च कार्श्ये च दधि शस्यते ॥ (चरकसंहिता)

பசுவின் தயிர் ருசியை உண்டுபண்ணுகிறது, பசித்தீயைத் தூண்டுகிறது. ஆண்மையை வளர்க்கிறது, உடம்பில் நெய்ப்பசையை உண்டுபண்ணுகிறது, வன்மையை கொடுக்கிறது, ஜீர்ணமாகிய பின்பு புளிப்புச்சுவை உள்ளது. வெப்பத்தை உண்டாக்குகிறது, மங்களகரமானது, உடம்பைத் தேற்றுகிறது, ஜலதோஷம், பேதி, குளிருடன் உண்டாகும் முறை ஜ்வரம், ருசியின்மை, நீர்ச் சுருக்கு உடம்பு இளைப்பு இவற்றில் சிறந்தது.

எருமைத் தயிரின் குணம் :—

विपाके मधुरं वृष्यं वातपित्तप्रसादनम् ।
बलासवर्धनं स्निग्धं विशेषाद्दधि माहिषम् ॥ (सुश्रुतसंहिता)

எருமைத்தயிர் ஜீர்ணமாகிய பின்பும் இளிப்புச்சுவையுள்ளது. ஆண்மையை வளர்க்கிறது. வாயு, பித்தம், இவற்றை குறைக்கிறது. கபத்தை அதிகப்படுத்து கிறது. அதிகமாக நெய்ப்பு உள்ளது.

தயிரை உபயோகிப்பதில் நியமம் :—

न नक्तं दधि भुञ्जीत न चाप्यघृतशर्करम् ।
नामुद्गयूषं नाक्षौद्रं नोष्णं नामलकैर्विना ॥ (चरकसंहिता)

न रात्रौ दधि भुञ्जीत न च निर्लवणं तथा । (भावप्रकाशः)

தயிரை இரவில் உபயோகிக்கக்கூடாது. இதை நெய், சர்க்கரை, பயத்தம் கஞ்சி, தேன், நெல்லிக்காய் இவற்றில் ஏதேனும் ஒன்றோடு சேர்க்காமலும், சுடவைத்தும், உபயோகிக்கக்கூடாது. அவ்வாறே தயிரை உப்புடன் சேர்க்காமலும் உபயோகிக்கக்கூடாது.

தயிரை உபயோகிக்கத்தகாத நிலைமை :—

शरद्ग्रीष्मवसन्तेषु प्रायशो दधि गर्हितम् ।
रक्तपित्तकफोत्थेषु विकारेष्वहितं च तत् ॥ (चरकसंहिता)

தயிரை சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை இந்தமாதங்களிலும், ரக்தம், பித்தம், கபம், இவற்றின் சம்பந்தமான நோய்களிலும் உபயோகிக்கக்கூடாது,

உளுந்தின் குணம் :—

वृष्यः परं वातहरः स्निग्धोष्णमधुरो गुरुः ।
बल्यो बहुमलः पुंस्त्वं माषः शीघ्रं ददाति च ॥ (चरकसंहिता)

भिन्नमूत्रमलः स्तन्यो मेदःपित्तकफप्रदः ।
गुदकीलार्दितश्वासपक्तिशूलानि नाशयेत् ॥ (भावप्रकाशः)

உளுந்து ஆண்மையை வளர்க்கிறது [illegible] எண்ணெய்ப் பசையுள்ளது. வெப்பத்தை உண்டாக்குகிறது, இனிப்புச் சுவையுள்ளது. சுலபமாக ஜீரணமாகக் கூடியதல்ல, வலிமையை அளிக்கிறது மலத்தை அதிகப்படுத்துகிறது, விந்துவை உடனே வளர்க்கிறது, மலம், மூத்திரம் இவைகளை வெளியேற்றுகிறது முலைப்பாலை வளர்க்கிறது. கொழுப்பு பித்தம், கபம் இவைகளை விருத்திசெய்கிறது, மூலம் (Piles) அர்திதம் (முகத்தில் உணர்ச்சியின்றி வாய் கோணலாகிவிடும் நோய் (Facial Paralysis), ச்வாஸம் (Asthma), உணவு ஜீர்ணமாகும்போது உண்டாகும் வயிற்றுவலி, இவைகளைப்போக்குகிறது.

மாப்பண்டம் முதலியவற்றை உண்பதில் நியமம் :—

तण्डुलान् पृथुकांश्चापि सर्वान् पिष्टमयांस्तिलान् ।
न जातु भुक्तवान् खादेन्मात्रां खादेद्बुभुक्षितः ॥ (भेलसंहिता)

द्विगुणं च पिबेत्तोयं सुखं सम्यक् प्रजीर्यति । (चरकसंहिता)

அரிசி, (பொறிமாவு) அவல், எல்லாவிதமான மாப்பண்டங்கள், எள்ளு, இவற்றை போஜனத்திற்கு பின்பு சாப்பிடக்கூடாது. பசியுள்ளவன் இவைகளை

ஜீரணசக்திக்குத் தகுந்த அளவில் சாப்பிட வேண்டும், இவ்வாறு மாப்பண்டம் முதலியவற்றை சாப்பிடும்போது இரண்டு மடங்கு ஜலத்தைப் பருகவேண்டும். இதனால் இந்த உணவு எளிதில் நன்றாக ஜீர்ணமாகின்றது.

(பொறி மாவு முதலியவற்றை நெய், சர்க்கரை இவற்றுடன் கூட்டியே சாப்பிட வேண்டும். இவற்றை இரவில் சாப்பிடுவதும் நல்லதல்ல.)

பொரிமாவின் குணம் :—

मधुरा लघवः शीताः सक्तवः शालिसंभवाः ।
ग्राहिणो रक्तपित्तघ्नास्तृष्णाच्छर्दिज्वरापहाः ॥ (चरकसंहिता)

कण्ठनेत्रामयक्षुत्तृट्श्रमच्छर्दिव्रणापहाः ।
सक्तवो लघवः पानात्सद्य एव बलप्रदाः ॥ (अष्टाङ्गसंग्रहः)

பொறிமாவு இனிப்பானது, சுகமாக ஜீர்ணமாகக்கூடியது, குளுமையானது, மலத்தைக்கட்டக்கூடியது, ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மல துவாரங்கள், மயிர்க்கால்புகள் இவற்றின் வழியாக ரகதம் கசியுதல்) தண்ணீர் தாஹம், வாந்தி, ஜ்வரம், தொண்டை நோய், கண் நோய், பசி, ஓய்ச்சல், புண் இவைகளைப் போக்குகிறது. தண்ணீரில் கலக்கிக் குடிப்பதால் உடம்புக்கு உடனே பலமுண்டாக்குகிறது.

அவலின் குணம் :—

पृथुका गुरवः स्निग्धाः बृंहणाः कफवर्धनाः ।
बल्याः सक्षीरभावात्तु वातघ्ना भिन्नवर्चसः ॥ (सुश्रुतसंहिता)

அவல் சுகமாக ஜீர்ணமாகக்கூடியதல்ல. எண்ணெய்ப் பசையுள்ளது. உடம்பை தேற்றுகிறது. கபத்தை அதிகப்படுத்துகிறது. உடம்புக்கு வலுவை உண்டுபண்ணுகிறது. அவல் பாலுள்ளதானபடியால் வாயுவை போக்குகிறது. மலச்சிக்கலை நீக்குகிறது.

நெற்பொறியின் குணம்:—

लाजास्तृट्छर्द्यतीसारमेहमेदःकफच्छिदः ।
कासपित्तोपशमना दीपना लघवो हिमाः ॥ (अष्टाङ्गसंग्रहः)

நெல் பொறி தண்ணீர் தாகம், பேதி, நீரிழிவு, ஊழைச்சதை, கபம், இருமல், பித்தம் இவைகளைப்போக்குகிறது. பசித்தீயைத் தூண்டுகிறது, சுகமாக ஜீர்ணமாகும். குளிர்ச்சியை உண்டுபண்ணுகிறது.

நெல் பொறிமாவின் குணம் :—

तृट्छर्दिदाहघर्मार्तिनुदस्तत्सक्तवो मताः ।
रक्तपित्तहराश्चैव दाहज्वरविनाशनाः ॥ (सुश्रुतसंहिता)

நெல் பொறி மாவு தண்ணீர்தாகம், வாந்தி, எரிச்சல், வெப்பம், ரக்த பித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள், இவற்றின் வழியாக ரக்தம் கசியுதல்) உடம்பு எரிச்சலுடன் கூடிய ஜ்வரம் இவைகளைப் போக்குகிறது.

புளிப்புச் சுவையுள்ளவைகளையும் கனிகளையும் பாலுடன் சாப்பிடக்கூடா தென்பது:—

विरुद्धमम्लं पयसा सह सर्वं फलं तथा । (अष्टाङ्गहृदयम्)

புளிப்புச்சுவையுள்ள கெட்டியான பொருட்களும், திரவமான பொருட்களும் பாலுடன் உபயோகிப்பதற்குத் தகாதவை. அவ்வாறே எல்லாக்கனிகளும் பாலுடன் உட்கொள்ளத்தகாதவையாகும்.

(பாலை சாப்பிட்ட பிறகும் மேல் கூறியவற்றை உட்கொள்ளக்கூடாது. இப்பொழுது பால், பழம் இவற்றை ஒரே சமயத்தில் ஆகாரமாக உட்கொள்ளும் பழக்கம் இருந்து வருகிறது. இது உடனடியாக எவ்வித கெடுதியையும் உண்டாக்குவதில்லை என்றாலும் பிற்காலத்தில் தீமையை உண்டாக்கக்கூடும்.

கொள் முதலியவற்றை பாலுடன் உட்கொள்ளக்கூடாதென்பது :—

तद्वत्कुलत्थवरककङ्गुवल्लमकुष्ठकाः । (अष्टाङ्गहृदयम्)

அவ்வாறே கொள், வரகம் என்கின்ற நெல், கம்பு, வல்லமென்கிற ஒருவித பருப்பு, காட்டுப்பயறு இவைகளும் பாலுடன் உட்கொள்ளத்தகாதவை.

முள்ளங்கி, பசுங்கீரை வகைகள் இவற்றை உட்கொண்டு பாலை குடிக்கக் கூடாதென்பது :—

भक्षयित्वा हरितकं मूलकादि पयस्त्यजेत् । (अष्टाङ्गहृदयम्)

முள்ளங்கி, பசுமையான கீரை வகைகள் இவற்றை உட்கொண்ட உடனே பாலை குடிக்கக்கூடாது.

பாலுடன் உப்பை உட்கொள்ளக்கூடாதென்பது;—

क्षीरेण लवणं नाभ्यवहरेत् (अष्टाङ्गसंग्रहः)

பாலுடன் உப்பை கூட்டி உட்கொள்ளக்கூடாது.

தேரர் அருளிச்செய்த

சிறுநீர்க்குறி சோதனை

ஆசிரியர் :

டாக்டர் ஆ. சண்முகவேலன், M. A., B. O. L.,

சித்த மருத்துவ ஆராய்ச்சி ஆபீசர்,

மத்திய அரசாங்க

இந்திய வைத்திய நூல் ஆராய்ச்சித் துறை,

சரசுவதி மகால், தஞ்சை.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய நிர்வாகக் குழுவுக்காக

கௌரவக் காரியதரிசி

திரு. ஓ. ஏ. நாராயணசுவாமி, B. A., B. L., அவர்களால்

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாச அச்சகம், ஸ்ரீரங்கம்.

சகம் 1889 கி. பி. 1967

விலை ரூ. 0-75

PREFACE

The Siddha medical system is indigenous to Tamilnad and there is a considerable volume of very valuable material, yet in the hands of private individuals and institutions which would have to be gathered to provide ample material for study and research. Besides the large number of manuscripts available in the Sarasvati Mahal Library, many others have also been secured from outside and are being scrutinized and studied in our Literary (Medical) Research Unit. It has been keenly felt that considering the vast bulk of Siddha medical lore which has not received that amount of study which is needed, and the imperative need for bringing out the very valuable and unique methods available in this system, greater attention has to be focussed on the study and research of Siddha medical Literature.

Since almost all the Siddha medical works are written in classical Tamil, the object of the Literary Research Unit of the Sarasvati Mahal Library is to translate the Siddha medical works into Sanskrit, English and Hindi, so that the medical men all over India may be able to avail themselves of other systems of medicine and an integrated approach to the treatment of diseases by a synthesis of all these indigenous methods may be possible.

One such work is the *Therar Nīrkuri* and *Neikkuri*, which is a small treatise in Tamil verses, on the examination of urine. This is a very unique method, found exclusively in Siddha System, because it deals with the diagnosis of all kinds of diseases by the symptoms noticed in the urine. As it was already resolved by the Sub-committee of the Central Council of Indigenous Medical Research, Sarasvati Mahal, Thanjavur, that some of the small works might be published in the T. M. S. S. M. Library Journal, this work is being now published through the Journal.

The verses in *Therar Nirkuri* and *Neikkuri* are in lucid and easy Tamil, and the prose rendering by our Siddha Research Officer, Thiru A. Shanmugavelan, M. A., B O. L., is simple and clear. We record here our profound appreciation for the Siddha Research Officer of the Literary

Research Unit, who has edited, with Tamil notes, the valuable work in a scholarly manner through our Library Journal. The prose rendering brings the precious and useful knowledge contained in the work within the easy reach of all the doctors.

It is our fervent hope that not only the practitioners of Ayurvedic, Siddha and other Systems of medicine but also the general public of the Tamilnad will derive the fullest benefit of this publication.

O. A. Narayanaswami,
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

Thanjavur
1—10—1967

ஆசிரியரின் முன்னுரை

"சிறுநீர்க்குறி சோதனை' பற்றிய ஆராய்ச்சி வெளியீடு இது. இதை இயற்றியவர் தேரர் என்னும் சித்த மருத்துவப்புலவர். தமிழ்முனிவர் அகத்தியர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு தேரர் இந்நூலை இயற்றியதாகக் கூறுகின்றார். இதனை தேரர் கூறிய கீழ்வரும் பாடலி லிருந்து தெரிந்து கொள்ளலாம்

"இவ்வித மூத்திரத்தி னிலக்கண முற்று மந்தச்
செவ்விய மருத்து முன்னூல் செப்பிய வகைகளெல்லாம்
நவ்விபோல் விழியினளே : நாட்டின் மானிடருக்காக
அவ்விய மில்லாநெஞ்சத் தகத்திய னுரைத்ததாமே."

எனவே, பண்டைக்காலத்திலேயே சிறுநீரின் நிறம், குணம், குறி, முதலியவைகளை அறிந்து நோய் இன்னதென்று கண்டுபிடிக்குமுறை இருந்துவந்தது என்பது இதனால் தெரிகிறது. உலகில் வேறு எங்குமுள்ள வைத்திய முறையில் காணப்படாத முறைகளை இதில் காண்கின்றோம். இது மிகவும் பெருமிதப்படக்கூடிய செய்தியாகும். தமிழ்ச்செய்யுட்களில் இயற்றப்பட்டுள்ள இந்நூலை உரைநடையில் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதினால் எல்லோருக்கும் பயன்படும் என்னும் நோக்கத்தோடு இது வெளியிடப்படுகின்றது. மேலும் இதனை ஆங்கிலம் முதலிய மொழி களிலும் மொழிபெயர்த்தால், விஞ்ஞான முறையில் ஆராய்ச்சிக்கும் பயன்படும் என்பது கருத்து.

அகத்தியர் மாணாக்கர்களில் தேரையர் என்னும் ஒருவர் இருந்தார் என்பதை நூல்களின் வாயிலாகத் தெரிந்து கொள்கின்றோம். முற்காலத்தில் இருந்த அரசர் ஒருவருக்கு மருத்துவம் செய்தபோது, அவரின் கபாலத்தினுள் தேரை ஒன்று இருப்பதை அறிந்த அகத்தியமாமுனிவர் அறுவை வைத்தியம் செய்து தேரையை வெளிப்படுத்த முயன்றார். அறுவைக்குப்பின்னர், தேரையை எப்படி வெளிப்படுத்துவது என்று அவர் திகைத்துக் கொண்டிருந்தபோது, அருகில் நின்ற மாணவர் நீர்நிறைந்த தட்டினை ஏந்த அதில் தேரை பாய்ந்ததென்றும், மாணாக்கரின் அறிவுக் கூர்மையை அறிந்த குருபகவான் அகத்தியர் அம்மாணாக்கருக்குத் தேரையர் என்று பெயர் சூட்டியதாகவும் வரலாற்றுச்செய்தி கூறுகின்றது. எனினும் அக்காலத்தில் தேரையர் இயற்றிய நூல் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, இந்தநூல் அகத்தியர் மாணாக்கர் தேரையர் எழுதியநூல் என்று கருதுவதற்கு இடமில்லை. இது பிற்காலத்தில் வாழ்ந்த தேரர் என்ற பெயரு டைய ஒருவரால் எழுதப்பட்டுள்ளது. தேரையர், தேரர் என்ற இரண்டு சொற்களின் ஒற்றுமையை நோக்கி தடுமாற்றம் கொள்ளும்படியாக உள்ளது. பிற்காலத்தில் வாழ்ந்த இவர் வைத்தியத் துறையில் தேர்ந்தவராதலின் தேரர் என்று அழைக்கப்பட்டார். இந்நூல் செய்த தேரர், கூரம் எனும் ஊரிலிருந்த தருமசௌமியர் என்பவரை ஆசிரியராகக் கொண்டு மருத்துவம் கற்றவர். தரும சௌமியர் என்னும் பெயர் பௌத்த மதத்தைச் சார்ந்தவராயிருக்கலாமோ என்று எண்ண இடந் தருகின்றது. ஆனால் தேரர் சிவப்பற்றுடையவர் என்பது அவர் பாடிய கடவுள் வாழ்த்து முதலிய குறிப்புகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் தொண்டை

நாட்டில் பாலாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் ஊரில் பிறந்தவர். நம்பிபூபதி எனும் வேளாளரின் அருமைத்திருமகன். இளமையிலேயே தமிழிலுள்ள இலக்கண இலக்கிய நூல்களையும், சித்தமருத்துவ நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். தொண்டைநாட்டு மன்னரின் உதவியும் கிடைக்கப்பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் மொத்தம் பதினான்கு. அதில் தேரர் நீர்க்குறி, நெய்க்குறி என்ற இந்த நூலும் ஒன்றாகும்.

1. தேரர் சிகாமணி வெண்பா. **2.** தேரர் நிகண்டு. **3.** தேரர் சேகரப்பா. **4.** தேரர் காப்பியம். **5.** தேரர் தரு. **6.** தேரர் நாடகம் (மருத்துப்பாரதம்). **7.** தேரர் அந்தாதி **8.** தேரர் வண்ணம். **9.** தேரர் நாள்மாலை. **10.** தேரர் யமகவெண்பா. **11.** தேரர் எதுகைப்பா **12.** தேரர் கரிசல், **13.** தேரர் தைலவருக்கம். **14.** தேரர் நீர்க்குறி, நெய்க்குறி.

தேரர் உண்மையிலேயே வைத்தியத்துறையில் நன்கு தேர்ந்தவர் என்பது அவர் இயற்றிய நூல்களிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். பாடல்கள் பாடுவதிலும் வல்லவர்.

அகத்தியர் கூறிய சிறுநீர்க்குறி முதலியவைகளையும் அறிந்து சித்தசாரனவம், சித்திய வித்தியாதரம், நித்திய நாதீயம், மாதவ கற்பம் போன்ற வேறு பல நூல்களிலுள்ள குறிப்புகளையும் ஆராய்ந்து இந்நூலை இயற்றியுள்ளார் என்பது தெரிகின்றது.

சிறுநீரில் எண்ணெய்த்துளிவிட்டுப்பார்க்குங்கால் கண்ணாடி, எருது, வெற்றிலை, குதிரை ஆகிய குறிகள் காணப்பட்டால் நோய் தீருமென்று ஒரு செய்யுளில் கூறப்பட்டுள்ளது. அதே குறிகள் கண்டால் நோய் தீராது என்றும் மற்றொரு செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இது போன்ற இடங்கள் ஆராய்வதற்குரியன. ஒவ்வொரு நோயிலுங் காணப்படும் சிறுநீர் விகற்பத்தினை அகர வரிசையில் முடிவில் இணைத்துள்ளோம். இது ஆராய்ச்சியாளருக்கு மிகவும் உதவியாக இருக்கும். சிறுநீர்க்குறிபற்றிய சோதனை விஞ்ஞான முறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கும் இக்காலத்தில் இதுபோன்ற பழமையான நூலில் அடங்கியுள்ள கருத்துக்களையும் ஆராய்ந்து அறிந்து பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இதனை எழுதலானேன்.

இதனை அன்புடன் வெளிப்படுத்துதவிய தஞ்சை சரசுவதி மஹால் நிர்வாகக்காரியதரிசி உயர்திரு ஓ. ஏ. நாராயணசுவாமி பி. ஏ., பி. எல் அவர்களுக்கும், ஷை நூல்நிலையக்காப்பாளர் உயர்திரு வி. கோபால ஐயங்கார், எம். ஏ., அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

இத்தகைய ஆராய்ச்சியில் என்னை ஊக்கப்படுத்திவரும் பாளையங்கோட்டை இந்திய வைத்தியக் கல்லூரி முதல்வர் டாக்டர் க. சு. உத்தமராயன், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கும், சென்னை டாக்டர் வி. நாராயணசுவாமி எச் பி ஐ எம் அவர்கட்கும் தஞ்சை இந்திய வைத்தியத்துறை ஆயுள்வேத ஆராய்ச்சிப் பேராசிரியர் உயர்திரு வி. எஸ். வேங்கடசுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கும் என் அன்பு உரியதாகுக.

சரசுவதி மஹால், தஞ்சை,
24—9—1967.

ஆ. சண்முகவேலன்,
சித்த வைத்திய ஆராய்ச்சிப் பேராசிரியர்
இந்திய வைத்திய ஆராய்ச்சித் துறை

டாக்டர் க. சு. உத்தமராயன், எச். பி., ஐ. எம்., பாளையங்கோட்டை.
முதல்வர்,
அரசாங்க இந்திய வைத்தியக் கல்லூரி,

மதிப்புரை

நீர்க்குறி நெய்க்குறி என்னும் இந்நூல் தேரரால் இயற்றப்பட்ட நூல்; வைத்தியத் துறையில் தேர்ந்தவரென மதிக்கப்பட்டதால், தேரர் என்பது சிறப்புப் பெயராக இருக்கலாம். சித்த மருத்துவத்துறையில் இது ஒரு நல்ல நூல். இவர் இயற்றிய நூற்களில் ஒன்ருகிய கரிசலில், " உத்தமமஞ்சிவாடுசுமி நீவென வேமனர் வடுகில் உரைத்தல்போல " எனக்கூறியிருப்பதிலிருந்து இவர் வேமனருக்குப் பிற்பட்டவராகவோ, அல்லது சமகாலத்தவராகவோ இருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எண்ணுகின்றனர். வேமனர் காலம் சுமார் 300 ஆண்டுக்கு மேற்பட்டது. எனவே, தேரருடைய காலம் ஏறக்குறைய 350 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதலாம்.

இவர் எழுதிய நூற்களின் தொகுப்பைக் குறிக்கும் பாடல் இது !

" சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி
மிகா வண்ணம் நாண் மாலை யமகவெண்பா
விளங்கெதுகைப் பாயிவை யெல்லோரு மெச்சு
மகா மகிமைக் கரிசலெனு முறை யீராறும் "

இதனுல் தேரர் இயற்றிய நூற்கள் பன்னிரண்டு என்று தெரிந்துகொள்ளுகிறேம் மேலும் இதில் கூறப்படாத நூற்களில் " தேரர் தைல வருக்கமும் ", " தேரர் நீர்க்குறி நெய்க்குறியு " மாகும். இவை இரண்டும் தேரரால் பிற்காலத்தில் செய்யப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகின்றது.

நோய்களைக் கணிப்பதற்குச் சித்த மருத்துவமுறையில் கூறப்பட்ட எண்வகைத் தேர்தலாகிய நாடி, பரிசம், நா, நிறம், மொழி, விழி, மலம், மூத்திரம் என்பவற்றுள் நாடி முதன்மையானது என்பது எல்லோராலும் கொள்ளப்பட்ட ஒரு முடிவு. அதற்கடுத்தபடியாகச் சிறுநீர்ச் சோதனையாகும்.

இச்சோதனையை " நீர்க்குறி நெய்க்குறி " என்ற தலைப்பிட்டு இச்சிறு நூலைச் சூத்திர வடிவமாக யாத்துள்ளார். இந்நூலில் சிறுநீரின் நிறம், எடை, மணம், நுரை குறைதல் என்பவற்றை நிதானித்தும், நெய்த்துளி (எண்ணெய்த்துளி)யைச் சிறுநீரில் விட்டு அதில் காணும் உருவங்களைக் கொண்டும், நோய் இன்ன குற்றத்தினுல் ஏற்பட்டதென்பதையும், தீரும், தீராது, என்பதுபற்றியும் விளக்கமாகக் கூறப்பெற்றிருப்பதால், நோய் நிதானத்திற்கு இந்நூல் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

இந்நூல் சித்த மருத்துவம் கற்கும் மாணவர்கட்கும், மருத்துவர்கட்கும், பிணிகளைத் தேர்வதற்கு (நாடிக்கு அடுத்தபடியாக) மிகவும் பயன்படும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இந்நூல் இப்போது அச்சில் இல்லை: ஆதலால், தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலைய சித்த மருத்துவ ஆராய்ச்சித்துறைத் தலைவர் டாக்டர் ஆ. சண்முகவேலன், எம். ஏ; அவர்கள் யாவருக்கும் விரைவில் விளங்குமாறு ஒரு தொகுப்புரை எழுதியுள்ளார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெறுவதாக! தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தார் அவர்களது திங்கள் வெளியீட்டில் இதனை வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்கட்கு என் நன்றி உரியதாகும்.

மேலும், வெளிவராத சித்த மருத்துவ நூற்களுக்கு உரை எழுதி வெளியிடுமாறு டாக்டர் ஆ. சண்முகவேலன், எம். ஏ., அவர்களை ஊக்குவதுடன், அவர் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி நல்ல முறையில் யாவர்க்கும் பயன்பட எல்லாம்வல்ல இறைவனை வணங்குகிறேன்.

பாளையங்கோட்டை,
15—6—67.

க. சு. உத்தமராயன்,
முதல்வர்.
அரசாங்க இந்திய வைத்தியக் கல்லூரி.

குறிப்பு :- எண்ணெய்த்துளி சல்லடைக்கண்போல் காணப்படுவதை தீரா நோய்க் குறி என்று கௌதமர் கூறியபோதிலும், தேரர் அக்கொள்கையை மறுத்து—அது கபத்தின் குறியேயாதலால் தீரும் நோய்க்குறியே என்றுங் கூறியுள்ளார்.

தீரா நோய்க்குறி :— சிறு நீரில் விட்ட எண்ணெய்த்துளி அதில் அமிழ்ந்து போனால், அந்நோய் தீராது. கண்ணாடிக்குவளையிலன்றி மட்பாண்டத்திலும் நீரைப்பிடித்து எண்ணெய்த்துளி விட்டுப் பார்க்கலாம்.

தீரு நோய்க்குறி :— நோயாளியின் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி கீழ்க் கண்டவை போல் மனிதன், மீன், கோவில், கோவில் மதில் சுற்று, பெரியயானை, மலை, குடை, மரம், வெண்சாமரை, தாமரைப்பூ, யானையின் கொம்பு, குல்லாய், சங்கு கண்ணாடி,மகர தோரணங்கள், பூமி, வீணை, சதுரமாயிருக்கின்ற வீடு, பாகல் இலை, வண்டு, தாமரை மொக்கு, சிம்மாசனம் போல் காணப்படுமானல் நோய் தீரும். மேலும் சிறுநீரில் விடப்பட்ட எண்ணெய்துளி மத்தளம், கொடி, பானை, பன்றி, காட்டு விலங்கு, குயவன் சக்கரம்போல் தோன்றினல் நோய் தாமத சாத்தியமாகும்.

தீரா நோயின் குறிகள் :— நோயாளியின் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி, கீழ்க்கண்டவைப் போல் தோன்றும்.

ஒருகால், மூன்றுகால்கள், நான்கு கால்களையுடைய மனிதர், உடல் பருத்த மனிதர், தலையில்லா மனிதர், முன்கையில் கத்தி. சூலம், உலக்கை, வில், அரிவாள் பாம்பு, பூனை, எலி, அர்பு, நண்டு, சுரைக்காய், கோழி, புலி, குரங்கு, சிங்கம், குதிரை, வெற்றிலைக்கொடி, எருது, கரடி, பறவை, ஆமை, தேள், எண்ணெய்த் துளி பரவாமை, பொங்கிப்பரவல், இவை காணப்பட்டால், நோய் தீராது. இக் குறிகள் யாவும் அகத்திய முனிவரால் கூறப்பட்டுள்ளவை.

வேறு

சந்நிவாத நோயும், தீரும் நோயும் :— நோயாளியின் சிறுநீரில் துரும்பாலிட்ட எண்ணெய்த்துளி பாதி மிதந்து, பாதி கீழிறங்குமாயின், அவன் நோய் சந்நிவாத நோயாய் மாறும். அவ்வெண்ணெய்த்துளி சதுரவடிவமாகவும், தாமரை கண்ணாடி, குடை, சங்கு, தேர்ச்சக்கரம், சாய்ந்தமரம், குண்டலி போலவும் தோன்றினல் அந்நோய் தீருமெனக் கொள்ளலாம்.

தீருங்குறியும், தீராக்குறியும்:- நோயாளியின் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி சோற்றுக்கம்பம், குள்ளம், வெற்றிலை, குதிரை, எருது போல் தோன்றின் அவனிட முள்ள நோய்கள் தீர்ந்து இனிதே வாழ்வான். பறவை, ஆமை, நாய், சிங்கம்,

பன்றி, பாம்பு, குரங்கு, தேள், பூனை மனிதன்போல் தோன்றினுல், நோயாளி இறந்தான் என்றே கொள்ளல் நன்று.

மேலும் சிறுநீரில் விட்ட எண்ணெய் தலையில்லா முண்டம் போல் தோன்றின் இறப்பான் என்றும், ஒரு நாம வட்டம் போல் தோன்றின் இறவான் என்றும் அறிதல் வேண்டும்.

வேறு

சுரநீர் விகற்பம் :— சுரநோயால் பீடிக்கப்பட்டவனின் சிறுநீர் தெளிவாயிருந்தால், வாதநோயால் பாதிக்கப்படுவான். சுருக்காகவும், பச்சை நிறமுடையதாகவுமிருந்தால், அச்சுரநோய் பித்தவெட்டை காரணமாய் வந்ததாகும். சிவப்பு நிறமுடையதாயிருந்தால், தோஷம் அல்லது சந்நி உண்டாகும். சுரமுடையவன் சிறுநீரில் சுண்ணம் போல் படிந்திருக்குமாயின், அந்நோய் தீராது.

சிறுநீர்ப் பெருக்கம் :— உண்ணும் நீர் பொங்கி, உடற்கருவிகளில் தங்காமல் நீர்ப்பையிலேயே தங்கி, பலப்பல நிறமாக இடைவிடாது சிறுநீர் இழியுமாஞல், உடலுக்குக் கெடுதியை விளைவிக்கும்.

மேகநீர் :— சிறுநீர் விடப்பட்ட இடத்தில் சுண்ணம் படிந்திருந்தால், எலும்புருக்கி நோய் உண்டாயிருக்கவேண்டும். நீர்கலந்த மோர் அல்லது நெய் போலும் படிந்திருந்தால் மேகவெட்டை நோய் காரணமாகும். இழிவதற்கு முன்னும், பின்னும், நீர்த்தொளை அடைத்திடின் பிரமியம் காரணமாகும். இழிந்த சிறுநீரில் எறும்புகளும், ஈக்களும் மொய்த்தால், அந்நீரையுடையவனின் நோய் தீராது.

சிறுநீர் இலக்கணம் :— சிறுநீர் தெளிந்திருந்தால் வாத நோய் காரணமாகும் மஞ்சள் நிறத்திலிருந்தால் பித்த நோய் காரணமாகும். வெண்மையாய் நுரைத்திருந்தால் கபநோய் காரணமாகும். கலந்திருந்தால், தொந்த நோய் காரணமாகும்.

நீர்க்குறிச் சிறப்பு :— வைத்தியர்களுக்கு நாடிக்குறிகளைக் கொண்டு நோயைக் கணிப்பது மயக்கத்தைக் கொடுத்தால், அவற்றைவிட நீர்க்குறிகள்தான் இன்ன நோயென்றறிய சிறப்பானவை.

இரத்தக்கொதிப்பு நீர் :— சிறுநீர் சிவந்திருந்தால், அது இரத்தக் கொதிப்பால் உண்டான நீரென அறிதல் வேண்டும். உஷ்ண மிகுதியினுல் கொதிப்பு ஏற்பட்டு, நீர்சுருங்குவதனுல் இக்குறி தென்படும்.

பித்த கோபநீர் :— முற்கூறிய சிறுநீர், மிகச் சிவந்திருந்தால், அது பித்த மிகுதி காரணத்தால் உண்டாகும். மூலச்சூட்டால் எரிந்து சிவப்பாய்த் தோன்றிற்றென்றும் சொல்லலாம்.

சேத்தும கோபநீர் :— சிறுநீர் அளவில் குறைந்து வெண்மையாயிருந்தால் அது சேத்துமத்தால் உண்டாகும். குளிர்ச்சியினுல் வெண்மை நிறமாகலாம். இரத்தக் குற்றத்தால் அளவிலும் குறையலாம்.

வாதகோப நீர் :— சிறுநீர் வெண்மையாயிருந்து தெளிந்துமிருந்தால், அது வாதமிகுதியினுல் உண்டாயிருக்கும். குளிர்ச்சியினுல் வெண்மை நிறமும் வறட்சியினுல் தெளிவும் ஏற்பட்டதெனக் கொள்ளல் வேண்டும்.

இரத்தவாத பித்தக் கலப்புநீர் :—சிறுநீர் கனத்தும், இறுகலாயுமிருக்குமானுல் அஃது இரத்தக்கொதிப்பால் ஏற்பட்ட நீராகும். தசை மென்மையாகக் கரைந்து சிறுநீரில் கலந்து வெளிப்பட்டால் பித்தவாதக் கலப்பால் ஏற்பட்டதாகும்.

வயது, காலம், நட்சத்திரங்களினுல் சிறுநீரின் மாற்றம் :— இதுவரை சொல்லப் பட்ட சிறுநீர்க்குறிகள், வயதினுலும், பருவத்தினுலும், நட்சத்திரங்களின் மாற்றத்தினுலும், பித்தம் மிஞ்சினதால் ஏற்பட்ட குறிகளாகும்.

உஷ்ணநீர் :— சுரத்தால் பீடிக்கப்பட்டவரின் சிறுநீர் வெள்ளை நிறத்துடனும் உவர் பொருந்தி தெளிந்திருந்தாலும், அது உஷ்ணத்தினுலாயது.

முறைக்காய்ச்சல் நீர் :— முறைக்காய்ச்சலுள்ளவர்களின் சிறுநீர் கனத்திருந் தால், அக்காய்ச்சல் விரைவில் குணப்படும்.

சிறுநீர் சிவந்து மிகவும் தெளிவுற்றிருந்தால், அந்நீர் மூன்று நாளைக்கொரு தரம் வரும் காய்ச்சலாகும். அந்நீர் இறுகிச்சிவந்து, பின்பு வெள்ளையானுல், அந்நீரையுடைய நோயாளிக்கு கபாலத்தில் பித்தம் போயடையும்.

தலைக்கனப்பு, மயக்கம் :— கண்ணுடிக்குவளையில் விட்ட சிறுநீர்ப் பரப்பில் வளையம் போல் பரந்து நின்ருல் அந்நீருடையவர் தலை கனத்து மயக்க மடைந் திருப்பார் என மருத்துவநூல் ஆராய்ந்தோர் சொல்லுவார்கள்.

தலையின் இடப்பக்கநோய் :— கண்ணுடிக்குவளையில் பிடித்து வைத்த சிறுநீர் அதன் அடியிற் சிவப்பாயிருந்தாலும், மஞ்சளாயிருந்தாலும், தெளிவுற்றிருந் தாலும், தலையின் இடதுபக்கம் நோயால் பீடிக்கப்பட்டதென்று உணர்க.

தலையின் வலப்பக்க நோய் :— சுரமுடையோர்க்கு சிறுநீர் வெண்மையாயும், கருப்புமாகி தெளிந்திருந்தால், நோயாளிக்குத் தலையின் வலப்பக்கத்தில், துன்பத்தைக்கொடுக்கும் நோயுண்டென்று விளக்கமாய்ச் சொல்லலாம்.

காய்ச்சலுடன் கூடிய மார்பு நோயைக் காட்டும் நீரின் நிறம் :— பாத்திரத்தில் பிடித்துவைத்த நீரின் அடிப்பாதி சிவந்து, கலங்கியும், மேற்பாதி தெளிவுற்று

மிருந்தால் அந்நீரையுடையவனுக்கு நெஞ்சுவலி, காய்ச்சல் இருக்கும் என்று மருத்துவ நூல் வல்லோர் கூறுவர்.

நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பின் அதனையுணர்த்தும் நீர் :— சிறுநீர் தயிர்நீர் அல்லது பால்போல் இழிந்து, அதன் அடியில் வண்டல் இருந்தாலும், அந்நீரையுடையவருக்கு நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பதால் ஏற்பட்டதென்று சொல்லலாம்.

இரத்த தொந்தநோய்

ஈரல் சுரம் :— சிறுநீர் சிவந்து சிறிது தெளிவுற்றிருந்தால், அது இரத்த தொந்திப்பாலுண்டானது. அது கலங்கிச்சிறிது கருத்திருக்குமாயின், வெப்பம் ஈரலைத் தாக்கியதாலுண்டான காய்ச்சல் என்று அறியவேண்டும்.

இருதயநோய் :— சிறுநீர் தலைமுடியின் நிறத்தை யொத்தால், தமரகப் பிணியுண்டாகுமென்று சொல்லுவர்.

நெய்க்குறி (வேறு) :— சிறுநீரின் குணங்களைக்கொண்டு நோய்களையறிய மற்றொரு சோதனையாகிய நெய்க்குறி கூறப்படும்.

சிறுநீரைச்சேகரிக்கும் நேரம் :— விடியற்காலத்தில் காலை 4 மணிக்கு விடும் சிறுநீரை பீங்கானில் பிடித்து வைத்திருந்து, அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்க வேண்டும்.

இரத்த மிகுந்த வெப்பு :— சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளித் வீசிப்பரந்து வட்டமாய் நின்றால், இரத்தம் பொங்குதலால் ஏற்பட்டதென்று அறியவேண்டும்.

இரத்தக்குறைவு :— எண்ணெய்த்துளி, விரைவில் கதிர்போல் நீண்டால், இரத்தம் கெட்டுக் குறைந்ததாலுண்டானதென்று அறிய வேண்டும்.

பித்த மிகுதி :— அந்த எண்ணெய்த்துளி கதிர்முனையைப்போல் நீண்டால், பித்தத்தின் மிகுதியால் உண்டானதென்றறிய வேண்டும். இந்நோயில் பேதி உண்டானால் நோய் அற்றுப்போகுமென்று நூல் வல்லோர் கூறுவர்.

சீதமிகுதி :— எண்ணெய்த்துளி நெகிழ்ச்சி அடையாமல் அப்படியே நின்றால் சீதமிகுதியால் உண்டானதென்று அறியவேண்டும்.

நோய் தீராக்குறி :— சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி நீரினுள் அமிழ்ந்தால் அந்நீரையுடையவனின் நோய் தீருவது அரிது.

குளிர்மை :— நாவரட்சி இல்லாமலும், உடம்பில் குளிரிருந்தாலும், உடலில் நடுக்கமிருந்தாலும், வாயில் நீர் ஊறினாலும், உடல், கை, கால் வெம்பினாலும், இரவிலே அதிக நீர் கழிந்தாலும், உடலின் மிக்க சீதளத்தைக் குறிக்குமென்பர்,

மூலைப்பால் குறி :— நோயாளியின் சிறுநீரில், ஆண்பிள்ளையைப்பெற்ற தாயின் முலைப்பாலை விடு. இது அச்சிறுநீரில் கலந்தால், நோய் தீரும். கலவாவிட்டால் நோயாளி இறப்பான் என்றும் கொள்க.

மரணமறிய:— நோயாளியின் காலின் மேல்புறமும், கீழ்ப்புறமும், பன்றியின் கொழுப்பைத்தடவவும். பின்பு அதை வழித்து நாய்க்கு இடு. நாய் அதைத் தின்று சீரணித்துக்கொண்டால், நோயாளி பிழைப்பான் என்க. நாய் சீரணிக்காமல் வாந்தி செய்தால், நோயாளியின் நோய் தீர்தலரிது.

குருதிக்குறி :— நோயாளியின் இரத்தத்தில் இருதுளியைக் குளிர்ந்தநீரில் விடு. அஃது உள்ளே அமுந்தின் நன்றென்றும், நெகிழுமாயின் மரணம் நேரிடுமென்றும் அறிக.

சிறு நீர் சோதனை :— நோயாளியின் சிறுநீர் மஞ்சள் நிறமாயிருந்தால் அஃது உத்தமம். தேன் போன்ற நிறமாயிருந்தால் மத்திமம். பால்போல் வெண்ணிறமாயிருந்தால், அதமாதமமாகும்.

நோயும் சிறுநீர் விகற்பமும்

அகர வரிசை

நோய்		சிறுநீர் விகற்பம்
அசீரணம்	...	சிறுநீர் நனைந்தூறிய வைக்கோலிலிருந்து ஒழுகும் நிறத்தைப்போன்று இருக்கும்.
அசாத்தியம்	...	சிறுநீரில் சுண்ணம் படிந்திருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப் பார்க்கில், எண்ணெய்த் துளி சிறுநீரில் அழுந்தும்.
இரத்தக்கொதிப்பு	...	சிறுநீர் மிக்க செந்நிறமாகிய பன்னீர்ப் பூப் போன்று இருக்கும்.
,,	...	சிறுநீர் கனத்து இறுகலாக இருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப் பார்க்கில், எண்ணெய்த்துளி வீசிப்பரந்து வட்டமாக இருக்கும்.
இரத்தம் பொங்குதல்	...	சிறுநீர் செம்மையும், கருமையும் பொருந்தி இருக்கும்.
,,	...	சிறுநீர் கறுப்பும், சிறிதுசெம்மையும், கலந்து இருக்கும் ; அன்றித்தனித்த சிவப்பு நிறமாகவும் இருக்கலாம்.
இரத்தக்கெடுதி அல்லது குறைவு	...	சிறுநீர் குங்குமப்பூ நிறத்துடன் கருநிறமும், சிறிது செம்மையும் கலந்து இருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த்துளி திரைபோல் நீண்டிருக்கும்.
இரத்த தொந்திப்பு	...	சிறுநீர் சிவந்து தெளிவுற்றிருக்கும்.
இதயநோய் (தமரகப்பிணி)	...	சிறுநீர் தலைமுடியின் நிறமாயிருக்கும்.
இடத்தலைநோய்	...	சிறுநீர் மஞ்சளாகவும், சிவப்பாகவும் தெளிவாகவும் இருக்கும்.
ஈரல் வெப்பம்	...	சிறுநீர்க் கலங்கிக் கருத்திருக்கும்.
உஷ்ணம்	...	சிறுநீர் காட்டு நாரத்தம் பழத்தோலின் நிறமாயிருக்கும்.
,,	...	சிறுநீர் புளியின் மணமாயிருக்கும்.
,,	...	சிறுநீர் வெண்மையாகவும், உவர் பொருந்தி தெளிந்து மிகுந்திருக்கும்.
உஷ்ணம் (அதிகம்)	...	சிறுநீர் கொதிக்கின்ற தீயின் நிறத்தைப் போன்று இருக்கும்.

உஷ்ணம் (உச்சநிலை)	...	சிறுநீரில் மஞ்சள் நிறமும், குங்குமப்பூ நிறமும், வரிவரியாகக் காணும்.
உஷ்ணம் (கொடிய)	...	சிறுநீர் மோரைப்போலும், பாலைப்போலும் நிறத்தையுடையதாயிருக்கும்.
உதிரவிருத்தி அல்லது உதிரவிருத்தியாலாகிய பிணி	...	சிறுநீர் இனித்த மணமாயிருக்கும்
உடற்பசைக் கேடு	...	சிறுநீர் புலால் மணம் வீசும்.
அவலம்பகம், தருப்பகம், கிலேதகம், சந்திகம்,	...	சிறுநீரில் வாயு சம்பந்தப்பட்டு நுரையுடன்
போதகம்.	...	இழிதலாகும்.
உடற்கேடு	...	சிறுநீர் அடிக்கடி இழியும்
எலும்புருக்கி	...	சிறுநீர் பால்போன்றிருக்கும்.
,,	...	சிறுநீரில் சுண்ணம் படிந்திருக்கும்.
கபம்	...	சிறுநீர் இலைப்பச்சை நிறமாயிருக்கும்.
,,	...	சிறுநீர் வெளுத்தும், சளியைப் போன்றும் இருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த்துளி முத்துப்போன்றிருக்கும்.
,,	...	சிறுநீர் வெண்மையாக உறைந்திருக்கும்.
,,	...	சிறுநீர் நுரைபொருந்தியிருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த்துளி சல்லடைக்கண் போற் காணும்.
,,		
,,	...	சிறுநீர் வெண்மையாகவும், அளவில் குறைந்தும் இருக்கும்.
,,	...	சிறுநீர் வெண்ணிறத்துடன் நுரையும், குமிழும், குடிநீர் போன்றும், நெய்யைப்போல பல நிறமாகவும் காணும்.
அயவாதக் கலப்பு	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த்துளி கந்துருபோல் பரவிக்காணும்.
கபால பித்தம்	...	சிறுநீர் இறுகிச் சிவந்து பின் வெண்மையாகும்.
கருப்பைபுண்	...	சிறுநீர் சீயும், துர்நாற்றமுமாயிருக்கும்.
கல்லடைப்பு நோய்	...	சிறுநீர் சீயும், துர்நாற்றமுமாயிருக்கும்.
காமாலை	...	சிறுநீர் குங்குமப்பூ நிறத்துள் கருமை கலந்து இருக்கும்.

,,	...	சிறுநீர் மஞ்சள், கருமை, செம்மை நிறங்களுடன் நுரை பொருந்தி இருக்கும்.
,,	...	சிறுநீர் மிக்க செம்மஞ்சளாக இருக்கும்.
குண்டிக்காய் வன்மைக்குறைவு	-	சிறுநீர் கெட்டுப்போன தசையைக் கழுவிய நிறத்தையுடையதாயிருக்கும்.
குருதிக் கொதிப்பு	...	சிறுநீர் கெட்டுப்போன தசையைக் கழுவிய நிறத்தையுடையதாயிருக்கும்.
கொடியநோய்	...	சிறுநீர் கனப்பாகவும், நெய்ப்பசையாகவும், இருக்கும்.
கோழை கொதிப்பு	...	சிறுநீர் கெட்டுப்போன தசையைக் கழுவிய நிறத்தையுடையதாயிருக்கும்.
கோழை நோய்	...	சிறுநீர் இந்திரியத்தைப்போன்றிருக்கும்.
சன்னி	...	சிறுநீர் சிவந்திருக்கும்.
சன்னிவாதம்	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த்துளி சிறுநீரில் அமுழுந்தும்.
சன்னிவாதம்	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த்துளி பாதி கீழ் அமுழுந்தியும், பாதி மேல் மிதந்தும் தோன்றும்.
சாத்தியம் (தாமத)	...	சிறு நீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த்துளி மத்தளம், கொடி, பானை, பன்றி, காட்டுவிலங்கு இவைகளைப் போற் காணும்.
சீரண பக்குவம்	...	சிறுநீர் துரிஞ்சிப்பழத்தின் நிறத்தையுடைய தாயிருக்கும்.
சீதளம்	...	சிறுநீர் கருப்பும், சிறிது பச்சையுமான நிறத்தை யுடையதாக இருக்கும்.
சீதள (மிகுதி)	...	சிறுநீர் நீலச்சாயை பொருந்தியிருக்கும்.
,,	...	சிறுநீர் கனமின்றித் தெளிந்திருக்கும்.
,,	...	சிறுநீர் தெளிந்தும், இரவில் அதிசயமாகவும் இழிதலாகும்.
சுத்த சீதளம்	...	சிறுநீர் வெண்ணிறத்துடன் தெளிந்திருக்கும்.
சுரம்	...	சிறுநீர் மஞ்சள் நிறமாயிருக்கும்.
தமரகநோய்	...	சிறுநீர் தலைமுடியின் நிறமாயிருககும்.
தலைக்கனப்பு, மயக்கம்	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த்துளி வளையம்போற் காணும்.
தொந்தநோய்	...	சிறுநீர் பல நிறமாக இருக்கும்.

நோய்		சிறுநீர் விகற்பம்
நீர்க் குண்டிக்காயில் கல்	...	சிறுநீர் தயிர்த்தெளிவைப்போலும், பாலைப் போலும் அடியில் வண்டல் காணப்படும்.
பாண்டுநோய்	...	சிறுநீர் இயற்கை அளவுக்குக் குறைந்திழிதல்.
பித்தம்	....	சிறுநீர் கனிந்த பொம்மன் மாசுப்பழம், சௌவீரத்தின் ஒளி, எள்நிறம் இவற்றைப் போற்காணும்.
,,	...	சிறுநீர் கருநிறமானின் மணமுடையதாயிருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த்துளி மோதிரம் போன்று காணும்.
,,	...	மேற்படி கதிர்முனைபோல் காணும்.
,,	...	சிறுநீர் பசுமையாகச் சிவந்து எரிச்சலுடன் கடுத்திறங்கும்.
,,	...	சிறுநீர் சிவப்பு மஞ்சளாக இருக்கும்.
,,	...	சிறுநீர் மஞ்சளித்திருக்கும்.
,,	...	சிறுநீர் மிகவும் சிவந்திருக்கும்.
பித்த கபம்	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் சிறுநீரில் பாதி மேலும் பாதிகீழுமாக இருக்கும்.
பித்த காமாலை	...	சிறுநீர் மஞ்சள் நிறமாகவும், உதிரத்தை யொத்த நிறமாகவும் இருக்கும்.
பித்தவாதக் கலப்பு	...	சிறுநீரில் தசைகரைந்து வெளிப்படும்.
பிரமிய நோய்	...	சிறுநீர் போகு முன்னும், பின்னும் நீர்த்துவாரம் அடைக்கும்.
மார்புவலி	....	சிறுநீரைப் பாத்திரத்தில் பிடித்து வைக்க அடிப்பாதி சிவந்து கலங்கியும் மேற்பாதி தெளிந்து மிருக்கும்
முறைக்காய்ச்சல்	...	சிறுநீர் சிவந்து தெளிந்திருக்கும்.
மூலச்சூடு	...	சிறுநீர் மிகவும் சிவந்திருக்கும்.
மேகநோய்	...	சிறுநீரில் உதிரம் வெளிப்படும்.
மேகவெட்டை	...	சிறுநீரில் நீர் கலந்த மோர்போலும் நெய்யைப் போலும் படிந்திருக்கும்.
வலத்தலை நோய்	...	சிறுநீரைப் பாத்திரத்தில் பிடித்துவைக்க வெண்மையாகவும், கருப்பாகவும் தெளிவுற்று மிருக்கும்,

நோய்		சிறுநீர்விகற்பம்
வாதம்	...	சிறுநீர் வெண்ணிறத்தையும், உதிர நிறத்தையும் உடையதாகயிருக்கும்.
,,	...	சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் அது பாம்புபோல் நீளமாய்க்காணும்.
,,	...	சிறுநீர் கடுத்து நொந்து சிறுத்துப் பொருமி இழியும்.
,,	...	சிறுநீர் சுரத்துடன் தெளிந்தநீர் இழிதல்.
வாதபித்த கபம்	...	சிறுநீர் நீலநிறத்துடன் தடித்துக் காணும்
,,	...	சிறுநீர் மிக்கத் தடித்திழியும்.
,,	...	சிறுநீர் கொடிய மணம் வீசும்.
,,	...	சிறுநீர் நுரைகுறைந்திழியும்.
வாதபித்த கலப்பு	...	சிறுநீர் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் புல்முனையைப்போற் காணும்.
விஷத்தாலாகிய சீதளம்	...	சிறுநீர் ஆகாயத்தை யொத்த நிறமாக இருக்கும்

தீரும்நோய்

1. சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி வட்டமாகவும் பரவலாகவும் காணில்
2. திருமால் இடத்தோளிலுள்ள சங்கு, சிங்காசனம் போற் காணில்
3. குடை, யாழ் போற் காணில்
4. முல்லைமொட்டு, தாமரைப்பூப்போற் காணில்
5. சங்கு, வீணை, குறியவள் உருவம், வில், கொடிபோல் பரவிக்காணில்
6. வைபவம், மக்கள், மீன், கோயில், பெரியயானை போற் காணில்
7. மலை, குடை, விருக்கம், வெண்சாமரை தாமரைப்பூ, யானையின் கொம்பு, குல்லாய், கண்ணுடி, சங்கு, மகரதோரணம், பூமி, வீணை, சதுரமான வீடு போற்காணில்
8. பாகலிலை, வண்டு, தாமரை மொக்கு, சிம்மாசனம் போற்காணில்
9. சதுரவடிவம், தாமரைமலர், கண்ணுடி, குடை, சங்கு, தேர் உருளை, சாய்ந்தமரம், குண்டலி போற் காணில்
10. சோற்றுக்கும்பம், குள்ளன், வெற்றிலை, குதிரை, எருதுபோற் காணில்
11. நாமவட்டம் போற் காணில்
12. நோயுற்றார் காலின் மேற்பக்கமும், கீழ்ப்பக்கமும், பன்றியின் கொழுப்பை தடவி வழித்து நாய்க்கிட அது உண்டு செரித்திடில்

13. நோயுற்ருர் இரத்தத்தை இரண்டு துளி குளிர்ந்த தண்ணீரில்விட இரத்தம் உள்ளே அழுந்திருல்

தீரா நோய்

1. எண்ணெய்த்துளி விரைந்து பொங்கிப் பரவிக் காணில்
2. கடுகைப்போல் சிதறிக்காணில்
3. எண்ணெயும் நீரும் ஒன்று கலந்தால்
4. எண்ணெய் நீரினுள் அழுந்திருல்
5. அம்பு, வாள், இருப்புலக்கை, சூலம், ஈர்வாள், கும்பம், வெற்றிலை போற்காணில்
6. எருது, சிங்கம், ஆளி, யானை, புலி, ஆடு, பன்றி, மனிதன், பாம்பு, ஆமை, பறவை, நரி, குரங்கு, கழுதை, பூனை, தேள் போற்காணில்
7. கண்ணுடி, சிங்கம், பறவை, ஆமை, செந்நாய், குக்குடம், வராகம், வாநரம், பூனை, தேள், அரசர்கைச் சூலம் போலும் பரவிக்காணில்
8. எண்ணெய்த்துளி சிறுநீரில் அமிழ்ந்தால்
9. ஒருகால், மூன்றுகால், நான்குகால்களையுடைய மனிதர்போன்றும், உடல் பருத்த மனிதர் போன்றும், தலையில்லா மனிதர் போன்றும், கையில் கத்தி, சூலம், உலக்கை, வில், அரிவாள், பாம்பு, இவைகளைத் தாங்கிய மனிதன்போலும் காணில்
10. பூனை, எலி, அம்பு, நண்டு, சுரைக்காய், கோழி, புலி, குரங்கு, சிங்கம், குதிரை, வெற்றிலைக்கொடி, எருது, கரடி போற்காணில்
11. பறவை, ஆமை, தேள் போல் காணில் எண்ணெய்த்துளி பரவாமலிருத்தல், பொங்கிப்பரவல் ஆகிய இவை
12. சிறுநீரில் ஈ, எறும்பு, மொய்த்தால்
13. ஆண்பிள்ளையைப்பெற்ற தாயின் முலைப்பாலை பிணியாளர் நீரில் விட்டுப்பார்க்கில் அது சிறுநீரில் கலவாவிடில்
14. நோயுற்ருர் காலின் மேற்பக்கமும் கீழ்ப்பக்கமும் பன்றியின் கொழுப்பைத்தடவி வழித்து நாய்க்கிட அது உண்டு செரியாதாகில்
15. நோயுற்ருர் இரத்தத்தை இரண்டு துளி குளிர்ந்த தண்ணீரில் விட, இரத்தம் தண்ணீரில் நெகிழுமாயின்

குறிப்பு: கண்ணுடி, எருது, வெற்றிலை, குதிரை, ஆகிய இத்தோற்றங்கள் மூலப்பாக்களில் நோய்தீரும், நோய் தீராது எனும் இரண்டு தலைப்புக்களிலும் காணப்படுவதால் இவைகள் ஆராய்தற்குரியன.

Contraceptives in Ancient India.

In the background of the present day outlook in which Family Planning looms large in our national economy and when the attention of the Health Department is focussed on the means and methods of contraception and birth control, it will be not only interesting but also profitable to peep into our own past and see what light ancient wisdom can shed on modern research to solve this all absorbing problem of to-day. Although our ancestors might not have been faced with the problem of restraining a staggering expansion of population as we are to-day, other motives like averting deterioration of health, putting off conception during convalescense etc., would have inspired them in the discovery of contraceptives. The range and the fertility of the field of the intellectual activities of our ancients in such that no one who walks across its bunds in search of anything ever returns disappointed. The Sasrasvati Mahal Library, Thanjavur, presents a perfect cross section of this ancient field of culture and the members of the staff of our Literary (Medical) Research Unit are placing before the public, in the following pages, the results of their researches conducted so far into the methods of contraception prescribed in ancient texts. We are sure that our readers will be struck by the almost incredible cheapness, accessibility and simplicity of the process of contraception set forth in these prescriptions as against the elaborate, costly and abnormal surgical processes recommended to-day.

[Editor, T. M. S. S M. Library Journal]

Contraceptives in Indigenous Medical Works

Contributed by the Literary Research Unit,
(Central Council of Ayurvedic Research), T. M. S. S. M. Library, Thanjavur.

From: SARABHENDRA VAIDYA MURAIGAL — GARBHINI BALAROGA CHIKITSAI — PAGE 65 (PUBLISHED BY T. M. S. S M. LIBRARY, THANJAVUR)

1. The woman, who takes the *roots of *Indigofera tinctoria* (அவுரி) and *Benincasa Hispoda* (பூசணி) in equal weight, ground with water on the fourth day of her menses will not conceive.

2. Taking of the unfolding flower sheath of *Phoenix Dactylifera* (பேரீச்சை खर्जूर), ground with milk is contraceptive.

3. Bundle up leaves of *Mimosa Amara* (உசிலி) and place the bundle amidst Sodium Chloride (கல்லுப்பு). Take the leaves and grind them with cow's milk. Administer this to woman to prevent conception.

---

* Drugs marked with an asterisk are compounds of *upavisha* and must be administered carefully.

From: Mss. No. B. L. 10817/ D. 11178, PALM LEAF, GRANTHA AND TAMIL SCRIPTS, IN T. M S. S. M. LIBRARY.

4. During the monthly course, a woman who takes the flower of *Hibiscus Rosa Sinensis* (செம்பரத்தை जपाकुसुम) ground and mixed with Rice Vinegar (காடி कांजिकम्) will not conceive.

5. The woman who takes the ground paste of the leaves of *Bambusa Arundinaceae* (மூங்கில் இலை वेणु पत्रम्) mixed with cow's milk will not conceive.

From: Mss. No. B. L. 10807/D. 11173, GRANTHA SCRIPT IN T. M. S. S. M. LIBRARY.

6. The ground paste of the fruits *Butea Frondosa* (புரசிக் பழம் किंशुक फलम,) administered with butter, sterilises woman.

7. The paste of the seeds of **Nerium Odorum Solanel* (அலரிவிதை करवीरस्य बीजम्,) administered with butter, sterilises woman.

From: TAMIL MSS. NO. I (PAMBATTI SIDDHAR EDU, ANUBHAVA VAIDYA MURAI, -Secured from Salem).

8. Flowers of *Sesamum Indicum* (எள்ளின் பூ) and tender leaves of * *Calotropis Procera* (எருக்கின் துளிர்) of equal quantity, ground with water and administered is contraceptive.

9. A mixture of the following, when taken, sterilises women:

Juice of *Citrus lemon* (எலுமிச்சம்பழச்சாறு) 10 *palas*;

Ground paste of the root of *Pandanus Tectorious* (தாழைக்கிழங்கு) as much as lemon fruit;

Ferula Asafoetida (பெருங்காயம்) $3\frac{5}{8}$ *gunjas*.

10. Unripe fruits of *Grewia Asiatica* (ஈச்சங்காய்) given to woman, with tender cocoanut water, prevents conception.

11. Seeds of Wild Chembai (காட்டுச்செம்பை), ground with urine and given to woman is contraceptive.

12. Remove the rinds of the seeds of *Erythrina Indica* (கல்யாண முருங்கை) grind inner pulps with milk and honey, and give the medicine for three days during menses, to prevent conception.

From: RASIKARANJANI (MARATHI MANUSCRIPT), T M. S. S. M. LIBRARY.

13. *Stanza 170*: Taking one *palam* of three year old jaggery for fifteen days is contraceptive.

---

*.Drugs marked with an asterisk are compounds of *upavisha* and must be administered carefully.

14. *Stanza 171*: The decoction made of the root of *Plumbaxo Zeylanica* (கொடுவேலி चित्रकम्), ground in rice wash, taken on the fourth day of the menses makes woman barren.

15. *Stanza 172*: Four and half *tolas* of nicely powdered *Terminalia Belerica* (தான்றிக்காய் विभीतक), taken in rice wash during menses for seven days make woman barren.

16. *Stanza 175*: Taking decoction of *Terminalia Belerica* (தான்றிக்காய் विभीतक), for seven days after menses, makes a woman barren.

From: YOGARATNAKARA.

17. Piece of rock salt, mixed with gingelly oil, placed in the vagina at the time of coition is contraceptive.

18. Grind root of *Amaranthus Gangeticus* (சிறுகீரை तण्डलीयक), in rice wash and drink for three days at the end of the monthly course. It will prevent conception.

19. Fumigation of the vagina at the close of monthly course with the smoke of *Azadirachta Indica* (வேப்பு निम्ब), is contraceptive.

20. Each one *tola* of powdered *Abies Webbiana* (தாளிசபத்திரி तालीस), and *Ochre* (காவி गैरिक), taken in cold water on the fourth day of menses prevents conception.

From: BHAISHAJARATNAVALI.

21. She, who takes the powders of *Ficus Religiosa* (அரசு), *Embellia Ribes* (வாயுவிளங்கம் विडंकम्) and Borax (வெண்காரம் टंकणम्) of equal quantity with milk, will not conceive (also in Bhavaprakasa).

22. Woman, who takes for three days during menses, flowers of *Hibiscus Rosa Sinensis* (செம்பரத்தை जपा), ground with rice vinegar along with old jaggery, will not conceive (also in Bhavaprakasa).

23. On the fourth day of the menses, leaves of *Cissampelos Pereira* (வட்டத்திருப்பி पाठा), ground and taken prevent conception.

24. The powders of *Emblica Officinale*, *Anjana*, *Terminalia Chebula* (நெல்லிக்காய் आमलकी, அஞ்ஜனக்கல், கடுக்காய் हरीतकी) taken with water is contraceptive.

25. *Kalka* taken of *Cordia Myxa* (நறுவரி शेलु) well ground is contraceptive.

26. Rasanjana (மரமஞ்சள்சத்து) taken in cold water along with powdered *Terminalia Chebula* (கடுக்காய் हरीतकी) and *Emblica Officinale* (நெல்லிக்காய் आमलकी) prevents conception.

From: ANANGARANGA BY KALYANAMALLA (PUBLISHED BY MEHARCHAND LAKSHMAN DAS, SAITH MITTA BAZAAR, LAHORE) PAGE 31.

27. *Plumbago Zeylanica* (கொடுவேலி चित्रक) boiled in husk water and taken at the close of menses time makes woman barren.

28. Half a *pala* of the seeds of *Butea Frondosa* (புரசு रक्षो भूरुह) taken with rice wash for seven days from the first day of mensturation makes a fertile woman barren.

(*From*: KAMAVIJNAN — HINDI BOOK – Chandraberi Publication by Kranti Prakarsam, Varanasi)

29. The nice powder of rinds of *pista* (பிஸ்தா) and *Scindapsus Officinale* (யானைத் திப்பிலி गज पिप्पली) taken everyday in half tola weight, is a successful contraceptive.

30. One *masha* weight of each of the following, taken with cold water for three days after the third day of menses every month, prevents conception for one year.

Piper Longum	திப்பிலி	पिप्पली
Embellia Ribes	வாயுவிளங்கம்	विडंकम्
Borax	வெண்காரம்	टंकणम्

31. Ashes of *Butea Frondosa* (புரசு पलाश) taken along with *Ferula Asafoetida* (பெருங்காயம் हिंगु) prevent conception.

32. The solution of one *masha* of Alum (படிக்காரம் स्फाटिकी) in $\frac{1}{8}$ seer of water infused into Vagina is contraceptive.

33. Solution of one *tola* of old jaggery (பழம் வெல்லம் पुराण गुड) taken for seventeen days from the date of menses prevents conception.

34. The decoction made of root of *Gossypium Indicum* (பருத்தி कार्पास) with water is contraceptive.

35. Application of cotton, soaked in the oil of *Azadirachta Indica* (வேம்பு निम्ब) to the vagina prevents conception.

OUR NEWS-REEL

On the 10th April 1967, the members of the staff of the Literary (Medical) Research Unit celebrated for the first time Tirumular Day and opened a portrait of the Siddha saint, Tirumular. The function was held in the premises of the Sarasvati Mahal Library.

Thiru M. S. Sarangapani Mudaliar, Commissioner of Hindu Religious and Charitable Endowments Board presided on the occasion. Thiru V. Balaramiah, Chief Presidency Magistrate opened the portrait of Tirumular after an eloquent speech on the ancient and infallible nature of the Siddha medical system, exhorting the Government to render all possible help to the institutions working for the publication of the rare works on the subject. Dr. K. S. Uttamarayan, Retired Siddha Professor delivered his special address for the occasion on the medical works of Tirumular. Thiru V. S. Venkatasubramania Sastrigal, Senior Research Officer and Dr. A. Shanmugavelan, Siddha Research Officer of the Literary Research Unit and Thiru V. Gopala Iyengar, Librarian, Sarasvati Mahal Library participated in the function, delivering short and spicy speeches appropriate for the occasion. Thiru O. A Narayanaswami Iyer, Honorary Secretary of the Research Unit welcomed the guests in the beginning and thanked them in the end.

On 20—5—1967, a sweet and small function was organised by the Literary Research Unit to felicitate Dr. K. S. Uttamarayan, H. P. I. H., on his appointment as Principal of the College of Indian Medicine at Palayamkottai. Thiru V. S. Venkatasubramania Sastri presided. Dr. A. Shanmugavelan, Siddha Research Officer, Thiru C. Rajarajeswara Sarma, Junior Ayurveda Research Officer, Thiru N. V. Venkatasubramania Sastri, Sanskrit Calligrapher and Thiru M. Seeralan, Assistant Librarian of the Literary Research Unit and Thiru V. Gopala Iyengar, Librarian, Sarasvati Mahal Library, besides the president of the function, made eulogistic speeches offering a chorus of praise to Dr. Uttamarayan on his great service to the cause of Siddha Medicine in general and thanking him for his guidance and help to the Literary Research Unit in particular. The one point that was conspicious in every eulogistic speech was that Dr. Uttamarayan's devotion to the cause of Siddha System was not irreconcilable with his regard for Ayurveda. The chief guest of the evening replied suitably acknowledging the eulogies only as the good wishes and blessings of the speakers and promising to dedicate himself with greater vigour to the cause of Indian Medicine, in his new capacity as Principal. After the meeting Dr. Uttamarayan was entertained at Tea.

The Post-Graduate Education and Research Assessment Commitee of the Gujarat Ayurveda University visited the Research Unit of the Central Council of Ayurvedic Research at Sarasvati Mahal on 16th September 1967. The Committee consisted of Sri V. I. Thacker, Vice-Chancellor of the Ayurvedic University, Sri M. P. Vyas,

Chairman of the Siddha Ayurvedic Council and Ex-Minister of Health of Gujarat State, Dr. P. M. Mehta, Member of the Institute for Ayurvedic Studies and Research at Jamnagar and Sri V. N. Dvivedi, Director of I. A. S. R., Jamnagar and Sri D. M. Joshi, the Registrar of Gujarat Ayurvedic University. After being cordially welcomed by the Senior Research Officer, Thiru V. S. Venkatasubramania Sastri, the party of guests posed for a group photograph with the staff of the Research Unit. They examined in detail the Unit's Work of Research and expressed complete satisfaction at the progress of the work made in the Unit.

A tea was arranged in honour of the distinguished guests. Thiru V Gopala Iyengar, Librarian, Sarasvati Mahal welcomed the guests in an eloquent and fitting manner. Responding to the welcome Sri M. P. Vyas gave a very illuminating talk stressing on the comprehensive range and infallible nature of Ayurveda which is a Sastra and is based on eternal basic principles, as compared with modern medical systems which are but science and are based on the varying results of observation. He said that the hundreds and thousands of manuscripts on Indian medicine, if published will form a great boon to the modern world in which more than 50 % of the people are said to be suffering from some incurable disease or other. The refrain of his exhortation lay in calling forth, the votaries of the Ayurvedic and Siddha systems to work in unison and harmony with each other, as the two systems are complementary and not contradictory forming two different phases of the same Sastra.

After tea, the committee visited the Sarasvati Mahal Library and spent a considerable time examining, with admiration and wonder, the various treasures of knowledge preserved in this great Temple of Learning.

The annual celebration of Rajah Serfoji Day came off on 24th September 1967. The function started with a commemoration worship to Lord Vignesvara installed in the Library premises. The Rajah's portrait was profusely garlanded and adorned and the members of the staff of the Library and the Literary Research Unit assembled in front of the portrait and paid homage to the great scholar king who has bequeathed to humanity his Kingdom of Letters, the Sarasvati Mahal, which is hailed as the eighth wonder of the world.

On 23—10—67 the All India Radio, Tiruchirapalli broadcast at 9-30 P. M. through its Trichi, Coimbatore and Tirunelveli transmitting stations, a documentary feature on the Sarasvati Mahal. Lasting for about an hour, the feature had a wide coverage including in its scope the constitutional and the Administrative details, the historical and the cultural background, the preservative and the propogative techniques, the hidden treasures of Literature, Science and Art and the present equipments and the future needs of this great treasure of learning. Composed in the form of personal interviews with the persons at the helm, the feature gave a thorough description of the activities of the departments of several languages and our medical wing, the Literary Research Unit.

Illustrated with occasional readings from our palm leaves and variegated with musical renderings of songs and dance-pieces from our manuscripts, the feature produced almost an actual vision of the Library before the listener's mental eye. We thank the authorities of the All India Radio for having carried our Library over the air and we congratulate Thiru R P. Rangan on his preparing and editing this documentary feature. We are glad to learn that the feature is to be broadcast again at 6-15 P M. on 11—11—67 for the benefit of those who have missed the first broadcast.

As usual a large number of tourists, scholars and other distinguished persons from all over India and from abroad visited the Library during recent months, some for pleasure, but many for profit. Extracts from their observations about the Library will be published under the usual heading, " From our Visitors' Book " in some subsequent issue. Two visits however, deserve special mention here. The one is that of the King and Queen of Sikkim with their party and the other that of the Prince of Arcot.

On 31—8—67 their Highnesses, the Chogyal and the Gyalmo of Sikkim visited the Library in the course of their Indian tour. They were received with *Purnakumbha* and garlanded. The royal couple showed a very keen interest in the various manuscripts collected in the Library and were particularly attracted by the miniature paintings especially of the Ramayana. Some of the unique publications of the Library were presented to His Highness the Chogyal and he reciprocated the gift bv presenting the Library with a copy of profusely illustrated volume RGYAN-DRUG MCHOG-GNYSIS published by the Namgyal Institute of Tibetology, Gangtok, Sikkim.

On 4—9—1967 His Highness, the Prince of Arcot visited the Library and the Literary Research Unit and saw, with profound admiration, the wonderful collection of manuscripts and books on all conceivable subjects, the care with which they are preserved and the useful work that is being done here. His Highness and his party took a special interest in the Urdu and Persian manuscripts in the Library Srimanth Ry. Thulajendra Rajah Saheb, Life Member of the Administrative Committee of the Library entertained the party at Tea. The Prince of Arcot expressed great pleasure at the welcome offered to him and realled the close association between the royal houses of Thanjavur and Arcot in the History of Tanjore in the earlier centuries.